

கல்கி
KALKI
.8.1961
30



லூப்ரிகேஷனிலிருந்து அனுமானம் பெறுங்கள்....

சரியான இயந்திரத்துக்கு, சரியான அளவில், சரியான லூப்ரிகண்டை நீங்கள் உபயோகிக்காமலிருக்க ஏதுக்கள் உண்டு. விலை உயர்ந்த ஸெ பாகங்களை நீங்கள் புதிதாக மாற்றி, அதைச் சகஜமான பராமரிப்புச் செலவாகத் தள்ளுபடி செய்யக்கூடும். உண்மை இவ்வாறில்லை—அது லூப்ரிகேஷன் முறைகளிலுள்ள பிழைகளின் விளைவேயாகும்.

இயந்திரம் வேலையிலிருந்து நீக்கப்படுவதால் உற்பத்தி, காலம், பணம் எல்லாம் நஷ்டமாகின்றன. எனவே விலை உயர்ந்த இயந்திரங்களைக் காக்கவும், திறமையாக இயக்கவும் உத்தரவாதம் பெறுவதற்குச் சரியான முறையில் லூப்ரிகேஷன் செய்வது அத்தியாவசியமாகும். குறைவான செலவில் உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டு லூப்ரிகேஷன் செய்வது இன்றியமையாததாகும்.

நேருங்கள், உடனே சேவை அளிக்கிறோம்—உங்கள் கால்டெக்ஸ் என்ஜினியரை வரவழையுங்கள்—உங்கள் நிறுவனத்துக்கான, சரியான லூப்ரிகேஷன் நிகழ்ச்சி நிரலைத் தயார்செய்து கொள்ளுங்கள். இயந்திர பாகங்களையும், பணத்தையும் பராமரிப்பதில் உங்களுக்கு உதவுகிறோம்.



Company executives can obtain a free copy of this booklet by writing on their official letterhead to their nearest Caltex office.

CALTEX

PLANNED LUBRICATION—A VITAL FACTOR IN COST CONTROL

CALTEX (INDIA) LIMITED Bombay · New Delhi · Calcutta · Madras



எனது காபி ருசி மிக்கது



விலை மலிவானது



மற்றும் கெட்டியான டிகாக்ஷன் அளிக்கவல்லது



ஏனெனில் நான் உபயோகிப்பது ரோபஸ்டா காபி

களைப்பின்றியும் குதூகலமாகவும் இருக்க நீங்கள் அருந்த வேண்டியது

ரோபஸ்டா காபி


காபி போர்டு • பெங்களூர்-9

CB-926

பிலவ, ஆடி 29 — கல்கி — ஆகஸ்டு 13, 1961

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



ஆடம்பரப் பொருளாகக் கருதப்படினும், அரசன் முதல் ஆண்டிவரை புகையிலையை ஏதேனுமொரு விதத்தில் உட்கொள்ளாதவர்களே இல்லை. இந்தியாவிலும் சுவி, பொடியோ, புகையிலையோ போடும் பழக்கத்தைவிட புகைபிடிக்கும் பழக்கமே மக்களை மேன்மேலும் கவர்ந்துள்ளது. இதன் பயனாக ஆண்டுதோறும் 3200 கோடி சிகரெட்டுகளுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டு வருகிறதென இன்று உத்தேசக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

புகையிலையின் வரலாறு... 8



பம்பாய்—57.

பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பாரதத்தில் இத்தகைய
தேசிய ஸ்தாபனங்களில்
மிகப் பெரியது

GT 708 TM

Greens' Advtg.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 2

எண்ணமும் எச்சரிக்கையும்

நாட்டு மக்களுக்குப் பெரும் கவலை அளித்து வரும் முக்கியமான பிரச்னை சம்பந்தமாக, சென்னையில் கூடிய சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் குழுவினர் ஓர் அரிய யோசனையைச் சமர்ப்பித்துள்ளனர்.

வெள்ளைக்காரர்கள் போகும்போது, நாட்டைப் பிரித்துப் பாகிஸ்தானை ஏற்படுத்திக் கொடுத்து விட்டுப் போனாலும், பாகிஸ்தான் போக எஞ்சிய பாரதம், ஐக்கிய பாரதமாக இருந்தது. பின்னர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காங்கிரஸ் நாட்டை மொழி வழி மாகாண மாகப் பிரித்து மூலைக்கு மூலை பலவிதத்தில் பிரிவினைச் சக்தியை வளர்த்து விட்டிருக்கிறது. நாட்டின் எல்லா இடங்களிலும் சகோதரர்களாக இருந்தவர்கள் மிருகப் பிராயத்துக்குத் தாழ்ந்து சண்டை போட்டுக் கொள்கிறார்கள். மொழிவழி மாகாணம் விபரீதமாக விளையும் என்றும் காட்டுமிராண்டித்தனமாக முடியும் என்றும் ராஜாஜி எவ்வளவோ முன்னதாக எடுத்துச் சொன்னார். மாகாணப் பிரிவினை யாதாவது வெளியான போதும், 'இவ் விஷயத்தை இப்பொழுது எடுத்துக் கொள்ள வேண்டாம், பத்து வருட காலங்களுக்குக் குளிர்ப்பெட்டியில் பதனப்படுத்தி வையுங்கள்' என்று யோசனையும் கூறினார். காங்கிரஸ் சர்க்கார் கேட்கவில்லை. மாகாணம் சிறிதாகி விட்டால், தாங்கள் நிரந்தரமாகச் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளலாம் என்பதால் மாகாணப் பிரிவினை யோசனையைக் காங்கிரஸ்காரர்கள் வற்புறுத்தினார்கள். பிரதமர் நேரு, நாட்டின் நிரந்தர நலனுக்கு யோசனை சொல்லக் கூடியவர்களின் வாக்கைப் புறக்கணித்து விட்டுத் தமக்கு 'ஆமாம் சாமி' போடுபவர்களின் யோசனையை மேற்கொண்டதன் விளைவாக, அஸ்ஸாமில், அண்ணன் தம்பிபோல் அந்நியோந்யமாக இருந்து வந்த அஸ்ஸாமியரும் வங்காளிகளும் இப்பொழுது மூர்த்தண்யமாகச் சண்டை பிடித்துக் கொண்டு நிற்கிறார்கள்.

பஞ்சாபில் சீக்கியர்கள், 'பஞ்சாபி சூபா பிரித்துக் கொடு' என்று கேட்டுத் தீவிரமான கிளர்ச்சிக்கு உடன்பட்டு நிற்கிறார்கள்.

மகாராஷ்டிரத்தில், மராட்டி பேசும் விதர்ப்ப மக்களும், நாகபுரியிலும் அதனைச் சுற்றிலுமுள்ள பிரதேசத்திலுமுள்ளவர்களும், 'எங்களுக்குத் தனி ராஜ்யம் வேண்டும்' என்று துடிக்கிறார்கள்.

இப்படி எங்கும் பிரிவினைக் கோஷம் கிளம்புவதைக் கண்டு, பிரதமர் என்ன செய்வது என்று தெரியாமல் இவ்விஷயம் சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்த ராஜ்ய முதன் மந்திரிகளைக் கூப்பிட்டிருக்கிறார்.

இவர்களிடமிருந்து என்ன உருப்படியான யோசனை கிடைக்க முடியும்? இன்னும் நாலைந்து மாதங்களில் வரவிருக்கும் தேர்தலைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் காங்கிரஸ் முதன் மந்திரிகள், இன்னும் இரண்டு ராஜ்யங்கள் ஏற்படுத்தினால் காங்கிரஸுக்குச் செல்வாக்கு மிகும் என்ற யோசனையைத்தான் வெளியிடுவார்கள்.

ஆக, தேச நலனைவிட, கட்சி நலனில் அக்கறை போய்க் கொண்டிருக்கும் நிலையில் பிரதமர் நேரு முதன் மந்திரிகளைக் கூப்பிட்டு யோசனை கேட்பதனால் என்ன பயன் ஏற்பட்டுவிடப் போகிறது?

தென்னாட்டிலே பெய்த மழை காரணமாகக் கேரளம், தமிழ் நாடு, மைசூர், ஆந்திரம் நான்கு ராஜ்யங்களுமே பாதிக்கப்பட்டன. இன்று தமிழ் நாட்டுக் காங்கிரஸுக்கு எதிர்க் கட்சியாக விளங்கும் தி. மு. க.வின் தலைவர் திரு அண்ணாதுரை, சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற மகாநாட்டின் போது கேரளத்தில் வெள்ளத்தினால் அவதிப்

படுவோருக்கு ரூபாய் ஐந்நூறு அனுப்பு வதாக லட்சக்கணக்கான மக்கள் கூடி யிருந்த சபையில் அறிவித்தார். மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

தி. மு. க. பிரமுகரும் நடிகருமான திரு எம். ஜி. ராமசந்திரன் அவர்கள், கேரளம், மைசூர், தமிழ் நாடு ஆகிய மூன்று ராஜ்ய மக்களின் கஷ்ட நிவாரண நிதிக்கும் மனமுவந்து பணம் அளித் திருக்கிறார்.

நேற்றுவரை சகோதரர்களாகப் பழகி வந்த மக்களிடையே, காங்கிரஸ் தனது தவறான கொள்கை காரணமாகவும் நிர்வாகம் காரணமாகவும் துவேஷத்தை வளர்த்து வந்திருக்கிறது. அதற்கு மாறாக அண்டை நாட்டு மக்களின் அன்பைப் பெறும் வகையில் ஒரு கட்சி ஒரு காரியம் செய்தால் காங்கிரஸ்காரர்கள் எள்ளி நகையாடுகிறார்கள்.

பிரதமர் நேருஜிக்கு உண்மையான அக் கறையிருக்குமானால், இந்தப் பிரச்னையை காங்கிரஸ் கட்சியினாலும், தனது ராஜ்ய மந்திரி சகாக்களாலும் தீர்க்க முடியும் என்ற பகற் கனவை விட்டு, சுதந்திரக் கட்சியின் குரலைக் கேட்க வேண்டும். சுதந்திரக் கட்சியின் குரல் இதுதான்:

> நாடு பிளந்துவிடக் கூடாது என்று கருதும் ஒவ்வொருவரும் மீண்டும் தீர்க்கமாகப் புனராலோசனை செய்ய வேண்டும் என்பதையே இன்று நாடு முழுவதிலும் இன்று நிலவும் கவலைக் கிடமான நிலை வற்புறுத்துகிறது. ஆகவே, 'தேசிய ஐக்கியம்' என்னும் இவ்விஷயத்தைக் கட்சி அரசியல் விஷய மாகக் கொள்ளக் கூடாது. இது ஒரு பொதுப் பிரச்னை. கட்சிச் சார்புக்கு அப்பாற்பட்ட பிரச்னை. ஆகவே, தேச ஐக்கியத்துக்கு, சர்வ கட்சி சம்மதம் பெற்ற உருப்படியானதொரு திட்டம் வகுக்க வேண்டும்.


சுதந்திரக் கட்சி மற்றோர் முக்கியமான எச்சரிக்கையும் பொது மக்களுக்குச் செய் துள்ளது.

காங்கிரஸ், தன் தவறுகளையே தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தான் நாட்டில் நிரந்தரமாக ஏற்படுத்த நினைக்கும் பெரும் ஆபத்தை மூடி மறைக்கப் பார்க்கிறது.

காங்கிரஸ், தான் வகுத்துக் கொண் டுள்ள சோஷலிஸத் திட்டத்தின் மூலம் தேசத்தின் நிர்வாகத்தை பர்மிட் லைசென்ஸ் ஆட்சியாக மாற்றி விட்டது. தங்களுக்கு வேண்டிய ஒரு சிலருக்குச் சலுகைகள் காட்டிக்கொண்டு மற்ற மக்களின் எல்லா அலுவல்களிலும் அர சாங்க அதிகாரிகளின் அதிகாரத்தைப் புகுத்துவது என்று தீர்மானித்துள்ளது. விவசாயம், வர்த்தகம், உற்பத்தித் தொழில் இவற்றில் ஈடுபட்டிருப்பவர்கள் அரசாங்க அதிகாரிகளுக்கும் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களுக்கும் கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்பதே திட்டம். இதைப் போன்ற ஆபத்தான நிலை வேறு கிடையாது. இத்தகைய ஆட்சியில் மனி தர்கள் விலங்குகளை விடக் கேடு கெட்ட வர்கள் ஆக்கப்படுவார்கள்.

காங்கிரஸ், இப்பொழுது புதுப் பூச் சாண்டி காட்டத் தொடங்கி யிருக் கிறது. தான் பதவியில் இருந்தால்தான் தேச முழுவதிலும் ஒரு கட்சியாக நின்று நாட்டை ஒற்றுமைப்படுத்தி வைத்துக் கொள்ள முடியும், சாதிச் சண்டைகள் தோன்றாமல் பார்த்துக் கொள்ளமுடியும் என்று சொல்லி வோட்டுக் கேட்கத் தொடங்கியிருக்கிறது. இதைக் கேட்டு, ஏமாந்து, காங்கிரஸின் சோஷலிஸ விஷப் பூண்டு வளர்வதற்கு இடந்தரக் கூடாது என்று சுதந்திரக் கட்சி, மக்களுக்கு எச்சரிக்கை செய்கிறது.

இருபதாண்டு நிறைவு விழா



கல்கி காரியாலயம் ஓர் அலுவலகம் அல்ல, ஒரு குடும்பம் என்று ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். கல்கி குடும்பத்தினர் கல்கி பத்திரிகையின் இருபதாண்டு நிறைவு விழாவைச் சென்ற வியாழக் கிழமை 3-ந் தேதி மாலை கல்கி காரியாலயத் தோட்டத்தில் தேநீர் விருந்துடன் வெகு கோலாகலமாகக் கொண்டாடினர்.


தேச நலனுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள இப்பத்திரிகைக்கும் அதன் குழுவினருக்கும் நல்வழிகாட்டி அழைத்துச் செல்லும் ஆசானாக விளங்கும் ராஜாஜி அவர்கள் அனைவருக்கும் ஆசி நல்கினார்.

கல்கி தொடங்கப்பட்ட போது, யுத்தம் நடந்து கொண்டிருந்தது. புதிய அச்சு யந்திரங்கள் மேனாட்டிலிருந்து இறக்குமதி செய்வது முடியாத காரியமாக இருந்த காலம். அச்சமயத்தில் புதுப்பிக்கப்பட்ட ஒரு பழைய இயந்திரத்தை இங்கிலாந்திலிருந்து வரவழைக்க மதராஸ் லா ஜர்னல் பிரஸ் அதிபர் திரு நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் யோசனை கூறிப் பேருதவி செய்தார்கள். அப்பெரியாரது கை பட்டதெல்லாம் பொன்னாகும் என்பார்கள். இன்று கல்கி ஸ்தாபனம் அதற்குச் சான்றாக உள்ளது. அன்னாரின் நினைவுக்கு அஞ்சலி செய்யும்வகையில் அவர் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது. ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள், அப்படத்தைத் திறந்து வைத்து, கல்கி பத்திரிகை மேலும் மேலும் பல்கிப் பெருகித் தழைக்க வேண்டும் என்று நல்லாசி கூறினார். நாராயணசுவாமி அய்யர் அவர்களின் புதல்வர் கலைமகள் நா. ராமரத்னம் அவர்களுக்கு ராஜாஜி பட்டாடை போர்த்தி ஆசி கூறினார்.

கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி தமது வாழ்நாளில் தமிழ் முனிவர் திரு வி. க. அவர்களைப் பெரிதும் மதித்துப் போற்றி வந்தார். கல்கி என்ற புனைபெயரைத் தாம் சூட்டிக் கொள்ள நேர்ந்ததே, தமது குருவாகக் கருதிய திரு வி. கலியாணசுந்தர முதலியாரது பெயரிலிருந்து முதல் இரண்டெழுத்துக்களையும், தமது பெயரிலிருந்து முதல் எழுத்தையும் எடுத்துக் கொண்டதனால்தான் என்று கல்கி அவர்களே கூறியுள்ளார்கள். என்றாலும், 'உலகில் தர்மம் குறைந்து அதர்மம் தலைதூக்கும்போது கல்கி அவதாரம் ஏற்படும் எனப் பெரியோர்கள் சொல்வார்கள்; அதற்கேற்ப தர்மத்தை எடுத்துச் சொல்லவே ஏற்பட்டது கல்கி என்ற பெயரும் பத்திரிகையும்' என ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் கூறியதும் பொருத்தமாகத்தானே உள்ளது? திரு வி. க. அவர்களின் ஞாபகார்த்தமாக எழுப்பப்படும் மணி மண்டபத்துக்குக் கல்கி அதிபர் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் ரூபாய் ஐயாயிரம் நன்கொடையாக, நிதிக் குழுச் செயலாளர் ஸ்ரீ சச்சிதானந்தம் பிள்ளை அவர்களிடம் வழங்கினார்.

திரு வி. க. அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அவரிடமே அனுமதி பெற்று திரு வி. க. மணிமண்டபம் எழுப்பத் தீர்மானிக்கப்பட்டது. கல்கி அவர்கள் தொடக்கி வைத்த இப்பணி விரைவில் பூர்த்தியாகி விடும் நிலையில் உள்ளது. கல்யாண மண்டபமாகத் திகழப் போகும் இது குறைந்த வருவாயுள்ள மக்களுக்கும் பேருபகாரமாய் விளங்கும்.

ஸ்ரீமதி சித்தேசுவரிதேவி பஜன் பாடல் ஒன்றைப் பாடினார். ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் ''முடி ஒன்றி' என்று தொடங்கும் ஆழ்வார் பாடலைப் பாட இருபதாண்டு நிறைவு விழா இனிது முடிந்தது.



என்ன சேதி?

தவறான யோசனை

மதுவிலக்குச் சட்டத்தைச் சிலர் மீறுகிறார்கள் என்பதற்காக மதுவிலக்குச் சட்டத்தையே ரத்து செய்துவிட முடியுமா? திருடர்கள் சிலர் இருக்கிறார்கள் என்பதற்காக, திருடுவது குற்றம் என்னும் சட்டத்தை அமுலாக்காமல் இருந்துவிட முடியுமா? இப்படிப்பட்ட ஓர் அசட்டுக் காரியத்தைத்தான் தேர்தல் கமிஷன் செய்யலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறதாம்!

தேர்தலின்போது அபேட்சகர்கள் இவ்வளவுதான் செலவழிக்கலாம் என்பதாகச் சட்டமுள்ளது. இதற்குத் தேர்தல் கமிஷனிடம் கணக்கு ஒப்பிக்க வேண்டும். அளவுக்கு அதிகமாகச் செலவழித்துவிட்டுப் பொய்க் கணக்குத் தருகிறார்கள்; அதனால் இப்படிக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையையே விட்டுவிடலாம் என்று தேர்தல் கமிஷனுக்கு யோசனை கூறியிருக்கிறார்களாம் சில அரசியல் தலைவர்கள். அரசியல் தலைவர்களின் இஷ்டத்துக்குத்தான் தேர்தல் நடக்க வேண்டுமென்றால் தேர்தல் கமிஷன் என ஒன்று தேவையே இல்லையே?

கட்டுப்பாடுகளை இளக்கிவிட்டால் தேர்தலில் தற்போதுள்ள கொஞ்சநஞ்ச நேர்மையும் இல்லாது போய் அது வெறும் பித்தலாட்டமயமாகி விடும்.

தூதரின் எச்சரிக்கை

இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ள அமெரிக்கத் தூதர் கால்பிரெய்த் அரசியல் நிபுணரல்ல. பொருளாதார வல்லுனர். பொருளாதார முன்னேற்றத்தில் முனைந்து நிற்கும் நம் நாட்டுக்கு உதவ முன் வந்துள்ள அமெரிக்கா பொருளாதார நிபுணரை இங்கு அனுப்பி வைத்தது ரொம்பப் பொருத்தம்தான். ஆனால் அவர் கூறுவதைப் பொருட்படுத்தாமல் இருந்தோமானால் பொறுப்பில்லாமல் நடந்துகொண்டவர்கள் ஆவோம்.

"வெளி நாடுகளுக்குப் பொருள்களை அனுப்பி, அவற்றின் மூலம் வெளி நாட்டுச் செலாவணிப் பணம் சம்பாதிப்பதற்குப் பதிலாக, அங்கிருந்து கடன் வாங்குவது வழக்கமாகி விடக்கூடாது. இந்தியாவுக்குப் பொருத்தமற்ற தொழில் நுட்ப முறைகளை ஏற்கக் கூடாது. உதாரணமாக ஆள் பலத்தைக் குறைவாகப் பயன்படுத்துவது போன்ற முறைகளால், அரிதாயுள்ள வசதிகள் வீணாகி வேலையின்மைப் பிரச்னை கடுமையாகும்" என்று கால்பிரெய்த் கல்கத்தாவில் பேசியிருக்கிறார். கண்மூடித்தனமாகக் கடன் வாங்குவது பற்றிப் பேராசிரியர் கால்பிரெய்த் விடுத்த எச்சரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகிவிடக் கூடாது என்று காங்கிரஸ் சர்க்காருக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.



சபாநாயகர் மறைவு

டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் அவர்களின் மறைவு சென்னை நகரப் பொது வாழ்வில் ஏற்பட்ட மகத்தானதொரு நஷ்டமாகும். அவருடைய இனிய புன்னகை தவழும் முகமும், எளிய சுபாவமும் பார்ப்பவரையெல்லாம் ஆட்கொண்டு விடும். தேசபக்தியும் தேசப் பணியும் பரம்பரைச் சொத்தாகப் பெற்றிருந்தார். அவரது தந்தையார் டாக்டர் ராமராவின் அரிய பணியை இன்றும் நம்மில் பலர் நினைவுகூர்ந்து வருவார்கள்.

ஆந்திரகேசரி டி. பிரகாசம்காருவைத் தோல்வியுறச் செய்து வெற்றி கண்டார் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ். ராஜாஜியின் இரண்டாவது மந்திரி சபையில் தொழிலாளர் மந்திரியாக மிகத் திறம்பட வேலை செய்தார். பின்னர் பிரிந்த தமிழ் நாட்டுச் சட்டசபையின் சபாநாயகராகவும் மிகத் திறமையாகப் பணியாற்றினார். அவருடைய மறைவினால் வருந்தும் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பணத்தால் வாங்கக்கூடிய மோட்டார் என்ணெய்களுள் தலைசிறந்தது...
சக்தி விரயமாவதை 50 சதவிகிதம் குறைத்து உதவுகிறது.

புதிய மல்ட்டிக்ரேட்

(சாம்பல் உண்டாகாது!)


சக்தி விரயமாவதை 50 சத விகிதம் குறைத்து உதவுகிறது இப் புதிய என்ணெய். கடந்த பத்தாண்டுக் காலத்திலே எஞ்சின் லூப்ரிகேஷன் எய்திய அதி முக்கியமான முன்னேற்றம் இதுவே என்று நிபுணர்கள் விவரிக்கின்றனர். பல்லாண்டுகளாக ஆராய்ச்சி, ஆய்வுக்கூடங்களிலே விரிவான பரிசோதனைகள், சாலைவழியே 12½ இலட்சம் மைல்கள் வெள்ளோட்டம்........ ...அனைத்திலும் தேறி வந்துள்ளது இப் புதிய ஷெல் X-100 மல்ட்டிக்ரேடு

புதிய மல்ட்டிக்ரேடு உங்கள் காருக்கு வழங்கும் நன்மைகளாவன:
உங்கள் எஞ்சினைச் சுத்தமுடன் வைத்திருக்கிறது இப் புதிய என்ணெய். விளக்கம் கூறின்:


* கிளம்புவதிலே அதிக விரைவு.
* வேகம் ஏற ஏற, கூடுதலான குஷி.
* லிட்டரொன்றுக்கு அதிக கிலோ மீ., ஓட்டம்.
* பாட்டரியின் ஆயுள் பலம் நீடிப்பு.
* எஞ்சின் ஆயுள் பலம் அதிகரிப்பு.
* ஒருமுறை எஞ்சினை அலசிக்கோத்த பின், மறுமுறை அணுகுமுன் அதிககால உழைப்பு.

புதிய ஷெல் X-100 மல்ட்டிக்ரேடு சாம்பல் உண்டாக்காது. பணத்தால் வாங்கக்கூடிய மோட்டார் என்ணெய்களுள் தலைசிறந்தது. ஆரம்பச் செலவு அதிகமானாலும், எஞ்சினுக்கு அபார ஆயுள்பலம், போகப்போக சிக்கனம் அதிகம்.





A




B

[illegible]

உன்னதமான பயன் காண: அடியோடு வடித்து, அழுத்தக் கழுவி, நிரப்பிக்கொள்வீர் புதிய ஷெல் X-100 மல்ட்டிக்ரேடு
—பணத்தால் வாங்கக்கூடிய மோட்டார் என்ணெய்களுள் தலைசிறந்தது
தட்டாமல் தருமே — பிரபல ஷெல் சேவை நிலையம்!

வசீகரத்திற்கான வழிகள்




படிப்படியாக
மேன்மேலும்
உங்களது
இயற்கையான
எழில்அதிகரிக்க...
பளபளப்பான
பொலிவுடன்
விளங்க...
பூப்போன்ற
சருமத்தைப் பெற...
அழகின் உச்சநிலையை
அடைய

ஆப்கன் ஸ்னோ

அழகு சாதனங்கள்

E. S. பட்டன்வாலா, 62, கன்னாட் ரோடு, பம்பாய்-27



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5
தந்தி : 'EVERMANS' போன் : 85834

நான்காவது வெள்ளி (25-8-61) விடுமுறையாயிருப்பதால் இம்மாதம் மட்டும் ஏலம் 24-8-61 வியாழனன்று நடைபெறும்

சேரக் கடைசி தேதி 22-8-1961 ... முதல் ஏலத் தேதி 24-8-1961

25 மாதங்கள்	மாதாந்திர சீட்டுகள் (4-வது வெள்ளிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

டெல்லி கிளை ஆபீஸ்கள்: கான்னாட் ஹவுஸ், 1/24, ஆஸப் அலி ரோடு, புது டில்லி-1 * பாலுஸேரி பில்டிங் 14-A/4, W. E. A. கரோல்பாக், புது டில்லி-5 * 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி, புது டில்லி-3 * பெங்களூர் கிளை ஆபீஸ்: 185, முதல் மாடி, ஆறாவது கிராஸ், காந்தி நகர், பெங்களூர்-9 * பம்பாய் கிளை ஆபீஸ் "[illegible]" 17-A, [illegible] மாதுங்கா, [illegible] (கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்) பம்பாய்-22
கல்கத்தா கிளை ஆபீஸ்: 48, [illegible], கல்கத்தா-29

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

பிறந்தநாள் பரிசு

சிரிக்கச் செய்து சிந்திக்கவும் வைக்கும் சொற்பொழிவுகள், சுதந்திரக் கட்சியின் பிறந்த தினத்தன்று மக்களுக்குப் பரிசுகளாகக் கிடைத்தன. இதோ, தலைவர்களின் பேச்சுக்களிலிருந்து சில ரசமான பகுதிகள் :

ராவணன் சில திட்டங்கள் போட்டதாக எங்கள் ராமாயணத்தில் சொல்லியிருக்கிறது. தன் நாட்டு மக்கள் நேரடியாகச் சொர்க்கத்தையே அடைந்துவிட வேண்டும் என்பதற்காகத் தன் தேசத்திலிருந்து சொர்க்கத்துக்குப் பாலம் அமைக்கத் திட்டம் போட்டான்!

அவனது இன்னுமொரு திட்டம்: தங்கத்துக்கு மணமூட்ட வேண்டும், அதிலும் ரோஜா மணம் வீசச் செய்ய வேண்டும் என்பது. இப்படி அவன் அளவுக்கு மீறிய பேராசையுடன் போட்ட திட்டங்கள்கூட தர்ம நியாயத்துடன் நடந்து கொண்டிருந்தானேயானால் நிறைவேறியிருக்கும். தர்மத்திலிருந்து அவன் வழுவியதும் நடந்தது என்ன? ராவணன் அழிந்தான். இன்றைக்குத் திட்டம் வகுக்கும் காங்கிரஸ் சர்க்காருக்கு இதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்....

ஒருவன் கழுதை ஒன்றை வளர்த்து வந்தான். அண்டை வீட்டுக்காரன் ஒரு நாள் அவனை அணுகி, 'அப்பா! உன் கழுதையைக் கொஞ்சம் இரவல் கொடு. பக்கத்து ஊருக்குப் போய்த் திரும்ப வேண்டும்' என்று கேட்டான். கழுதையின் சொந்தக்காரன் கையை விரித்தான். 'கழுதை இப்போது என்னிடமில்லையே. என் மகளின் புக்ககத்துக்கு அதுவும் போயிருக்கிறது' என்றான். சொல்லி வாய் மூடுவதற்குள் கழுதை கனைக்கும் சத்தம் பக்கத்துச் சுவரருகே யிருந்து எழுந்தது. 'அதோ, கழுதை கனைக்கும் சத்தம் கேட்கிறதே' என்றான் அதனைக் கடன் கேட்க வந்தவன். 'ஏய்! கழுதை இல்லை என்கிறேன். வீண் பிடிவாதம் பண்ணுகிறாயே? என் பேச்சை நம்பாமல் கேவலம் கழுதையின் கனைப்புக்கா மதிப்புத் தரப் போகிறாய்?' என்றான் கழுதையின் எஜமானன்.

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டது என்கிறார்கள் ஆளும் கட்சியினர். அப்படி ஒன்றும் உயர்ந்திருப்பதாய்க் காணோமே என்று யாரேனும் சந்தேகப்பட்டால் அவர்கள் வாயை அடக்கி, 'நாங்கள் சொல்கிறோம். நம்புங்கள்!' என்கிறார்கள்!

—ஸ்ரீ கே. எம். முன்ஷி

கம்யூனிஸத்துக்கும் காங்கிரசின் சோஷலிஸத்துக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். சோஷலிஸத்தை அடையப் பலாத்காரத்தைப் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும் என்று ஒளிவு மறைவில்லாமல் ஒப்புக் கொள்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். காங்கிரஸ்காரர்களோ பலாத்காரமின்றியே சோஷலிஸத்தைக் கொண்டுவருவோமென்கிறார்கள். 'ஆம்லெட்' செய்ய முட்டையை உடைத்துத்தான் ஆகவேண்டும் என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். முட்டையை உடைக்காமலே 'ஆம்லெட்' செய்வதாகச் சொல்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். நடக்கிற காரியமா?

இன்றைக்கு நம் நாட்டைச் சூழ்ந்துள்ள பேராபத்து, 'ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன' என்ற மக்களின் மனப்பான்மைதான். ஒரிஸ்ஸாவில் நடைபெற்ற தேர்தலில் மொத்தமுள்ள வாக்காளர்களில் மூன்றில் ஒரு பகுதியினர்தான் வோட்டுச் சாவடிகளுக்குச் சென்று வோட்டளித்தார்கள். மீதமுள்ளோர் காங்கிரஸ் ஆட்சியிடம் வெறுப்புக் கொண்டிருந்த போதிலும் அதனை வெளிக் காண்பித்துக் கொள்ளும் உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

—ஸ்ரீ எம். ஆர். மஸானி

சர்தார் வல்லபாய் பட்டேல் சுதேச சமஸ்தானங்களை யெல்லாம் இணைத்துப் பாரதத்தை ஐக்கியப்படுத்தினார். இன்றைக்கு நேரு அரசாங்கம் மொழிவாரி மாகாணப் பிரிவினை செய்து பட்டேல் உருவாக்கிய ஐக்கியத்தைக் குலைத்து விட்டது.

சமீபத்தில் பல இடங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்து தலைநகர் திரும்பிய ராஜன் பாபு, சென்ற இடங்களிலெல்லாம் காங்கிரஸ் சர்க்காரின் நிர்வாகத்திலுள்ள திறமைக் குறைவு, லஞ்ச ஊழல் சலுகைகள் இவை பற்றிய குற்றச்சாட்டுகளைத் தாம் கேட்க நேர்ந்தது என்று மனம் நொந்து கூறியுள்ளார்.

சிங்களவருக்கும் முன்பாகவே அங்கு சென்று குடியேறிய தமிழர்களிடம் இலங்கை சர்க்காரை அடிவுடனும் கண்யமாகவும் நடந்து கொள்ளச் செய்ய முடியா விட்டாலும் மனிதத் தன்மையேனும் காட்டுமாறு செய்யக்கூட இயலாத இந்தக் காங்கிரஸ் அரசாங்கத்தார் அயல் நாடுகளில் நமது செல்வாக்கு உயர்ந்து விட்டதாக நாக்கூசாமல் பறை சாற்றுகிறார்கள்.

—ஸ்ரீ என். ஜீ. ரங்கா

ஒரு புலவரின் வாழ்த்து

சொல்லுந் தமிழ்த்துறைகள் அந்தணைக்கும் தொண்டாகி
அல்லும் பகலுமென ஐந்நாலு — நல்லாண்டாய்ப்
பல்கும் புகழ்த்திங்கள் பற்பலவாய்ப் பெற்றுயர்ந்தாய்
கல்கி மிதழ்நீ கனிந்து.

அன்புக்கும்

" அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே !
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே !"

என்று நம் அமரகவி பாரதியார் பாடியிருக்கிறார் அல்லவா ? — அந்த அமர வாக்கை யார் காப்பாற்றினாலும் யார் காப்பாற்றாவிட்டாலும், நாமாவது காப்பாற்றுவோமே என்ற திடசங்கல்பம் போலிருக்கிறது அவர்களுக்கு. இல்லாவிட்டால் ஆற்றங் கரை யோரத்தை ஒட்டினாற்போல் இருக்கும் அந்தப் பள்ளத்தாக்கில் — அடிக்கடி பெருகி வரும் வெள்ளம், நகரத்தை அழகுபடுத்த வேண்டுமென்று தோன்றும் போதெல்லாம் அவர்களுடைய குடிசைகளைப் பிய்த்து எறிந்து, அவர்களைப் பாடாய்ப் படுத்த வரும் நகராண்மைக் கழகத்தார், அடுத்தாற்போல் இருக்கும் சுடுகாட்டில் எரியும் பிணங்களிலிருந்து வரும் துர்நாற்றம், தீப்பொறி — அந்தச் சுடுகாட்டுக்கு எதிர்த்தாற்போல் அமைந்திருக்கும் நாய்களின் கோலாகலத்திலிருந்து கிளம்பும் அலறல், ஓலம் — இவை எதற்கும் அஞ்சாமல் தங்கள் அருமை மனைவிமார், ஆசைக் குழந்தைகள் ஆகியவர்களோடு அவர்கள் தலைமுறை தலைமுறையாக அங்கே வாழ்ந்து வருவார்களா ?

என்ன சொன்னேன், 'வாழ்ந்து வருகிறார்கள்' என்று சொன்னேன்? — இல்லை, அவர்கள் வாழ்ந்து வரவில்லை — தினசரி இறப்பதும் பிறப்பதுமா யிருந்து வருகிறார்கள்— அதிர்ஷ்டசாலிகள் ஐயா, அதிர்ஷ்டசாலிகள் ! நமக்கெல்லாம் வாழ்க்கையில் ஒரே ஒரு முறை சாவு வந்தால், அவர்களுக்குத் தினம் தினமல்லவா வந்துகொண்டிருக்கிறது !

நகரத்தின் அழகையும், நாகரிகத்தையும் அந்த 'திவ்விய கண்டங்கள்' காப்பாற்றாவிட்டால் என்ன, அவற்றைக் காப்பாற்றுவதற்கென்றே வழிவழியாக வந்துகொண்டிருக்கும் சிலருடைய பங்களாக்கள் ஆற்றங்கரையின் மேல் அழகான பூங்காக்களுக்கு நடுவே இருந்தன. அந்தப் பங்களாக்களிலுள்ள குழந்தைகள் தங்களுடைய விளையாட்டுச் சாமான்களுடன் ஆற்றங் கரைக்கு விளையாட வரும் போதெல்லாம் பள்ளத்தாக்கில் உள்ள குழந்தைகளை அதிசயத்துடன் பார்க்கும்; அதே மாதிரி பள்ளத்தாக்கிலுள்ள குழந்தைகளும் பங்களாக்களிலுள்ள குழந்தைகளைப் பார்க்கும்போதெல்லாம் வியப்பே உருவாய்த் தங்களை மறந்து நிற்கும்.

இரண்டும் இரு வேறு உலகங்கள், இரு வேறு துருவங்கள் அல்லவா? — ஒன்றை யொன்று சந்திப்பதே அபூர்வ நிகழ்ச்சிதானே!

***

ஒரு நாள் மாலை ஆயா ஒருத்தி ஓர் ஆண் குழந்தையைத் தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு ஆற்றங்கரைக்கு வந்தாள். அதைப் பார்த்ததும் பள்ளத்தாக்கில் பிறந்த மேனியாய் நின்றுகொண்டிருந்த ஒரு பெண் குழந்தைக்கு — ஆமாம், தன் மானத்தைத் தானே காத்துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கும் வயதை அடையும் வரை அதன் பெற்றோர் அதனுடைய வயிற்றைத் தவிர வேறொன்றையும் கவனிப்பதில்லை ! — என்ன தோன்றிற்றோ என்னவோ, " ச்சச்சு, ஐயோ பாவம் !" என்றது அனுதாபத்துடன்.

இதைக் கேட்டதும் வண்டியில் அமர்ந்திருந்த குழந்தை மட்டுமல்ல: அந்த வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்த ஆயாவும் அதை அதிசயத்துடன் பார்த்தாள்.

" ஏன் பாட்டி ! இவன் நொண்டியா, இவனால் நடக்க முடியாதா ?"

பள்ளத்தாக்குக் குழந்தையின் அசட்டுத்தனமான கேள்வியைக் கேட்டுப் பங்களாக் குழந்தை சிரித்தது.

அதுவே

" ஏன் சிரிக்கிறாய் ?"

" நானா நொண்டி ? இதோ பார் !" என்று வண்டியை விட்டுக் கீழே குதித்து 'டக் டக்' என்று நடந்து காட்டியது அது.

" உன்னால் நடக்க முடியும்போது உனக்கு ஏன் வண்டி ?" என்று கேட்டது இது.

" நடந்தால் கால் வலிக்கும் என்று என் அப்பா எனக்கு வாங்கிக் கொடுத்தார் !" என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டே, வண்டியிலிருந்த ஒரு சிறு சிதார் வாத்தியத்தை எடுத்து 'டொய்ங், 'டொய்ங்' என்று வாசித்துக் காட்டியது அது.

" இது ?" என்று கேட்டது இது.

" இதுவும் என் அப்பா வாங்கிக் கொடுத்ததுதான் !"

" அதுவும் அப்பா வாங்கிக் கொடுத்தார் ; இதுவும் அப்பா வாங்கிக் கொடுத்தார் !"— ஆச்சரியம் தாங்கவில்லை, வெந்த சோற்றைத் தவிர வேறொன்றையும் காணாத குச்சு வீட்டுக் குழந்தைக்கு. அவன் அணிந்திருந்த 'சூட், பூட்' ஆகியவற்றை யெல்லாம் ஒவ்வொன்றாகச் சுட்டிக் காட்டி, 'இது, இது ?' என்று கேட்டுக்கொண்டே இருந்தது. அந்த மச்சு வீட்டுக் குழந்தையோ எல்லாவற்றுக்கும் 'என் அப்பா வாங்கிக் கொடுத்தார், என் அப்பா வாங்கிக் கொடுத்தார் !' என்ற பதிலையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தது.

கடைசியில், " உன்னுடைய அப்பா உனக்கு என்ன வாங்கிக் கொடுத்தார் ?" என்று கேட்டது அது.

" எனக்கா ! வந்து...வந்து..."

மேலே ஒன்றும் சொல்ல முடியவில்லை இதால் ; விழித்தது.

அவன் மறுபடியும் சிரித்தான்.

வெட்கமாகப் போய்விட்டது அவளுக்கு. ஓடினாள் — ஒரு சிட்டிகை ஒசிப் பொடி கொடுக்க எந்தப் புண்ணியவானாவது இந்தப் பக்கம் வர மாட்டானா என்று வழி மேல் விழி வைத்துக் கொண்டிருந்த தாத்தாவிடம்.

'' தாத்தா, தாத்தா ! என் அப்பா எனக்கு என்ன வாங்கிக் கொடுத்தார் ?''

தாத்தாவின் காதில் இது விழவில்லை, அவருடைய கவனமெல்லாம் மூக்குப் பொடியின் மேலேயே இருந்ததால் !

அவரைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கி, '' தாத்தா, தாத்தா ! என் அப்பா எனக்கு என்ன வாங்கிக் கொடுத்தார், தாத்தா ?'' என்று மறுபடியும் கேட்டான் அவன்.

'' உன் தலை !'' என்றார் தாத்தா, மிகுந்த வெறுப்புடன்.

குழந்தைக்கு ஆனந்தம் தாங்கவில்லை; 'குதி, குதி' என்று குதித்துக்கொண்டே ஓடியது அவனிடம்.

'' என் அப்பா எனக்கு என்ன வாங்கிக் கொடுத்தார், தெரியுமா ? என் தலை !''

அவன் மீண்டும் சிரித்தான்.

'' ஏன் சிரிக்கிறாய் ?''

'' உன் தலையை உனக்கு யாராலும் வாங்கிக் கொடுக்க முடியாது !''

இப்படிச் சொல்லி விட்டானே பாவி, என்ன செய்வான் பாவம் ! — மீண்டும் ஓடினான்—'அரைப் படி அரிசி யாராவது' முறைக் கட'னாகக் கொடுக்க மாட்டார்களா, அன்றைய இரவைக் கழித்து விட மாட்டோமா ?' என்ற கவலையோடு கையில் முறத்துடன் வீடு வீடாக நுழைந்து வந்து கொண்டிருந்த அம்மாவிடம்.

ஆதாரம்

'' அம்மா, அம்மா ! அப்பா எனக்கு என்ன வாங்கிக் கொடுத்தார், அம்மா ?''

'' அது என்ன வாங்கிக் கொடுத்தாரோ, எனக்குத் தெரியாது !''

அவன் நிற்கவில்லை; போய்க் கொண்டே இருந்தான்.

'' சொல்லு, அம்மா !''— அவள் முந்தானையைப் பிடித்து இழுத்தது குழந்தை.

'' விளக்கு வைக்கிற நேரமாச்சு ! அப்பா பசியோடு வருவார்; விடு சனியனே, விடு !''

''ஊஹூம், விட மாட்டேன்; சொன்னால்தான் விடுவேன் !''

'' விடப் போகிறாயா, இல்லையா?''—கோபாவேசத்துடன் இரைந்தாள் தாய்.

''போம்மா, சொல்லும்மான்னு !''—கொஞ்சலுடன் கெஞ்சியது சேய்.

'' சொன்னால் கேட்கமாட்டே ? போன்னு போ !'' என்று குழந்தையைப் பிடித்து ஒரு தள்ளுத் தள்ளி, அதன் முதுகில் 'பளார், பளார்' என்று அறைந்தாள் அவள்.

விந்தன்

குச்சு வீட்டுக் குழந்தை 'கோ'வென்று அழுதது.

'' இது உன் அம்மா உனக்கு வாங்கிக் கொடுத்ததா, வாங்காமல் கொடுத்ததா ?'' என்று அதைக் குறும்புடன் கேட்டுவிட்டு, 'கலகல' வென்று நகைத்தது மச்சு வீட்டுக் குழந்தை.



''...வாங்கிக் கொடுத்ததா, வாங்காமல் கொடுத்ததா !''

இந்தச் சமயத்தில் கல் உடைத்த கையைக் கழுவிக் கொண்டு, தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து உதறித் தோளிலே போட்டுக்கொண்டு, அந்த வழியாக வந்த குச்சு வீட்டுக் குழந்தையின் அப்பன், '' என்ன, அம்மா ! ஏன் அழறே?'' என்று கேட்டான், அழுவதற்கு எத்தனையோ காரணங்கள் இருந்தும் ஒரு காரணமும் இல்லாதது போல !

'' போப்பா ! நீ எனக்கு என்ன வாங்கிக் கொடுத்தேன்னு கேட்டால், அம்மா சொல்ல மாட்டேங்குதே !''

'' நானு, உனக்கா ! வந்து...வந்து...''

அவனாலும் அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை; விழித்தான் !

''ஏம்பா, அது உனக்கும் தெரியாதா ?'' என்றது குழந்தை, ஏமாற்றத்துடன்.

'' ஏம்மா தெரியாது ? இதோ, என் அன்பு முத்தம் ! — இதுதான் உனக்கு நான் வாங்கிக் கொடுத்தது, கொடுப்பது, கொடுக்கப் போவது எல்லாம் !'' என்று கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டே, குழந்தையை வாரி எடுத்து முத்தப் போனான் அவன்.

''போப்பா ! முத்தமாம் முத்தம் ; யாருக்கு வேணும், உன் முத்தம் !'' என்று அவனுடைய கைகளை உதறித் தள்ளிவிட்டு, விரைத்துக்கொண்டு நின்றது குழந்தை.

'' அட, கடவுளே ! அன்புக்கும் ஆதாரம் அதுதானா ?'' என்றான் அவன், வானத்தை நோக்கியபடியே.

'ஆம், ஆம்' என்பதுபோல் தன் தலையை ஆட்டி ஆட்டிச் சிரித்தது மச்சு வீட்டுக் குழந்தை.



"இன்றைக்குச் செய்யக்கூடிய ஒரு காரியத்தை நாளைக்கென்று ஒத்திப் போடாதே; நாளை மறுநாளைக்கே ஒத்திப் போடு!" என்றார் பிரபல நாவிவுட் நகைச்சுவை நடிகர் பாப் ஹோப்.

இந்த நகைச்சுவையை நிஜமாகவே எடுத்துக் கொண்டு விட்டார்கள் போலிருக்கிறது, காங்கிரஸ் அரசாங்கத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள். நகைப்புக்கிடமான விஷயம்தான்!

சென்ற முறை வெள்ளம் வந்தபோது உடைப்பெடுத்துக் கொண்ட இடங்கள் இம்முறை வெள்ளம் வரும் வரையிலும் செப்பனிடப்படாமலே இருந்த அழகை திரு அனகேசன் அவர்கள் அழாத குறையாக எடுத்துக் காட்டினார்.

ராஜஸ்தானில் தபாலில் சேர்க்கப்பட்ட ஒரு 'கார்டு' விலாசம் சரியாக எழுதப்பட்டிருந்தும்கூடத் தமக்குச் சென்னையில் ஐந்து வருஷங்களுக்குப் பின் கிடைத்த விவரத்தை ஹிந்து பத்திரிகையில் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் எழுதித் தெரிவித்திருந்தார் ஒருவர். கடிதம் எழுதிய போது உயிருடன் இருந்த தகப்பனார், அக்கடிதம் மகனுக்குப் போய்ச் சேருமுன்னர் சொர்க்க லோகத்துக்கே போய்ச் சேர்ந்து விட்டார்!

இதெல்லாம் போகட்டும் என்றால் பள்ளிகள் திறந்து ஒன்றரை மாதமாகியும் இன்னும் எஸ். எஸ். எல். ஸி. தமிழ்ப் பாட புத்தகங்கள் பள்ளிகளுக்கு வந்து சேரவில்லையாம்! புத்தகங்களை வெளியிடச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சரியாக ஒரு வருஷ அவகாசம் இருக்கும் போது, கால தாமதத்துக்குக் காரணம் கூறாமலிருந்திருந்தால் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் கௌரவமாய் இருந்திருக்கும். இதற்குள் தென்னிந்திய உபாத்தியாயர்கள் யூனியன் தலைவர், 'இப்படிக் கால தாமதமாகப் புத்தகங்கள் வெளிவரும் சமயங்களில் பரீட்சைக்குச் சில பாடங்கள் கிடையாது என்று தள்ளுபடி செய்து விடுவது வழக்கம்' என்று ஞாபகமூட்டுவதன் மூலம் காலதாமதமாவது இந்த வருஷம் மட்டுமல்ல, வழக்கமான கதைதான் என்பதையும் உணர்த்துகிறார்!

இதையெல்லாம் பார்த்து விட்டுப் பக்கத்து வீட்டில் வசிக்கும் மாணவனொருவன், புத்தகங்கள் ஒரு வருஷ காலம் தாமதித்து வருவது போலவும் ஆகவே எந்தப் பாடமுமே பரீட்சைக்குக் கிடையாது என்று அறிவிக்கப்படுவது போலவும் கனவு காண்கிறான்!

'கனவு' என்றுதான் பெயரிட்டார்கள் ருஷ்யர்கள் தங்கள் ராக்கெட் ஒன்றுக்கு. அது சந்திரனைச் சென்றடைவது கனவாகிவிட்டதன் காரணங்களை விளக்கிக் கூறினார் கனை மார்க்கப் பிரயாணி யூரி காகரின்.

என்றாலும் கம்யூனிஸ முறையில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்று கனவு காண்பதை நிறுத்தவேமாட்டோமென்கிறார்கள் ருஷ்யர்கள். இன்னும் இருபதாண்டுகளில் ருஷ்ய மக்களுக்கு எல்லாமே இலவசமாகக் கிடைக்குமாம். இருக்க இடம், சாப்பாடு, துணிமணி, வாழ்க்கை வசதிகள் எல்லாமே இலவசமாகும் போது கவலையின்றி நிம்மதியாக இருக்கலாம் என்று யாரேனும் எண்ணினால் அதுவும் வெறும் பகற் கனவாகிப் போகும். ஏனெனில் இவ்வளவு வசதிகளையும் பெற, சாத்தியமில்லாததை சாத்தியம் என்று ஒப்புக் கொள்வதானாலும், ருஷ்ய மக்கள் இப்போதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக உழைக்கத்தான் நேரிடும். அதாவது மக்கள் மாக்களாகி ஏகாதிபத்தியத்தின் அடிமைகளாக வேண்டும். ஆத்மாவை இழந்து அடிமையான பின்னர் எல்லாம் இலவசமாகக் கிடைத்தால் என்ன, கிடைக்கா விட்டால் என்ன?

ருஷ்யாவின் இந்த அடக்குமுறை பற்றி வேடிக்கையான, ஆனால் சிந்திக்க வேண்டிய ஒரு கதை உண்டு. ஸைபீரியாவில் சந்தித்துக் கொண்ட மூன்று கைதிகளிடையே நடந்த சம்பாஷணை பற்றிய கதை அது:

"தொழிற்சாலைக்கு நேரம் கழித்து வந்தேன்; தேசத் துரோகி என்று குற்றம் சாட்டினார்கள்!"

"அப்படியா? நான் தொழிற்சாலைக்குக் குறித்த நேரத்துக்கு முன்னதாகவே வந்து சேர்ந்தேன். உளவு பார்க்க வந்தவன் என்று கூறிக் கைது செய்து இங்கே அனுப்பி வைத்தார்கள்!"

"அடடா! நான் தொழிற் சாலைக்குச் சரியான நேரத்தில் போய்ச் சேர்ந்தேன். தொழிலாளர் சமூகத்துக்கு விரோதியாய் அவர்கள் நலனுக்கு எதிராகச் சதி செய்கிறேன் என்பதற்காகத் தண்டனை விதித்தார்கள்!"

* * * நடிகர் எம்.ஜி. ஆர். வீட்டுக்கு எதிரே மூன்று சினிமா ரசிகர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்களாம். பழைய நடிகர்கள் விலகிக்கொண்டு, புது நடிகர்களுக்கு இடமளிக்க வேண்டும் என்பது போன்ற பல கோரிக்கைகளை வெளியிட்டுள்ளார்கள். சினிமாவைத் தனியார் துறையில் விட்டு வைப்பது ஆபத்து என்கிற முறையில் விஜேபாஜி இட்டக் கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீமன் நாராயணனுக்குக் கடிதம் எழுதி யிருக்கிறார். இந்நிலையில் உண்ணாவிரதம் போன்ற செயல்களில் இறங்கினால் 'மக்களுக்குப் பிடிக்கவில்லை' என்று சாக்ஜாப்பு கூறிச் சர்க்காரே திரைப்படங்களை உருவாக்க ஏதுவாகும். அப்புறம் ரசிகர்கள் திரையைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் தியேட்டரைக் காலி செய்ய வேண்டியதுதான்!

நான் பெருமையுடன் கூறுகிறேன்



...நான் ஒரு க்ளாக்ஸோ குழந்தை. ஆகையால், தாய்ப்பால் அருந்தும் வேறெந்தக் குழந்தையைப்போல நான் ஆரோக்கியமாகவும், வலுவாகவும், திருப்தியாகவும் இருக்கிறேன். ஏனென்றால், க்ளாக்ஸோவில் சிறந்த தாய்ப்பாலிலுள்ள எல்லா நல்ல அம்சங்களும் இருக்கின்றன. இலவசமாக க்ளாக்ஸோ குழந்தைப்புத்தகம் பெற விரும்புவோர், 50 ந. பைசா தபால் வில்லைகளை (தபால் செலவிற்காக) கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள்: க்ளாக்ஸோ, உட்ஸ் ரோடு, மதராஸ்-2

Glaxo



க்ளாக்ஸோ-குழந்தைகளுக்கான மிகச் சரியான பாலுணவு

க்ளாக்ஸோ லாபரெட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.,
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . புதுடில்லி

உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று
போலிகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள் • முத்திரையுடன் பாதுகாப்பு அமைக்கப்பட்ட மூடி இருக்கிறதா என்று கவனியுங்கள்.
உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று
முத்திரையுடன் பாதுகாப்பு அமைக்கப்பட்ட மூடி இருக்கிறதா என்று கவனியுங்கள் • போலிகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.
உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று
போலிகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள் • முத்திரையுடன் பாதுகாப்பு அமைக்கப்பட்ட மூடி இருக்கிறதா என்று கவனியுங்கள்.
உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று
முத்திரையுடன் பாதுகாப்பு அமைக்கப்பட்ட மூடி இருக்கிறதா என்று கவனியுங்கள் • போலிகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.




ஒவ்வொரு பிலிப்ஸ் பாட்டிலின் மூடியும் போலிகளை கலக்க முடியாதபடி பாதுகாக்கிறது. இந்த மூடி பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவின் ஒவ்வொரு துளியையும் அசல் என உத்திரவாதம் அளிக்கிறது. [illegible] பொழுது உங்களுக்கு பத்திரமாகவும், [illegible] நிவாரணத்தை உறுதியாக்குகிறது.

பிரசித்தி பெற்ற மில்க் ஆப் மக்னீஷியா [illegible] உபாதைகளையும் தவிர்க்கிறது.

போலிகளை கலக்க முடியாதபடி மூடி அமைக்கப்பட்டிருக்கும் [illegible] பாட்டிலை என்று பாருங்கள். எப்பொழுதும் அசல் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவையே வாங்குங்கள். 2 அவுன்ஸ் 4 அவுன்ஸ் மற்றும் 12 அவுன்ஸ்களில் கிடைக்கிறது.




இரைப்பையில் மிதமிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இன்பமான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று

பிரத்தியேக விநியோகஸ்தர்கள் : டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்.



"உரலுக்கு ஒரு பக்கம் இடி. மத்தளத்துக்கு இரண்டு பக்கங்களிலும் இடி. ஆனால் பஸ் பிரயாணிக்கு எல்லாப் பக்கங்களிலும் இடி."

✿

"குழந்தைக்கு மூன்று சக்கர சைக்கிள் ஒன்று என் மனைவி வாங்கிக்கொண்டு வரச் சொல்லியிருக்கா."

"குழந்தை அதை வீட்டுக்குள்ளேயே விடமாட்டாளே, சார்!"

"அதை வாங்கிக்கொண்டு போகாவிட்டால் அவள் என்னை வீட்டுக்குள்ளேயே விடமாட்டாளே, சார்!"

✿

"என் சங்கீதத்தைப் பற்றி நீங்கள் தப்பு அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள், சார்! நான் குருகுலவாசம் செய்தவன் சார். நான் ரொம்பப் பாடுபட்டிருக்கிறேன். குருவுக்கு வேஷ்டி துவைத்துப் போட்டிருக்கிறேன். அவருடைய மாடு கன்றுகளை மேய்த்து வந்து கட்டியிருக்கிறேன். வீட்டைச் சுத்தப்படுத்தியிருக்கிறேன். இன்னும்...."

"அந்த வேலைக்கெல்லாம் நீங்கள் லாயக்கில்லை என்று எவனய்யா சொன்னது?"

✿

"ஏனப்பா, திரும்பி வந்துட்டே?"

"ஒரு காரியமாப் போனேன். ஒரு சனியன்பிடிச்ச பூனை குறுக்கே வந்தது. சகுனம் சரியாக இல்லை. திரும்பி வந்து விட்டேன்."

—[illegible]

✿

டாக்ஸி டிரைவர்: சார்! நீங்க ஏறுவதற்கு முந்தி ஓர் ஆள் பஸ்ஸில் மாட்டிக்க இருந்தான்.

டாக்ஸியில் போகிறவர்: அப்படியா நீ என்ன செய்தாய்?

டாக்ஸி டிரைவர்: உடனே நான் டாக்ஸியை அந்த ஆள் மேல் ஏற்றி, பஸ் டிரைவர் வாழ்வைக் காப்பாத்திட்டேன்!

டாக்ஸியில் போகிறவர்: ?????....



ஒரு தினசரிப் பத்திரிகை ஆபீஸில் நடந்தது: "சார்! சார்! எடிட்டர் சார்! ஒரு பெரிய ஆபத்து. ஒரு காரும் ஒரு லாரியும் மோதித் தவிடு பொடியாக ஆகிவிட்டது. லாரி ஏற்றிக் கொண்டு வந்த சரக்குகள் துண்டுகள் தூளாக ஆகிவிட்டன. டிரைவரும் க்ளீனரும் தப்பினார்கள். அதே மாதிரி காரை ஓட்டிவரும் மற்ற மூன்று பேர்களும் காயமின்றித் தப்பினார்கள். ஆனால் இதைப் பார்த்துக் கொண்டிருந்த பாதசாரிகள் நான்கு பேர்கள் அதிர்ச்சியில் ஸ்தலத்திலேயே மாண்டார்கள். எப்படி சார், நியூஸ்?"

"சரி! இது எப்ப நடந்தது?"

"ஒரு மணிக்கு முன்னால்."

"ஓல்டு நியூஸ். உம், நீ என்னப்பா நியூஸ் சொல்லறே?"

"சார்! இடரென்று நாற்பது பேர்கள் மாண்டார்கள்."

"எப்பொழுது நடந்தது?"

"அரை மணிக்கு முன்னால்."

"ஓல்டு நியூஸ். அடுத்தாற்போல் யாரய்யா அது?"

"சார்! சார்! லேடஸ்டு நியூஸ்."

"உதை, குத்து, அடி!"

"எங்கே?"

"இங்கே!"

"எப்பொழுது?"

"இப்பொழுதே!"

"யாரை? சீக்கிரம் சொல்."

"உங்களைத்தான்!"

✿

அரசியல்வாதி ஒருவருக்குத் தபாலில் ஒரு கவர் வந்தது. அதை உடைத்துப் பார்த்தார். கடிதத்துக்குப் பதில் அதில் தலை முடியைக் கத்தரித்து எவனோ வெகு துாக்கிரமதையாக அனுப்பி இருக்கிறான் என்பதை அவர் உணர்ந்தார்.

"என்னங்க திகைச்சிட்டிருக்கிறீங்க? எவனாவது மொட்டைக் கடிதாசி அனுப்பி விட்டானா?" என்று கேட்டான் அவர் வேலைக்காரன்.

"டேய்! அது மொட்டைக் கடிதம் இல்லைடா! தலை முடி நிறைந்த கடிதம்தாண்டா!" என்றார் அந்த அரசியல்வாதி.

சிரிக்காதே!

அன்பே ஆரமுதே

தி. ஜானகிராமன்



அத்தியாயம் பத்தொன்பது

"குழந்தைக்கு என்ன உடம்பு?" என்று கேட்டார் அனந்தசாமி அந்தக் கிழவரிடம்.

"என்னமோ பாலாதோஷம் என்கிறார்கள்" என்றார் கிழவர்.

"நீங்களே ரொம்ப மாறிப் போய் விட்டீர்களே. அப்ப ஜோரா, கடுக்கனெல்லாம் போட்டுக் கொண்டு, சில்க் சட்டை, குடை, இப்படிப் போவீர்களே!"

"கரெக்டாகச் சொல்கிறீர்களே ..... எனக்கு ஞாபகமே இல்லையே!"

"நான் சொல்கிறது சரியாயிருக்கிறதல்லவா?"

"ம்ம்ம் கடுக்கனாவது மண்ணாவது இப்ப! வயசு என்ன ஆச்சு? இன்னும் ஒரு வருஷம்தான் இருக்கு, ரிடையராக" என்றார் கிழவர்.

அனந்தசாமிக்குச் சற்றுத் திகைப்பாகத்தான் இருந்தது. வயது ஐம்பத்து நாலுதானே? மூப்பு அவருக்குச் சற்று அவசரப்பட்டே வந்து விட்டது போல் தோன்றிற்று.

"எங்கே உத்தியோகம்?"

இடது காதை விரலை வைத்து முன்னுக்கு வளைத்து, "ஆம்!" என்றார் கிழவர். காதும் மந்தம்.

"உத்தியோகம்?"

"சப் ரிஜிஸ்டிராராக இருக்கிறேன், திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலே. நீங்க பார்த்த பொழுது கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தா—அப்புறம் அதை விட்டு விட்டுப் பதிவு இலாக்காவிலே சேர்ந்து பதினைஞ்சு வருஷமாக சப்-ரிஜிஸ்டிராராக இருக்கிறேன். இங்கே ஜாகை வைத்து ஒரு மாசம் ஆகிறது. இன்னும் ஒரு வாரம் இருக்கு லீவு. போகணும் அப்புறம்" என்று கூறிக் கையைப் பிசைந்து கொண்டே மந்தஹாசம் செய்தார் அந்தக் கிழவர்.

இத்தனையும் நிமிர்ந்து அனந்தசாமியைப் பார்த்துப் பேசவில்லை. தரையையோ, சுவரையோ, மடியில் சாய்ந்திருக்கிற குழந்தையையோ பார்த்துக் கொண்டுதான் பேசினார்.

வீடு மிக மிகச் சிறு வீடு. பக்கத்தில் ஓர் அறை. இந்தண்டைப் பக்கம் சமையலறை. நடுவில் அவர்கள் உட்கார்ந்திருந்த இடம். அதுவே மூன்று பேர்கள்கூடத் தாராளமாகப் படுக்க முடியாத கூடம். 'நீ காலைச் சற்று மடக்கிக் கொள். நான் சற்று காலை நீட்டிக் கொள்கிறேன்' என்று உபசாரம் செய்து கொண்டுதான் படுக்க வேண்டும். அதில் பாதியைக் கயிற்றுக்கட்டில் அடைத்துக் கொண்டிருந்தது.

"சார்! என்ன பண்ணிண்டிருக்கிறதாக..."

"வைத்தியம்" என்று கத்தினார் அனந்தசாமி. வரவர அந்த மனிதர் காது படுசெவிடு என்று ஓர் உணர்ச்சி மேலிட்டுக் கொண்டிருந்தது அவருக்கு.

"பேஷ்! பேஷ்! ரொம்ப நல்லதாப் போச்சு. உன்னை என் சம்சாரத்துக்கு டைபாயிட். இப்பத்தான் கொஞ்சம் தேவலை. டொக்கி, டொக்கி" என்று கத்தினார் கிழவர்.

"வரேம்ப்பா" என்று ஒரு குரலோடு டொக்கி வந்தாள்.

"ஏம்ப்பா!" என்று நிலைநடுவில் வந்து, நிலையின் இரண்டு பக்கங்களிலும் கை வைத்து நின்றாள். அனந்தசாமி சற்றுப் பிரமித்தே விட்டார். இந்த அழுக்கு, வியாதி, மூப்பு பொக்கைவாய், செவிடு - இவ்வளவுக்கும் நடுவில் நம்பிக்கை உடல் கொண்டு வந்தாற்போல அந்தப் பெண் வந்து நின்றாள். தகதகவென்று நிறம். இளமை, வரிசையாகப் பல். முகத்தில் அசாதாரணமான குளிர்ச்சி. குளித்து விட்டு வெள்ளைத் துணியால் வேடுகட்டின தலை. அந்தத் தலையில் கூந்தல் பிறுபிறுவென்று சிற்றலையாகப் பூத்துக் கிடந்தது. இடையில் அரக்குப் பட்டுப் பாவாடை. சாண் அகலத்துக்கு ஜரிகை.

மேலே தாவணி. கைக்கு ஒரு நிறமும் உடலுக்கு ஒரு நிறமுமாக ஒரு ரவிக்கை. மெல்லிய சிறு கால்கள். இளஇளவென்று ஒரு மென்மை அந்தப் பாதத்தில்.

''ஏம்பா...?''

''சார், திருஷ்ணாபள்ளியிலே அப்ப படிச்சாராம். நீ அப்ப பிறந்திருக்க மாட்டே. டாக்டராம். வாசல்லே கறிகாய் வாங்குறபோது என்னையே பார்த்தார். என்னைத் தெரிந்து கொண்டு அவர் வந்துவிட்டார்.''

''வணக்கம், மாமா!'' கையிரண்டையும் எடுத்துக் கும்பிட்டாள் அந்தப் பெண். அனந்தசாமிக்கு அந்த வணக்கம் செய்த பாணியைப் பார்த்ததும் கொஞ்சம் சிரிப்புக்கூட வந்து விட்டது.


''மாமாவுக்குக் காப்பி கொண்டு வந்து கொடு.''

''பரவாயில்லை. எல்லாம் ஆகி விட்டது'' என்று குறுக்கே விழுந்தார் அனந்தசாமி.

''கொஞ்சம்!''

''ம்ஹ்ம்...வேண்டாம் குழந்தை!....படிக்கிறாளா குழந்தை?''

''படித்து முடித்து விட்டாள். பாடுவாள். நாட்டியம் சொல்லிக் கொள்கிறாள். அதற்காகத்தான் ஜாகை போட்டிருக்கிறது. பாருங்கள். வந்ததும் வராததுமாக அவள் படுத்துக் கொண்டு விட்டாள். வாருங்களேன்'' என்றெழுந்தார் கிழவர்.



அனந்தசாமிக்கு இலேசாகச் சிரிப்பு வந்தது, தன் அதிர்ஷ்டத்தை நினைத்து. போகுமிடமெல்லாம், தனக்கு முன்னால் முதல் வண்டியிலேயே ஏறி வியாதி போய் நின்று காத்திருக்கிற அதிசயத்தை நினைத்துக் கொண்டே உள்ளே போனார். ஒரு பழைய பாய். அதற்குமேல் கால் தூசிகள் சுவடு போட்ட ஒரு புது ஜமக்காளம். அதன்மேல் ஒரு துணி. அதற்கும் மேல் ஒரு மனுஷப் பிராணி தோலாகப் படுத்துக் கிடந்தது. அவரைக் கண்டதும் எழுந்துகொள்ள முயன்றது.

"இப்ப ஜுரம் விட்டு விட்டது. பல ஹீனம்தான். ஆரஞ்சு ஜூஸ்தான் ஆகாரம்" என்று சொல்லிவிட்டுக் கிழவர் மனைவியிடம் பழையபடி அனந்தசாமி ஆனைகட்டி மைதானத்தில் படித்ததிலிருந்து தொடங்கி, கறிகாய்க் கடைக்குத் தாவிச் சுருக்கமாகச் சொல்லி முடித்தார்.

கிழவருக்கு ஏற்ற வயசில்லை. முப்பத்தைந்து வயதுக்குள்ளேதான் சொல்லலாம் அந்த அம்மாளுக்கு. நாடி, கண்களைப் பார்த்து, கேள்விகள் கேட்டுவிட்டு, "பலவிருத்திக்கு மருந்து கொடுத்தால் போதும்" என்றார் அனந்தசாமி.

"தம்பி, உட்கார ஏதாவது கொண்டு வாடா" என்று கத்தினார் கிழவர். ஒன்றுமே நடக்காதது போல் அந்தச் சின்ன அறையின் மூலையில் வாரப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த பன்னிரண்டு வயதுப் பையன் ஒருவன் கிழவரை மூன்று விநாடிகள் பார்த்து விட்டு, வெளியே ஓடி ஒரு ஸ்டூலைக் கொண்டு வந்து நோயாளியின் காலை மோத்தி விடுவதுபோல் வைத்தான்.

"இவன்தான் முதல் பையன். இங்கேதான் பள்ளிக்கூடத்திலே சேர்த்திருக்கேன்" என்றார் கிழவர்.

மருந்தை மடிக்கும்பொழுது, "வந்ததும் வராததுமாகச் சோதனை பாருங்கள். குழந்தைதான் ஒன்றியாக நிர்வாகம் பண்ணுகிறாள். அவளுக்கு அவள் ஜோலியையும் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இங்கே வந்து சமையல், கஞ்சி, காப்பி. பாருங்கள் தவித்துப் போகிறாள். நேற்று ராத்திரி முழுக்க டான்ஸ் ஒத்திகையாம். அருண்குமார் வந்து அழைத்துக் கொண்டு போய் விட்டார். ராத்திரி முழுக்கத் தூக்கமே இல்லையாம். சூரியன் மாதிரி நூறு விளக்கு. சூடு தாங்காது அதுகளுக்கு நடுவிலே நின்று டான்ஸ் ஆடியிருக்கிறாள். சினிமாக்காரர்களோ இல்லையோ, திருப்பித் திருப்பி 'ஆடு ஆடு' என்று நெறி நெட்டி வாங்குகிறார்களாம். களைத்துப் போய் வந்தாள். அரை மணி நேரம்கூட ஆகவில்லை. உடனே குளித்து விட்டுக் கஞ்சிக்கு அடுப்பை மூட்டி விட்டாள்" என்றார் கிழவர்.

அனந்தசாமி அதைக் கேட்டு, சற்று மௌனமாக இருந்தார். திரும்பி அந்தப் பெண்ணைப் பார்த்தார். நூறு சூரியன்களுக்குக் கீழே அவள் நடனமாடுவதை மனக்கண்ணால் ஒரு தடவை பார்த்தார்.

வாசலில் கேட்கிற, 'கொத்தி மீன் கருப்பிலியோ...' என்று நாலு மாத்திரை நீட்டுகிற கூவலுக்கு நடுவில், ஸ்கூட்டர் ஓசைக்கு நடுவில், எங்கேயோ குழையும் குயிலின் கூவலும் கேட்டது. பட்டணத்தை நினைக்க நினைக்க அவருக்குச் சிரிப்பு வந்தது.

பூட்ஸ் ஓசை கேட்டது.

சரேலென்று டொக்கி அந்த இடத்தை விட்டு அகன்றாள். "வாங்கோ" என்று வாசலில் அவள் வரவேற்கும் ஓசை கேட்டது. காது கேட்காத கிழவர் அனந்தசாமியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"எங்கே சவாரி போயிட்டே ராத்திரி?" என்று கேட்ட புதுக்குரல் சட்டென்று நின்று விட்டது.

அனந்தசாமி வெளியே வந்தார். கூலிங் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்தவாறே உள்ளே வந்தான் ரங்கன்.

"குட்மார்னிங். ஸார்தான் வைத்தியம் பார்க்கிறாற் போலவா?" என்றான்.

"ஆமாம்."

"பார்த்திருக்கிறேன்" என்றார் அனந்தசாமி.

"ம்ஹ்ஹம்" என்று சிரித்து விட்டு "உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டான் ரங்கன்.

"தேவலை."

"அதுதான் விசாரித்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். அப்ப நான் போய் விட்டுச் சாயங்காலம் வருகிறேன்" என்று கிளம்பிவிட்டான்.

"என்ன! வந்ததும் வராததுமா! நுழையக்கூட இல்லை—"


"அவசரமாகப் போக வேண்டியிருக்கு. உடம்பு எப்படியிருக்கு என்று போகிற போது விசாரிக்கலாம் என்று நுழைந்தேன். சாயங்காலம் வந்தால் போச்சு" என்று கிளம்பி விட்டான் அவன்.

ஸ்கூட்டர் சத்தம் ஓங்கி நகர்ந்தது.

பெண் அப்பாவைப் பார்த்தாள். அப்பா பெண்ணைப் பார்த்துவிட்டுத் தரையைப் பார்த்துச் சிரித்தார். "அவர் எப்பவுமே இப்படித்தான். பச்சைக் குழந்தை" என்றார்.

"உறவோ!" என்றார் அனந்தசாமி.

"உறவு இல்லை. தெரிந்தவர்தான். டான்ஸ் சொல்லிக் கொள்கிறாளோ இல்லையோ? அங்கே வருவார். ரொம்ப



குளோரினேஷன் மூலம்

தண்ணீர்

சுத்தமாவதற்கு

ஸூர்க்ளோர்

SURECLOR (U. S. A.)

ஆட்டோமாடிக் குளோரினேட்டர்
உபயோகியுங்கள்
லாபகரமானது. செலவு சிக்கனம்.

தானே இயங்குவது — டோஸேஜ் அளவை அட்ஜஸ்ட் செய்யக்கூடியது — ஆட்டோமாடிக் டோஸேஜ் காம்பன்ஸேஷன்-இன்-பில்ட் குளோரின் டெஸ்ட் ஸெட். ரெடி ஸ்டாக்.

இயங்கும் விதத்தைப் பார்வையிட எங்களுக்கு எழுதுங்கள்.

ஈசன் இஞ்ஜினீரிங் கம்பெனி லிமிடெட்,

5.7. ஸெகண்ட் லேன் பீச் — மதராஸ் - 1.

EP

ஈறுகளை உறுதியுடனும்
பற்களை ஆரோக்கியத்துடனும்
சுவாசத்தை நறுமணத்துடனும்

இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்

பளிச்சென்று ஒளிவீசும் வெண்மையும்
ஆரோக்கியமுமான பல் வரிசைகளை
அடைய வேண்டுமானால்

போர்ஹான்ஸ்

பற்பசையை உபயோகியுங்கள்



ஈறுகளின் உறுதிக்காக என்றே டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் கண்டுபிடித்து அளிக்கும் விசேஷத் துவர்ப்புப் பொருள் கலந்துள்ள பற்பசை இது ஒன்றுதான்.

Geoffrey Manners & Co. Ltd.

TAM. S.27



சாது. நல்ல மனுஷன் செலவாளி உள்ளவர். உங்களுக்குத்தான் தெரியும் போலிருக்கிறதே. ஏதோ குழந்தைகிட்டே ஒரு இன்ட்டரஸ்ட். இப்படி வந்து போய்க் கொண்டிருப்பார்... உட்காருங்கள்..."

அனந்தசாமி உட்கார்ந்ததும், அவரும் உட்கார்ந்து கொண்டார். "அவருக்குக் குழந்தையை எப்படியாவது சினிமாவிலே நடிக்கப் பண்ணிப் பெரிய நடிகையாக ஆக்கி விடணும்னு ஆசை. நான் பண்ணிக் காட்டுகிறேனு இல்லையா பாருங்களேன் என்கிறார்" என்று மீண்டும் மந்தஹாசம் செய்தார் கிழவர். "அவர் இருக்கிறது பெரிய பலமாயிருக்கிறது. சினிமா என்றால் அது இது என்று என்னென்னமோ பயமுறுத்துகிறார்கள். இந்த மாதிரி நல்லது பொல்லாதது தெரிந்தவர்களாக இருக்கிறது எப்படியிருக்கிறது, தெரியுமோ?" என்று மேலும் சொன்னார் அவர்.

"அது சரி."

"உங்களுக்கு ரொம்ப நாட்களாகப் பழக்கமோ?" என்று அனந்தசாமியைக் கேட்டார் கிழவர்.

"எனக்கு அதிகப் பழக்கமில்லை. ஏதோ பார்த்தால் சிரிக்கிறது" என்று கூறிய அனந்தசாமி கிழவரிடமிருந்து நிறையத் தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்று உட்கார்ந்தார். கிழவரும் அவரை இலேசில் விட்டு விடுவதாக இல்லை. தம் குலம் கோத்திரங்களை யெல்லாம் அடியைப் பிடித்துச் சொல்லிக் கொண்டிருந்தார் அவர். காவேரிப் பாசனத்தில் நல்ல நிலமாக இரண்டு வேலி இருக்கிறதாம் அவருக்கு. ஸப்-ரிஜிஸ்திரார் உத்தியோகத்தில் வேறு சம்பாத்தியம். பெரியவர்களாக இரண்டு பிள்ளைகள் சம்பாதித்துக் கொண்டு தகப்பனார் கையை எதிர்பார்க்காமல் சௌக்கியமாகவே இருக்கிறார்களாம். அனந்தசாமிக்குச் சற்றுக் குழம்பியது.

"தாயாரைப் பார்க்க வரவில்லையோ அவர்கள்? இப்படிச் சீக்காகக் கிடந்து பிழைத்திருக்கிறாளே!" என்றார்.

"பார்க்கலாம். அது நாமெல்லாம் பால்யமாக இருந்த காலத்திலே நடந்திருக்கும். காலம்தான் இப்ப மாறிக் கிடக்கிறதே. வயிற்றிலே பிறந்த பிள்ளைகளே தாயாரைத் திரும்பிப் பார்க்க மாட்டேன் என்கிறான்கள்......" என்று சொல்லிக் கொண்டே வந்தவர் அனந்தசாமி விழிப்பதைப் பார்த்து, "இவள் இரண்டாவது சம்சாரம். முதல் பிள்ளைகள் இரண்டும் மூத்தவளுடைய குழந்தைகள். இவளுக்கும் அவர்களுக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. ஒரு வேலியை ஆளுக்குப் பத்து மாவாகப் பிரித்து

> பணக்காரர்களின் பண உதவியைக் கொண்டும், அதிகாரச் செல்வாக்கைக் கொண்டும் வெற்றியடையலாம் என்று காங்கிரஸ்காரர்கள் எண்ணுகிறார்கள். அதைப் பொய்யாக்குவது வோக்கியர்களின் கடமை.
>
> —ராஜாஜி

நீங்கள் இஷ்டப்படி இருங்கள் என்று சொல்லிவிட்டேன். போய்விட்டார்கள். 'அப்பா! இருக்கியா, சித்தி! இருக்கியா?' என்று ஒரு பேச்சுக் கிடையாது" என்று முடித்தார்.

அனந்தசாமியின் பரிவைக் கண்டோ என்னவோ, கிழவர் மேலும் மேலும் பேசிக் கொண்டேயிருந்தார். ஆனைக்கட்டி மைதானத்தில் வாழ்ந்த காலத்தில் தமக்கிருந்த நண்பர்களை, அனந்தசாமிக்கும் நண்பர்கள் என்று தெரிந்தவர்களைப் பற்றியும் பேசினார். தம் உத்தியோகத்தைப் பற்றியும் பேசினார். தம் கிராமம், உறவுக்காரர்கள் எல்லாவற்றையும் பற்றிப் பேசினார். பெண் டாக்கியின் திறமைகளைப் பற்றிப் பேசினார்.

"பள்ளிக்கூடம் முடிந்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. நல்ல மார்க்கோடு பாஸ் பண்ணினாள். கலியாணத்தைப் பண்ணிவிடலாம் என்று நினைத்தேன். 'மேலே படிக்கட்டும்' என்றாள் சம்சாரம். இரண்டும் முடியாதென்று விட்டாள் குழந்தை. சிறுசிலிருந்தே அவளுக்குப் பாட்டு, நடனம் என்றால் உசிரு. பள்ளிக்கூடத்திலே நாடகம் போட்டால் இவள்தான் முன்னாலே நிற்பாள். 'இத்தனூண்டு' குட்டியாயிருக்கிறபோதே சுமக்க முடியாமல் பரிசெல்லாம் தூக்கிக் கொண்டு வருவாள். வருஷா வருஷம் இப்படித்தான். அவளுக்கு இவ்வளவு அவ்வளவு என்று இல்லை ஆசை—எப்படியாவது சினிமாவிலே சேர்ந்து பெரிய நட்சத்திரமாகி விடணும் என்று. ஆசை இருக்கிறது; யோக்கியதையும் இருக்கிறது. எப்படி வேண்டாம் என்று சொல்கிறது?"

கிழவரின் முகம் இயற்கையாகவே புன்சிரிப்புத் தவழும் முகம். சாதாரணமாக இருக்கும்பொழுதுகூட மந்தஹாசம் செய்வது போன்ற ஒரு களை பரந்திருந்த முகம். சிரிக்கும்போது கன்னங்களில் குழி விழுந்தது. சிறு வயதில் அந்த முகத்தில் தடுத்து நிறுத்தும் ஒரு கவர்ச்சி இருப்பதை அடிக்கடி பார்த்திருக்கிற ஞாபகம் வந்தது அனந்தசாமிக்கு. அது இன்னும் அப்படியேதானிருந்தது— வாடின மருக்கொழுந்தின் மணம் போல. அந்தப் புன்



"இவர் இப்படிக் குறட்டை விட்டுத் தூங்குகிறதற்காகவே இங்கு இவருக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். காரணம், இவருடைய குறட்டை சப்தத்தால் ஆபீஸில் உள்ள மற்ற யாவரும் தூங்க முடியவில்லையாம்."

சிரிப்பிலும் பேச்சின் மென்மையிலும் பெண்மை நீரோட்டமாக ஒளிந்து கிடந்தது. யார் என்ன சொன்னாலும் தட்ட முடியாத, மனமில்லாத ஒரு மென்மை நிறைந்த முகம்.

"அதுவும் ஒரு வருஷமாக என்னை அரித்து எடுத்து விட்டாள் குழந்தை. 'அப்பா! மெட்ராஸுக்குப் போனால் தான் ஆச்சு. போனால்தான் ஆச்சு' என்று ஒற்றைக் காலால் நின்றாள். கடைசியிலே பார்த்தேன். நம்ம சுகத்தையே எத்தனை காலம்தான் பாராட்டிக் கொண்டிருக்கிறது! அவளுக்கும் ஏதாவது வழி காட்டித்தானே ஆகணும் என்று கிளம்பி வந்துவிட்டேன். இன்னும் மூன்றரை வருஷம் இருக்கிறது ரிடையர் ஆவதற்கு. ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு எப்படியாவது தள்ளி விட்டுப் போகிறேன். ரிடையரான பிறகு வந்து சேர்ந்து கொள்கிறது. அது வரைக்கும் சும்மா இருக்க வேண்டாம். டான்சோ, பாட்டோ ஏதையாவது கற்றுக்கொள்ளட்டுமென்று ஜாகையைப் போட்டுவிட்டேன். ஆச்சு. லீவு முடியப் போகிறது. இன்னும் நாலு நாட்கள் தான் பாக்கி. என்னமோ, விட்டுவிட்டுப் போகிறேன். உங்கள் மாதிரி பெரியவர்கள் தான் அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டும்."

நெருக்கம், நட்பு என்றுகூட அவர் பார்க்கவில்லை போலிருக்கிறது. புன் சிரிப்போடு நிற்கிற பரிச்சயங்களைக் கூட இழுத்துப் பிடித்து நெருக்கிக் கொள்ளத் துடிப்பது போலிருந்தது. குழந்தையை முன்னுக்குக் கொண்டு வருவதில் அவ்வளவு துடிப்பு அவருக்கு.

மீண்டும் அவரே ரங்கனைப் பற்றிச் சொன்னார். "முன்னே பின்னே பார்த்தது இல்லை. டாங்க சொல்லிக் கொண்டிருந்தேனே, அங்கே பழக்கமானார். ஆனால் மனுஷன், உயிரை வைக்கிறது என்பார்களே, அப்படிப் பிரியமாயிருக்கிறார். குழந்தை ஒன்று சொல்லிவிட்டால் போதும், உடனே அவருக்கு அதைச் செய்து முடித்து விடணும். அன்றைக்குப் பாருங்கள். 'மகாபலிபுரம் ரொம்ப அழகாயிருக்குமாமே, மாமா!' என்றாள். அவ்வளவுதான்; உடனே எங்கேயோ போனார். ஒரு காரைக் கொண்டுவந்தார். வாடா பயலே என்று பையனையும் அழைத்துக் கொண்டார். போய்விட்டு வந்து விட்டார். டான்ஸ் வாத்தியார் வீட்டில் போன வாரம் ஏதோ திருபுவனம் தாராசுரம் கோவில்களிலே யெல்லாம் டான்ஸ் போஸுகள்! முத்திரைகள் ரொம்ப நன்றாகச் செதுக்கி வைத்திருக்கிறான் என்று யாரோ வந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். அன்றைக்குச் சாயங்காலம் ரங்கன் வந்தார். அவரிடம் ஏதோ பேச்சுவாக்கில் சொல்லி வைத்தாள் குழந்தை. போகணும் என்று கூடச் சொல்லவில்லை. பாருங்கோ, அஸ்தமித்தவுடனே காரைப் போட்டுக் கொண்டு வந்துவிட்டார். ராத்திரியே புறப்பாடு. கும்பகோணம் போய்த் திருபுவனத்திலே ஒரு நாள், தாராசுரத்திலே ஒரு நாள் இருந்து நன்றாக எல்லாவற்றையும் பார்க்கச் சொல்லி அழைத்து வந்து விட்டார். அப்படி ஒரு பிரியம் குழந்தையிடம். இவளும் வந்தாள். அப்படியே அங்கே இருக்கிறது ஒவ்வொன்றையும் 'ஜாடா'—ஒரு போஸு ஒரு முத்திரை விடாமல் அப்படியே செய்து காண்பித்தாளே, பாருங்கள். அதைப் பார்த்தவுடனே அவருக்குப் பிரமாத உத்சாகம் வந்து விட்டது. 'மாமா, நீங்கள் பார்த்துக் கொண்டே யிருங்கள். டொக்கி காலிலே உலகமே வந்து விழப் போகிறது ஒரு நாளைக்கு' என்று சந்தோஷம் தாங்காமல், கூத்தாட ஆரம்பித்து விட்டார்."

இவ்வளவையும் சாவதானமாக, மெதுவாக, கடும் செவிடர்களுக்குச் சொந்தமான தணிந்த குரலில் புன்சிரிப்பும் பொக்கை வாயுமாகச் சொல்லி முடித்தார் கிழவர்.

அனந்தசாமியும் கொஞ்சம் கொஞ்சம் உலக அறிவு சம்பாதித்துக் கொண்டவர்தான். கிழவர் இவ்வளவு சாதுவாக இருப்பதைக் காண அவருக்கே வியப்பாக இருந்தது. வேறொரு சப்-ரிஜிஸ்டிராரின் நினைவு வந்தது அவருக்கு. (தொடரும்)

நீங்கள்

ஆஸ்துமா-வினால்

அவஸ்தைப்பட்டால்

இதை அவசியம் படியுங்கள்

இபஸோன் மாத்திரைகள் இந்தியாவிலே திரும்பவும் கிடைக்கின்றன. ஆஸ்துமா, ப்ராங்கைடிஸ், ப்ராங்கைடிஸினால் ஏற்படும் ஜலதோஷம், மார்புச் சளி, ஹே காய்ச்சல், மற்றும் இது சம்பந்தப்பட்ட நோய்களினால் அவஸ்தைப்படுகிறவர்களுக்கு இபஸோன் மிகவும் உதவியளிக்கிறது. இபஸோன் எளிதில் உட்கொள்ளக்கூடியது. பயமின்றி உபயோகிக்கலாம். உடனடியாக சமனமூட்டி, நிச்சய பலனளிக்கிறது.

இபஸோன் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள வைத்திய முறையின் அம்சங்களின் இயல்புகள் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

1. சுவாசக் குழாய்களின் தசைநார்களுக்கு ஏற்படும் வலிப்புக்கு சமனமூட்ட ஒரு சக்தி வாய்ந்த தன்மை இபஸோனுக்கு உண்டு. சுவாசாசயங்களில் மூச்சு எளிதில் செல்லவும், வெளியில் வரவும் இது உதவி செய்கிறது. அது மாத்திரமல்ல; ஆஸ்துமாவினால் ஏற்படும் உக்கிரத்திற்கு ஆசுவாசமளிக்கிறது.
2. சுவாசக் குழாய்களிலும் மற்றும் மார்பு உறுப்புகளிலும் உள்ள கபத்தை இபஸோன் மிருதுவாக்கி, திரவமாக இருமலில் எளிதாக வெளியே தள்ளிவிடுகிறது.
3. சுவாசாசயத்திலுள்ள இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பிற்கு இபஸோன் சமனமூட்டுகிறது.
4. இபஸோன் இருதயத்தின் கஷ்டங்களைக் குறைத்து, அதிகம் வேலை செய்யக்கூடிய அளவுக்கு சக்தியை அளிக்க உதவி செய்கிறது.
5. இபஸோன் ஆஸ்துமாவினால் நிச்சயமாக ஏற்படும் உக்கிரத்தைக் குறைத்து, ஏக்கத்தை நிவர்த்தி செய்து, மிருதுவாக நரம்புகளுக்கு சமனமளிக்கிறது. அது மட்டுமல்ல; ப்ராங்கைடிஸினால் ஏற்படும் அகோரமான இருமலைக்கூட சரிசெய்துவிடுகிறது.

ஆஸ்துமா வெகு சீக்கிரம் உங்களைப் பீடிக்கிறது. ஆஸ்துமாவினால் நீங்கள் பீடிக்கப்படுவீர்கள் என சிறிய சந்தேகம் வந்தவுடன் ஒரு இபஸோன் மாத்திரையை உட்கொண்டு, அதிசீக்கிரத்திலே நிச்சயமாக நிவாரணமடையுங்கள்.

இபஸோனின் அரிய தன்மைகள், ஆஸ்துமாவினால் அவஸ்தைப்பட்டு இதை உபயோகித்து குணமடைந்தவர்களாலும், அதை சிபார்சு செய்யும் டாக்டர்களாலும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

வழக்கத்தை ஊட்டிவிடும் மருந்துகள் எதுவும் இபஸோனில் சேர்க்கப்படவில்லை.

இபஸோன் 15, 45, 100 மாத்திரைகள் கொண்ட வசதியான பாக்கட்டுகளில் எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கின்றன.



EPHAZONE

இபஸோன் தயாரித்து, வினியோகிப்பவர்கள்:-

ஜே எல் மோரிஸன், சன் அன்டு ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்.

பம்பாய் – கல்கத்தா – மதராஸ் – டில்லி.


உங்கள்
டார்ச்சில்
எஸ்ட்ரெலா
பொருத்தி
இரவில்
சூரிய
பிரகாசத்தைப்
பெறுங்கள்
ESTRELA
YOUR GUIDE
IN DARKNESS
எஸ்ட்ரெலா
ப்ளாஷ் லைட் பாட்டரிகள
டார்ச்கள் மற்றும் பல்புகள்
ISI
ES-0-9 TAM

முன்னேற்றம்!



பதினைந்தாவது வயது

ராமு தன்னுடைய தகப்பனாரிடம்: "அப்பா!"

"என்னடா?"

"எனக்கு ஒரு புஸ்தகம் அவசரமாக வாங்கணும். அதுக்கு அஞ்சு ரூபாய் வேணும், அப்பா!"

"சரி, அப்போ நான் சொன்னேன்னு பக்கத்துத்தெரு ராமசாமியிட்டே அஞ்சு ரூபாய் வாங்கிட்டுப் போ."



ராமு வருத்தத்துடன்: "அப்பா! கடன் வாங்கறது உங்களோடே போகட்டும் அப்பா. என்னையும் அதற்குப் போகச் சொல்லாதீங்க அப்பா!"

தகப்பனார் வியப்புடன்: "சரிதான்டா. மாலையில் நான் போய் வாங்கி வரேன். நீயாவது கடன் வாங்காமல் பிழைச்சுக்கொள்ளடா."

இருபத்தைந்தாவது வயது

ராமுவின் தாயார் "ராமு! அவளுக்கும் உடம்பு சரியில்லே. குழந்தைக்கும் பால் இல்லே. அதனாலே இனிமே கிளாக்ஸோ வாங்கித்தான் குழந்தைக்குக் கொடுக்க வேணும். சாயந்திரம் யாரிட்டேயாவது ரூபாய் அஞ்சு கடன் வாங்கிட்டு வா."

"என்னம்மா இது, நான் யாரிடம் போய்க் கடன் வாங்குவேன்? எனக்கு யாரிடமும் கேட்டு வழக்கமில்லையே?"

"என்னப்பா, செய்யறது? எப்படியும் இன்று சாயங்காலம் கிளாக்ஸோ டப்பா வாங்கணும். உன் ஆபீஸிலே யாராவது சிநேகிதரிடம் வாங்கி வாயேன்."

"சரி, அம்மா, பார்ப்போம்!"

அன்று மாலை ஆபீஸில் தன் நண்பரிடம், "சார்....!" என்று தன் தலையைச் சொரிந்தான் ராமு.

"என்ன ராமு?"

"ஒண்ணுமில்லே, வந்து ஒரு...."



"என்னப்பா என்கிட்டே இவ்வளவு தயங்குறியே?"

"இல்லே சார்! வீட்டிலே உடம்பு சரியில்லே. கையிலே பணமுமில்லே. குழந்தைக்கு கிளாக்ஸோ வாங்கணும். அதனாலே..."

"எவ்வளவு வேணும்?"

"அஞ்சு ரூபாய் இருந்தால் போதும். இந்த மாதம் சம்பளம் வாங்கினவுடனே கொடுத்திடறேன்!"



"ப்பூ! இதற்குத்தானா இவ்வளவு யோசனை? சங்கடம் எல்லோருக்கும் சகஜம். இந்தா வாங்கிக்கோ."

"ரொம்ப நன்றி சார்! சமயத்திலே கொடுத்தீங்க, சார்! இந்த மாதம் சம்பளம் வாங்கினவுடனே கொடுத்து விடறேன்."

"அதற்கென்ன, மெதுவாகத்தான் கொடேன்!"

அடுத்த மாதம் முதல்தேதியன்று ராமு தன் நண்பரிடம்: "இந்தாங்க, சார்! உங்க அஞ்சு ரூபாய். நீங்க நல்ல சமயத்திலே கொடுத்து உதவினீங்க. ரொம்ப நன்றி சார்."

"பரவாயில்லேப்பா. இதற்குப் போய் இவ்வளவு பிரமாதமாகப் பேசுறியே?"



முப்பத்தைந்தாவது வயது

ராமுவின் மனைவி ராமுவிடம்: "என்ன, நாளைக்குப் புறப்படணும் கல்யாணத்துக்கு. கையிலே காலணா இல்லே. இது வரைக்கும் ஓர் ஏற்பாடும் பண்ணலே! நீங்க என்ன செய்யப் போறீங்க....?"

"அடடா, உன் தொந்தரவு பெரிசாயில்லே. போச்சு. உனக்கென்ன? பேசாமல் இரு. நாளைக்குப் பணம் நான் கொடுத்து விடுகிறேன்!"

"ஆமாம்! ஒரு நாளைக்குள்ளே பணம் ஆகாசத்திலே இருந்து வந்து குதிக்கப் போகிறதாக்கும்!"



"என்ன பிரமாதமாகப் பேசறே! எத்தனை பேர்கள் எனக்கு நண்பர்கள் இருக்காங்க. ஒவ்வொருத்தன்கிட்டேயும் ரூபாய் இருபத்தைந்து வீதம் நாலு பேரிடம் வாங்கினால் போகிறது."

அன்றுமாலை தெருவில் பார்த்த சோமுவிடம் ராமு: "அது யாரு. சோமுவா?"

"ஆமாம், சார்! வாங்க. என்ன ரொம்ப நாட்களாகக் காணோம்!"

"என்னையா காணோம்னு சொல்றே. உன்னைத்தான் காணவே முடியலே. புதுக் கல்யாணம் ஆகிப் புதுக் குடித்தனம் வைச்சிருக்கிறவன் இல்லையா? அது சரி, புதுக்குடித்தனம் எப்படி இருக்கு?"

"இருக்கு, சார்!"

"என்னப்பா அப்படிச் சொல்றே. கல்யாணம் ஆகி ஒருமாசத்துக்குள்ளே அலுப்பு



ஏற்பட்டிடுச்சா? இல்லே, எல்லாருக்கும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியா?''

'' அதெல்லாம் ஒண்ணுமில்லே சார், பொருளாதார நெருக்கடியெல்லாம் வராது. குடித்தனமும் சௌகரியமாய் இருக்கு.''

'' வேறே தப்பா நினைச்சிடாதே அப்பா! இந்தச் சம்பளத்திலே காலந்தள்ளறது சங்கடமாச்சே அப்படின்னுதான்கேட்டுவைச்சேன்!''

'' இந்தச் சம்பளத்தை நம்பி யாரா இருக்காங்க! ஊரிலேயிருந்து அரிசி, பருப்பு முதலிய எல்லாச் சாமான்களும் வந்துவிடுகின்றன. மேலும் மாமனார் வேறே அடிக்கடி வந்து வர்றபோதெல்லாம் ஏதாவது பணம் வீட்டிலே கொடுத்துவிட்டுப் போகிறாரு. அதையும் என்னிடமே அவள் கொடுத்து விடுகிறாள்.''

'' அதுதானே கேட்டேன் சம்பளத்திலே மாத்திரம்னு ஒண்ணுமே செய்ய முடியாதே! சரி. நான் வரட்டுமா ?''

''எங்கே இப்படிப் புறப்பட்டீங்க?''

'' ஒண்ணுமில்லே நம்ம ராகவனைப் பார்த்து விட்டு வரவேணும்.''

'' அவர் ஊரிலே இல்லேயே ?''

'' சே. சமயத்துக்கு உதவாத மனுசன்...''

'' என்ன சார்.''

''ஒண்ணுமில்லேப்பா, கொஞ்சம் அவசரமாகப் பணம் வேணும். அதனால்தான் அவரைப் பார்க்கப் போறேன்.''

'' அப்படியா, அவர் உங்களுக்கு ஏதாவது தரணுமா ?''

'' ஆ.....ஆ.....மா.....''

'' அதுக்கென்ன சார். நான் வேணும்னு தருகிறேன். பின்னாலே அவரிடம் வாங்கி என்னிடம் கொடுத்திடுங்கோ. உங்களுக்கு எவ்வளவு வேணும் இப்போ ?''

'' ரூபாய் ஆறு வேணும் !''

'' இந்தாங்க.''

'' உனக்கெதுக்கப்பா இந்தச் சிரமம்? வேறு யாரிடமாவது பார்த்துக் கொள்கிறேன்.''

''இதிலென்ன சிரமம்? பரவாயில்லே, சார்!''

'' சரி. அப்படீன்னு இன்னும் ஐந்து அல்லது ஆறு நாட்களிலே திரும்பி வாங்கிக்கோ.''

'' அதனாலென்ன சார். நீங்க சாவகாசமாகவே கொடுங்கோ.''

(ஆறு மாதங்கள் கழிந்து) ராமுவின் வீட்டுக்குச் சோமு வருகிறான்.

''யாரது, சோமுவா? இப்பொழுதெல்லாம் உன்னைப் பார்க்கவே முடியறதில்லேயே ?''

'' சௌக்கியந்தான். ஆபீஸிலே கொஞ்சம் வேலை அதிகம். மேலும் வீட்டிலேயும் ஆளில்லே. மாமனார் வீட்டுக்குப் போயிருக்கா. நான் அடிக்கடி அங்கே போய்ப் பார்க்க வேண்டியிருக்கு. அதனாலே பார்க்க முடியறதில்லே.''

'' உங்க வீட்டிலே, உன் சம்சாரம் எல்லாம் சௌக்கியந்தானே? இப்ப என்ன விசேஷம், மாமனார் வீட்டுக்குப் போயிருக்கா ?''

'' ஒண்ணுமில்லே சார். வந்து....இப்ப அஞ்சு மாசம்.''

'' ஓஹோ! ரொம்ப சந்தோஷம். இப்பொழுதுகூட அங்கேதான் போகிறாயா? என் ஆசியை உன் சம்சாரத்திட்டேயும் சொல்லு.''

'' ஆமாம்! சார் அங்கேதான் போகிறேன். உங்க ஆசியைக் கண்டிப்பாகச் சொல்றேன்! அந்தப் பணம் கொஞ்சம் கிடைக்குமா சார்?''

'' எந்தப் பணம் ?''

'' அதுதான் சார்! உங்க மைத்துனி கல்யாண சமயத்திலே வாங்கினீங்களே, அது.''

'' ஓ. அதுவா? அதுக்கென்னப்பா இப்ப உனக்கு அவசரம் வந்திருக்கு ?''

'' இல்லே சார். இப்ப கொஞ்சம் செலவு அதிகம். அடிக்கடி ஊருக்குப் போய் வரவேண்டியதினாலே கொஞ்சம் சங்கடமாயிருக்கு.''

'' தம்பி! நான் சொல்றேன்னு வருத்தப் பட்டுக் கொள்ளாதே. பணம் எவ்வளவு கையிலே இருந்தாலும் செலவழிந்துதான் போகும். ஏதோ, என் கூட்டாளிகிட்டே இருக்கப்போய் அந்தப் பணம் இருக்குதுன்னு இருக்கு. என்ன நான் சொல்றது சரிதானே?''

'' அது சரிதான், சார் !''

'' அதனாலே இந்தப் பணம் என்கிட்டேயே இருக்கட்டும். குழந்தை பிறந்தவுடனே வாங்கிக்கோ. ஏதாவது உருப்படியாக ஒரு நகை செய்து போடு.''

'' சரி, சார்! இப்ப வேறு எங்கேயாவது பார்த்துக்கறேன். அப்போ நான் வரட்டுமா?''

'' சரி, போயிட்டு வா !''

சோமு போனவுடன் இதைக் கேட்டுக் கொண்டே வந்த ராமுவின் மனைவி: ''இன்னும் ஐந்து மாதங்கள் கழித்து எப்படித் தரப் போறீங்களாம்? நமக்கு எப்பவும் இப்படித் தானே இருக்கு ?''

'' அட, அதைப்பற்றி இப்ப ஏன் கவலைப் படணும்? அப்போ பார்த்துக்கலாம். அப்படி ஒண்ணும் முடியலேன்னு இன்னும் வேறு யாரிட்டேயாவது வாங்கி இவனுக்குக் கொடுத்து விடலாம் !''

நாற்பத்தைந்தாவது வயது

ராமுவின் பெண் தந்தையிடம்: '' அப்பா! இன்றைக்குக் கடைசி நாள். இன்று பணம் கட்டல்லே, பரீட்சை எழுத முடியாது. இவ்வளவு நாட்கள் படிச்சதும் தண்டமாகப் போய் விடும்.''

'' சரிதான் அம்மா! யாரிட்டேயாவது வாங்கித் தர்றேன். ம்....யார் கொடுக்கப் போறாங்க! நாம அவங்ககிட்டே கேட்க நினைப்பதற்கு முன்னாலேயே நம்மகிட்ட அவங்க கேட்டு விடுறாங்க! என்ன செய்வது? சரி, உன் தம்பியை வரச்சொல்லு.''

ராமுவின் பையன் வருகிறான். அவனிடம்: '' டேய், ராஜா! பக்கத்துத் தெரு கோபாலிடம் போய்...''

'' யாரு? ரவியோட அப்பாவிடமா ?''

'' ஆமாம். அவருதான். அவரிடம் போய், நான் சொன்னேன்னு ரூபாய் இருபது கடனாக வாங்கிக்கிட்டு வா. அடுத்த ஒண்ணாந்தேதி திரும்பக் கொடுத்து விடலாம்.''

'' அப்பா !''

'' என்னடா ?''

'' இந்தக் கடன் வாங்குற பழக்கம் உங்களோடேயே போகட்டுமே. என் பேரும் ஏனப்பா இதிலே இழுக்கிறீங்க? நானாவது கடன் வாங்காமல் இருக்கிறேனே?''

ராமு வியப்புடன்: '' சரி! நீயாவது கடன் வாங்காமே இரு. நானே போய் அவனிடம் பணம் வாங்கிக்கறேன் !''


மனக்கொதிப்பும்
கவலையும்
ஜீரணத்தை
பாதிக்கின்றன
நம் வயிறும், மூளையும் நரம்புகளின் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நாம் மனக் கொதிப்பினாலோ அல்லது கவலையினாலோ பாதிக்கப்படும்பொழுது இந்த நரம்புகள் ஜீரணம் செய்வதை தற்காலிகமாக தடுப்பதுடன் ஆட்ரீனலின் என்ற சக்திவாய்ந்த அமிலத்தை வெளிப்படுத்தி ரத்தத்துடன் கலக்கிறது. ஓடியாடி வேலை செய்வோருக்கு இந்த அமிலம் மனக்கொதிப்பை எதிர்த்துப் போராட உதவுகிறது. ஆனால் மற்றவர்கள் விஷயத்தில் இது தீமையைப் பயக்குவதுடன் அவர்கள் ஜீரண சக்தியையும் குறைக்கிறது அதனால்தான் வியாபாரத் துறையிலுள்ளவர்களில் 10 பேர்களில் 6 பேர் அஜீரணத்திற்குள்ளாகி, அதன் விளைவாக சாப்பிட்டபின் வயிற்று வலியினால் கஷ்டப்படுகிறார்கள்.
HEWLETT'S MIXTURE
ஹ்யூலட்ஸ் மிக்சர் வயிற்று வலியை விரைவாகவும் அடியோடும் நிவர்த்திக்கிறது. எரிச்சலை உண்டாக்கும் அமிலத்திலிருந்து இரைப்பையின் சுவற்றைக் காப்பாற்றுவதோடு உணவை நன்கு கரைத்து ஜீரண சக்தி ஏற்படுவதற்கும் உதவுகிறது. 80 வருஷங்களுக்கு மேலாக உலகத்திலுள்ள எல்லா டாக்டர்களும் சிபாரிசு செய்யும் மருந்து இதுவே. குழந்தைகளின் வயிற்று உபாதையையும் தீர்க்க வல்லது ஹ்யூலட்ஸ் மிக்சர்.
வயிற்றுக் கடுப்புக்கு அபினி கலந்த ஹ்யூலட்ஸ் மிக்சரை உபயோகியுங்கள்.
"ஹ்யூலட்ஸ் மிக்சரை
உபயோகிக்க ஆரம்பித்ததிலிருந்து
நான் நன்றாக சாப்பிட முடிகிறது"
ஸி. ஜே. ஹ்யூலட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
86/A, கன்னியப்ப நாயக்கன் தெரு, மதறாஸ்-3
JWT-CJH-3164

வட்ட மேஜை

உவமைச் சித்திரம்

வாசகர்களுக்குத் தெவிட்டாத 'ஆரமுதா'க அளித்து வருகிறார் ஆசிரியர் தி. ஜானகிராமன் அவர்கள்.

ஆசிரியரின் உவமை நயம் அற்புதமானது. மற்ற எல்லாப் பெண்களையும் போல் கலியாணத்தையே லட்சியமாகக் கொண்ட குஞ்சுவை அந்த லட்சியம் 'தண்ணீர் குடிக்க இறங்கிய வரை விட்டு விட்டுப் போகும் ரயிலைப்போல' விட்டு விட்டு ஓடி விட்டதாக எழுதியிருக்கிறார். என்ன அழகான உவமை! மீண்டும் மீண்டும் படித்து அநுபவித்தேன்.

பழகு தமிழில், உவமைகள் விரவிய அழகு நடையில், வாழ்வின் பல்வேறு கோணங்களை அநாயாசமாகச் சித்திரிக்கும் ஆசிரியருக்கு என் மனமுவந்த பாராட்டுக்கள்.

சென்னை—5
21—7—61

ஜனகா சௌமியன்

ஆன்றோர் வாக்கன்றோ?

"ஆனமுதலில் அதிகம் செலவானால்,
மானமழிந்து, மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் பொய்யனாய்,
ஏழ்பிறப்பும் கள்ளனாய்,
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

இவ்வான்றோர் வாக்கு ஒவ்வொரு கடனாளிக்கும் பொருந்தும்; ஒரு பெரிய தேசத்துக்கும் பொருந்தும்.

கடனில் மூழ்கிய மனிதன், அந்தக் கடனைச் சமாளிக்கத் தன்வசம் உள்ள பொருள்களை ஒவ்வொன்றாக விற்கத் தொடங்குகிறான். பொருளுக்கு உரிய மதிப்பில் நாலில் ஒரு பங்கு அல்லது எட்டில் ஒரு பங்கே கிடைப்பினும், அவனுக்கு வேறு வழியில்லை. இந்நிலையில்தான் நம்மை இன்று வைத்திருக்கின்றனர் நம்மை ஆள்வோர். எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படினும், வெளிநாட்டுக்குச் சர்க்கரை விற்றேயாக வேண்டும் என்ற நிலைமை நமக்கு இன்று ஏற்பட்டிருக்கிறதே — இது ஒன்றே சான்று. சர்க்கரை மட்டும் போதாது. இன்னும் என்னென்ன பொருள்களை எவ்வளவு நஷ்டத்துக்கு விற்க வேண்டுமோ? ஆண்டவனுக்குத்தான் கணக்குத் தெரியும்.

சென்னை—24
25—7—61

கு. கிருஷ்ணன்

சம்பளத் திண்டாட்டம்

தமிழ்நாடு அரசாங்கம் ஆரம்ப ஆசிரியர்களுக்கு முதல் தேதி சம்பளம் கிடைக்கக் கருணை கூர்ந்துள்ளது யாவரும் அறிந்ததே! 1961 ஜுலைக்கு இருபது நாள் சம்பளம் கொடுத்துவிட்டு அடுத்த ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதி முடிய கல்வி இலாகா ஒரு மாதமாகக் கணக்கிட்டுள்ளது. ஆனால் நாளது வரையில் இந்தப் புதிய திட்டத்தினால் உதவி பெறும் பள்ளிக்கு எந்தவிதப் பயனுமில்லை. இந்தப் புதிய திட்டம் வந்தபின் பிரதி மாதமும் 10-ந் தேதிக்கு மேல்தான் சம்பளம் கிடைத்து வந்தது. அதுவும் ஜூன் 20 முடிய ஒருமாதச் சம்பளம் இன்று ஜூலை 27 ஆகியும் கிடைக்கவில்லை. கல்வி இலாகா உத்தரவுப்படி இந்தச் சம்பளம் ஜூலை 1-ம் தேதி கிடைக்க வேண்டும். இந்த நிலைமை நீடித்து வந்தால், அத்தியாவசியப் பண்டங்கள் தாறுமாறாக விலையேறிக் கிடக்கும் இக்காலத்தில் இந்த வருவாயை எதிர்பார்த்து வாழ்க்கை நடத்தும் ஆசிரியர்களின் கதி என்னவாகும்?

இந்தத் திட்டம் வருமுன்பே சில நிர்வாகப் பள்ளிகளில் முதல் தேதியன்றே அரசாங்க உதவியை எதிர்பாராமல், சம்பளம் கொடுத்து வந்தனர். அப்படிக் கொடுத்து வந்ததில் எங்கள் நிர்வாகப் பள்ளியும் ஒன்று. ஆனால் இப் புதிய திட்டம் வந்தபின் அரசாங்கமே முதல் தேதி சம்பளம் கொடுக்கும்போது நமக்கென்ன என்று இருந்து விட்டார்கள். அரசாங்க உதவியும் கிடைக்காமல், நிர்வாகத்தின் உதவியும் கிடைக்காமல் திண்டாடுவது ஆசிரியர்கள்தான்.

27—7—61

ஓர் ஆசிரியர்

சீமைக்கும் சென்றேன்!

"அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்" என்ற தொடர்கட்டுரையைக் 'கல்கி'யில் தொடர்ந்து படித்து வந்தவர்களில் நானும் ஒருத்தி. அக்கட்டுரையைப் படித்துக்கொண்டு வரும்பொழுது திரு சோமு அவர்கள் தாம் பார்த்துக் கண்டு களித்த இடங்களுக்கு என்னையும் உடன் அழைத்துக் கொண்டு போன மாதிரி யிருந்தது. அக் கட்டுரையைப் படிக்கும்பொழுது நேரில் நானே சென்று பார்ப்பது போல் இருந்தது. திரு சோமு அவர்கள் கட்டுரையை மிகவும் அழகிய நடையில் எழுதியிருந்தார்.

திருச்சி—8
20—7—61

தர்மாம்பாள் தியாகராஜன்

கொடுமைக்குட்பட்டு அவதிப் படுபவர்களும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்யப் பயப்படுகிறார்கள். ஏனெனில், அதன் விளைவாக, உடனடியாகவே காங்கிரஸ் கட்சியினர் தம்மை நிர்மூலமாக்கி விடுவார்களோ என்று அஞ்சுகிறார்கள். கடவுள் அவர்களுக்குப் போதிய தைரியத்தை ஊட்டுவாராக! அவன் அருளினால்தான் அவர்களுக்குத் தைரியம் ஏற்பட வேண்டும். சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், மிகப் பயங்கரமான எதிர்ப்புக்களை யெல்லாம் சமாளித்து அறம் வென்றிருக்கிறது. அவை யெல்லாம் பகவானுடைய அருளினால்தான் சாத்தியமாயிற்று என்பது நமக்குத் தெரியும்.

—ராஜாஜி

3 வித சைஸ்களில் கிடைக்கிறது




உங்கள் குடும்பத்திற்குத் தகுந்த சைசைத் தேர்ந்தெடுங்கள்.

5 வருஷ உத்திரவாதம்
* எரிபொருள்களுக்காகும் செலவு 80% வரை மிச்சமாகிறது. * சில நிமிடங்களில் சமையல் தயாராகிவிடும். * அபாயமின்றி உபயோகிக்கலாம். • உணவுகளின் சத்தும், மணமும் சிறிதும் குன்றாமல் அப்படியே இருக்கும். • பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் முறைப்படி தயாரிக்கப்பட்டது.

Hawkins
UNIVERSAL

பிரஷர் குக்கர்

HPC. 8. 71. TAM



அஞ்சறைப் பெட்டி

சம்பந்தி முதலியார் செல்வத்தில் சிறந்தவராயிருந்தும் செலவு செய்வதில் அவருக்குச் சமமான தரித்திரர்கள் ஒருவருமில்லை.

இப்படிப்பட்ட உலோபியை ஞானம்பாள் ஐந்து வயதுக் குழந்தையாக இருக்கும்போது ஒரே வார்த்தையினால் திருப்பி விட்டாள். எப்படியென்றால் அவருடைய கிராமக் குடிகள், செலுத்தவேண்டிய குத்தகைப் பணத்தை எடுத்துக் கொண்டு ஒருநாள் அவருடைய வீட்டுக்கு வந்தார்கள். அவர் பணத்தைத் திருப்பித் திருப்பிப் பத்துத் தரம் எண்ணி வாங்கிக் கொண்டு அவர்களை அனுப்பிவிட்டார். அவர்கள் வெளியே போகும்போது "அந்த லோபியின் பணப் பெட்டியை நாம் பார்த்துவிட்டோம். ஆதலால் நாமும் இனிமேல் பணக்காரர்கள்தான். அவரும் பணத்தைப் பார்க்கிறதே தவிர, செலவழிக்கிறதில்லை. நாமும்

"அவனுக் கென்னடா ராஜாபோல இருக்கிறான்" என்று கூறப்படும்போது, 'எந்தத் தேசத்து ராஜாபோல' என்று கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வது நலம். ஏனெனில் பிரிட்டிஷ் அரசராக இருப்பதைப் போன்ற அவஸ்தை வேறெதிலும் கிடையாது!

காதலுக்காக முடியைத் துறந்து இன்றைக்கு டியூக் ஆப் வின்ட்ஸராக விளங்குபவர் எட்டாவது எட்வர்டு மன்னராக இருக்கையில், மழையில் குடையைப் பிடித்துக்கொண்டு சாதாரண ஜனங்களைப் போல சாலையில் நடந்து சென்றதற்காகப் பலத்த கண்டனத்துக்குள்ளானார்!

இன்னொரு சமயம் உயர் குடும்பத்துப் பெண்கள் பலர் அவருக்கு அறிமுகம் செய்யப்பட விருந்தபோது கொட்டும் மழையில் சீமாட்டிகளின் ஆடை அலங்காரங்கள் நனைந்து பாழாவதைக் கண்டு இரங்கி

புரொபசர் பிரும்மாநந்தாவின் பிரசங்கத்தைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள் வாலிப சங்கத்தினர். சலசலப்போ பேச்சு மூச்சோ இல்லாமல் மரியாதையுடன் நடந்து கொண்டார்கள்.

'போர்' அடிக்கத்தான் செய்தது. கொட்டாவியை அடக்க முயன்றார்கள். முடியாது போகவும் கைக்குட்டையை வாயில் அடக்கிக் கொண்டார்கள். தூங்குபவர்கள் முன்னெச்சரிக்கையுடன் கறுப்புக் கண்ணாடி அணிந்து கொண்டார்கள். பிரசங்கம் முடிந்ததும், சங்கக் காரியதரிசி வந்தார். "ஏதோ எங்களாலான சிறு காணிக்கை. மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேணும்" என்றபடியே ஒரு பையை நீட்டினார்.

உறையைப் பிரித்துப் பார்த்ததும் 'முணுக்'கென்று கோபம் வந்தது பிரும்மானந்தாவுக்கு. "இளைஞரே! தவறு செய்துவிட்டீர்! என் அறிவை

லெனின் வசித்து வந்த பகுதியைச் சுற்றிலும் பஞ்சமும் பிணியும் கோர தாண்டவமாடின. பொதுக் கூட்ட மொன்றில் 'நிவாரண வேலைகளால் நிரந்தர நன்மை ஏற்படாது; அதற்குத் தற்போதுள்ள அரசியல் நிலைமையே மாற்றியமைக்க வேண்டும்' என்று வாதாடினார் லெனின். அவரது முதல் மேடைப் பிரசங்கம் அது. பேசக் கூடப்படவில்லை. கத்துக்குட்டியை மேடையை விட்டு இறக்கினார்கள்! ருஷ்யப் புரட்சியையே உருவாக்கப் போகிறவர் என்று அறிந்திருந்தால் செய்திருப்பார்களா அப்படி? புரட்சியின் ஆரம்ப நாட்களில் லெனின் சிறைவிலைப்பட்ட சமயங்களில் வெளியேயுள்ள நண்பர்களிடமிருந்து புத்தகங்களைக் கேட்டுப் பெறுவார்; திருப்பித் தருவார். இதற்குத் தடை விதிக்கவில்லை அதிகாரிகள். சற்றுக் கூர்ந்து நோக்கி யிருந்தால், சில எழுத்துக்களுக்குக்

நம் நாட்டில் மட்டும் ஒரு மாதத்தில் 2,92,603 பவுண்டு எடையுள்ள தேனைத் தேனீக்களிடமிருந்து திருடுகிறோம்! இதில் சுமார் மூன்றில் இரண்டு பாகம் மைசூர் ராஜ்யத்தில் எடுக்கப்படுகிறது. இந்தச் செய்தி அவ்வளவாக இனிக்காது, தேனைத் தயாரிக்கத் தேனீக்கள் எவ்வளவு சிரமப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொண்டால்.

மலர்களிலிருந்து மதுவைத்தான் உறிஞ்சுகின்றன தேனீக்கள்; தேனையே அல்ல. ஒரு பவுண்டு நிறையுள்ள மதுவைச் சுமந்து வர ஒரு தேனீ பத்தாயிரம் முறை தன் கூட்டைவிட்டு வெளியே போய்த் திரும்ப வேண்டும். ஒவ்வொரு தடவையும் இப்படிக் கிளம்பிச் செல்கையில் 600 மலர்களிலிருந்து மதுவை உறிஞ்சித் திரும்புகிறது அது! 'தேன் வயிற்'றில் உள்ள சுரப்பிகளில் ஊறும் ஒருவிதத் திரவம், இந்த மதுவை



அப்படித்தான்" என்றார்கள். ஞானப்பாள் அதைக் கேட்டு உடனே அழுதுகொண்டு தகப்பனாரிடம் போய், "ஐயா! லோபி என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டாள். அவர் "லோபி என்றால் ஈயாதவன்" என்று சொன்னார். அவள் "அப்படியானால் உங்களைப் பல பேர்கள் லோபி லோபி என்று சொல்லுகிறார்கள். உங்களுக்கு மகளாயிருக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது" என்று மழலைச் சொல்லால் உரைத்துக் கொண்டு சொன்னதைக் கேட்டவுடனே சம்பந்தி முதலியாருக்கு வெட்க முண்டாகியது. அன்று முதல் அவர் லோப குணத்தை விட்டு வள்ளல் என்று பலரும் சொல்லும்படி புது மனுஷனாக மாறிவிட்டார். — வேதநாயகம் பிள்ளை



உள்ளேசென்றுவிட்டார். அறிமுகம் செய்யப்படாதபெண்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் மன்னர் மீது ஏகக் கோபம்!

தமது முகத்தின் வலது பக்கத்தைவிட இடது பக்கமே நன்றாயுள்ளது என்று கருதிய அவர், நாணயங்களில் தமது உருவம் பொறிக்கப்படும்போது, இதில் கவனம் செலுத்த வேண்டும் என்றார். சம்பிரதாயப் பித்தர்களோ, 'வலப்பக்கம் திரும்பியபடி உங்கள் தாத்தாவின் உருவம் பொறிக்கப்பட்டது. உங்கள் அப்பா இடப் பக்கம் திரும்பி யிருந்தார். இப்போது வலப்பக்கம் திரும்பியபடி தோற்றமளிக்க வேண்டியது உங்கள் முறை' என்றார்கள்! இதற்கு இணங்கப் பிடிவாதமாக மறுத்து விட்டார் அவர்.



விலை போகத் துணிந்துவிட்டீர்!" என்று அந்த ஐம்பது ரூபாயைத் திருப்பித் தந்தார்.

காரியதரிசி பாடு தர்மசங்கடமாகிவிட்டது. "மன்னிக்க வேணும். ஏதோ தெரியாமல் நடந்துபோச்சு! இதை எங்கள் சங்கத்தின் பொது நிதியிலே சேர்த்துவிடுகிறேன்" என்றார்.

சந்தோஷத்துடன், "நல்லது, அப்படியே செய்யுங்கள்" என்றார் பிரும்மானந்தா. "இப்படிச் சேகரிக்கும் பணத்தை எதற்குப் பயன்படுத்துவீர்கள்? வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரின் நிவாரணத்துக்கா?"

"இல்லை. அடுத்த தடவை இன்னும் சிறந்த 'போரா'வை எங்கள் சங்கத்துக்குத் தருவிக்க உதவும்" என்றார் காரியதரிசி.




சிறு புள்ளிகள் வைக்கப்பட்டிருப்பதையும் அவ்வெழுத்துக்களைக் கோவையாகக் கூட்டிப் படித்தால் புரட்சியாளர்களின் நடவடிக்கைகள் பற்றிய ரகசியத் தகவல்களை வெளியிடுவதையும் புரிந்து கொண்டிருப்பார்கள்!


மாஸ்கோவில் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் அவரது உடலை லட்சோப லட்சம் ருஷ்யர்கள் தரிசிக்கிறார்கள். தொப்பிகளைக் கழற்றி நிசப்தமாக வணங்குகிறார்கள். தங்கள் குழந்தைகளுக்கு அவரது ஆசி கிட்ட வேண்டும் என்று தாய்மார்கள் பிரார்த்தித்துக் கொள்கிறார்கள். ஆம், 'கடவுள் இல்லை மதங்கள் இல்லை' என்று போதித்த லெனினின் சமாதியே இன்றைக்கு ஒரு புனித க்ஷேத்திரமாகி விட்டது!



ஓரளவுக்கு மாற்றியமைக்கிறது. அதன்பின்னர் அதைக் கூட்டிலே சேமித்து வைக்கின்றது. இப்போது தேனீக்கள் இரு பகுதிகளாகப் பிரிந்து கூட்டின் இரு பக்கங்களிலுமிருந்துகொண்டு சிறகடித்துப் பறக்கின்றன. அதன்மூலம் குளிர் காற்றைக் கூட்டினுள்ளே செலுத்தவும் உஷ்ணமான, நீராவி படிந்த காற்றை வெளியேற்றவும் உழைக்கின்றன. இந்த 'ஏர் கண்டிஷனிங்' காரணமாகத்தான் மது, நீரை இழந்து கெட்டிப்பட்டுத் தேனாகிறது. இந்தச் சமயங்களில் எரிகிற தீக்குச்சி ஒன்றைத் தேன் கூட்டுக்கு அருகே கொண்டு போனால் ஒரு பக்கத்தில் ஜ்வாலை உள்பக்கமாக இழுக்கப்படுவதையும் எதிர்ப் பக்கம் அதை எடுத்துச் சென்றால் அப்பால் தள்ளப்படுவதையும் காணலாம்!









மாடல் 0374 :
6 வால்வ் . ஆல்-வேவ் . 4 பாண்ட்
பியானோ - கீ - ஸ்விட்ச்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)

யாராக இருந்தாலும் சரி....



உங்களுக்குப் பூரண
திருப்தி அளிப்பது

மர்பி
ரேடியோ



மாடல் 0322 :
6 வால்வ் . ஆல்-வேவ் . 3 பாண்ட்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)


மாடல் 266 :
7-வால்வ், ஆல்-வேவ் , 5-பாண்ட்
பியானோ-கீ-ஸ்விட்ச் . ஏஸி
மாடல் 0724 :
6-வால்வ்
ஆல்-வேவ்
8-பாண்ட் 'புஷ்
பாண்ட்ஸ்ப்ரெட்
ஏஸி அல்லது
ஏஸி/டிஸி
(இருமாடல்கள்)
மற்றும்
மாடல் 0737 :
(ட்ரை பாட்டரி)
7-வால்வ்
மாடல் 0352 :
5-வால்வ் . ஆல்-வேவ் . 3 பாண்ட்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி
(இரு மாடல்கள்)
மாடல் 0726:
7-வால்வ்
ஆல்-வேவ்
8 பாண்ட், புஷ்
பாண்ட்ஸ்ப்ரெட்
ஏஸி அல்லது
ஏஸி/டிஸி
(இருமாடல்கள்)
மாடல் 0752:
5-வால்வ்
ஆல்-வேவ்
3-பாண்ட்
ஏஸி அல்லது
ஏஸி/டிஸி
(இருமாடல்கள்)
மற்றும்
மாடல் 0751 :
(ட்ரை பாட்டரி)
5-வால்வ்
மாடல் 0298 :
5-வால்வ் . ஆல்-வேவ் . 3-பாண்ட்
ஏஸி/டிஸி
மற்றும்
மாடல் 0299 : (ட்ரை பாட்டரி)
4-வால்வ்
murphy radio
delights
the home!

நாவல் பிறக்கிறது

பிறவி ரகசியத்தைச் சொல்லலாமா? பாதகமில்லை.

"துடிக்குதென் உதடும் நாவும்; சொல்லு சொல்லெனவே நாவில் இடிக்குது குறளி அம்மே!" என்று குற்றாலக் குறவஞ்சியில் குறத்தி சொல்கிறாள் அல்லவா? சிருஷ்டி ரகசியமும் அது போலத்தான். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் இவ்வாறு இடிக்கின்ற அனுபவம் என்னுள்ளேயிருந்து மட்டும் புறப்படுவதில்லை. சமயங்களில் வெளியிலிருந்தும் ஏதாவதொன்று இடிக்கத்தான் நேர்ந்திருக்கிறது. 'இலக்கியத்தைத் தொழிலாகக் கொண்டவன் 'இன்ஸ்பிரேஷ' (Inspiration) னுக்காகக் காத்திருக்கக் கூடாது' என்று சிறந்த நாவலாசிரியரான சாமர்செட் மாம் உபதேசம் செய்கிறார். எனது 'இன்ஸ்பிரேஷனோ' சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும்; ஏதாவது ஒரு நெருக்கடியில்தான் பொங்கிப் புரண்டு கொண்டு வரும். நாவலை முடித்துத் தருவதாகச் சொன்ன தவணை நெருங்கிவிட்ட அல்லது தாண்டிவிட்ட நிலையில் பதிப்பாளரிடமிருந்து 'எஸ். ஓ. எஸ்.'கள் பறக்கும்; 'பேப்பர் வாங்கியாகி விட்டது; விளம்பரம் போட்டாகிவிட்டது; அச்சகத்துக்கு இரை போட்டாக வேண்டும்!' என்று அபயக் குரல் கிளம்பும்; கண்டனக் கணைகளும் பிறக்கும்! அதற்காகவே காத்துக் கொண்டிருந்த மாதிரி, அதுவரையிலும் அதோ இதோ என்று ஏமாற்றிக் கொண்டிருந்த என் பேனாவும் மூளையும் அசுரவேகத்தில்செயல்படத் தொடங்கும். அவ்வளவுதான். பக்கம் பக்கமாக நாவல் பிறக்க ஆரம்பித்து விடும்!

சிதம்பர ரகுநாதன்

இவ்வாறு நான் எழுத உட்காரும் காரியம் எனக்கு ஒரு மகாயக்ஞம் மாதிரி. கையிலே காப்புக் கட்டி, பல நாட்கள் விரதம் காத்து, அக்கினிப் பிரவேசம் செய்து நேர்ந்த கடனை முடிக்கும் பக்தனைப் போலத்தான் நான் அப்போது நடந்து கொள்வேன். அந்த நாட்களில் எனக்கு இரவும் பகலும் ஒன்றுதான். எழுதுவேன்; எழுதித் தள்ளுவேன். அப்போது வேறு எதுவுமே என் கவனத்தைத் திசை திருப்புவதில்லை. அப்போதெல்லாம் நான் பெரும்பாலும் தன்னுள்ளே தானாகத் தனிமையிலேதான் வாழ்வேன். ஆனால், உண்மையில் நான் 'தனிமை'யில் வாழ்வதில்லை. ஏனெனில் எனது நாவலில் வரும் பாத்திரங்கள் எல்லாம் (அவை ஓரிடத்திலே தலைகாட்டிவிட்டு மறைவதாயினும் சரி, அல்லது கதையின் அடிமுடி வரையிலும் நடமாடுபவையாயினும் சரி அவையெல்லாம்) பரிவாரம்போல் என்னுடனேயே இருக்கும். நான் எங்கு சென்றாலும் என் கூடவே அவைகளும் வரும். அவர்களில் யாரையேனும் அழைத்து, என்னோடு அமர்ந்து வெற்றிலை போடச் சொல்லாத குறையாக, அத்தனை பேரும் சதையும் ரத்தமும் கொண்ட பிறவிகளாய் என் மனவரங்கில் உலவித் திரிவார்கள். அத்தனை பேருடைய முக பாவனைகள், சாடை மாடைகள், அந்தரங்கங்கள் எல்லாம் எனக்குத் துலாம்பரமாகத் தெரியும். அவர்களையே துணையாகக் கொண்டு நான் நாவலைச் சில தினங்களில் எழுதி முடித்து விடுவேன். அநேகமாக அதே அவசரத்தில் அது அச்சிலும் வந்து விடும். என்றாலும் 'முற்றும்' போட்டு முடித்து விட்ட எழுத்துப் பிரதியின் கடைசிப் பக்கத்தைக் காணும்போது எழுகின்ற பெருமிதமும், திருப்தியும், ஆசுவாசமும் அச்சுப் பிரதியைப் பார்க்கும் காலத்தில் என்னில் எழுவதில்லை. 'ஈன்று புறந்தரும்' போது காணும் இன்பத்துக்கு எதுவுமே ஈடாவதில்லை.

இந்த ரகசியத்தை ஏன் சொல்ல வந்தேன் என்றால்—


எனது 'பஞ்சும் பசியும்' என்ற நாவலையும் நான் இதே அசுர வேகத்தில்தான் எழுத நேர்ந்தது. பதிப்பகத்தாருக்குச் சொன்ன தவணைக்குச் சுமார் இருபது தினங்களுக்கு முன்னர்தான் பேனாவை எடுத்தேன். தினசரி குறைந்தபட்சம் ஓர் அத்தியாயம் எழுதுவது என்பது திட்டம். அவ்வாறு பதின்மூன்று அத்தியாயங்கள் எழுதி முடித்தபின்னர் மறுநாள் என்னால் பேனாவைத் தொட முடிய

வில்லை. காரணம் என்ன தெரியுமா? அந்த நாவலின் முற்பகுதியில் கைலாச முதலியார் என்ற கடவுள் பக்தி மிகுந்த நெசவாளி ஒருவர் முதலிடம் பெறுகிறார். பதின்மூன்றாவது அத்தியாயத்தோடு அவருடைய வாழ்வும் முடிகிறது. அவர் தற்கொலை செய்து கொண்டு மாண்டு விடுகிறார். அவரைச் சாகடித்து விட்டு, மறுதினமே என்னால் கதையை நடத்திச் செல்ல முடியவில்லை. அவருக்காக மூன்று தினங்கள் என்னுள்ளே நான் 'துக்கம்' கொண்டாடிய பின்னர்தான் என்னால் மீண்டும் பேனாவைத் தொட முடிந்தது. நான் நினைத்திருந்தாலும்கூட அவரைச் சாவினின்றும் காப்பாற்றியிருக்க முடியாது. எத்தனையோ கைலாச முதலியார்கள் தற்கொலையைச் சரண் புகுந்த காலச் சூழ்நிலை அது! அதை நான் ஒருவனாக எப்படித் தடுத்து நிறுத்த முடியும்? அன்று அவர் சாக நேர்ந்ததுதான் யதார்த்த விதி. என்றாலும் அந்தச் சாவு என் உள்ளத்தைத் தொட்டது; சுட்டது.

இராம கதையில் இந்திரஜித் மகோந்நதமான பாத்திரம்தாம். என்றாலும் அவனுடைய மரணம் தருமத்தின் தவிர்க்க முடியாத விதி. இருந்தாலும் கதையின் இறுதியில் அத்தகைய பெரும் பாத்திரத்தைக் கம்பன் படைத்து, அவனை இலக்குவனின் கணைக்குக் காவு கொடுத்து விடுகிறான் அல்லவா? பின்னர் இறந்துபட்ட இந்திரஜித்தின் தலையைக் காட்டி 'செய்த கொலையினை நோக்கும்!' என்று கூறும் போது கம்பனது அந்தரங்கக் குரலே அதில் ஒலிப்பதைக் கேட்கிறோம் அல்லவா? அதே போன்று நானும் கைலாச முதலியாரின் கொலைக்குக் காரணமான சூழ்நிலையை எண்ணிக் குமைந்தேன். துக்கித்தேன். ஆனால் அந்த நாவல் வெளிவந்த பின்னர் அரசியல்வாதியும் இலக்கிய ரசிகருமான என் நண்பர் ஒருவர், "என் வாழ்க்கையில் நான் ஒரே ஒரு முறைதான் கண்ணீர் விட்டிருக்கிறேன், அதுவும் என் தந்தை இறந்த போது. கைலாச முதலியாரின் மரணத்தைப் படித்த போது என் கண்கள் கலங்கி விட்டன. என் வாழ்வில் இரண்டாம் முறையாகக் கண்ணீர் விட்டேன்" என்று எனக்கு எழுதினார். அதைப் படித்தபோதுதான் நான் துக்கம் கொண்டாடியதிலும் அர்த்தம் உண்டு என்பது ஊர்ஜிதமாயிற்று.

இதனால் எனது படைப்புக்கள் எல்லாம் அந்தக் கணத்திலேயே கருவுற்று, அந்தக் கணத்திலேயே சிசுபிண்டமாக அவதாரம் செய்து விடும் என்று அர்த்தமல்ல. சொல்லப் போனால் நாவல்கள் மட்டுமல்ல, சிறுகதைகளும்கூட என் மனக் குகையில் பல்லாண்டுக் காலம், பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பிறவிப் பேற்றைக் காணாமல் மோனச் சிறையில் தவம் கிடந்ததுண்டு. கன்னிக் கோழியின் வயிற்றுக்குள்ளேயுள்ள கருக் குலையைப்போல் என் உள்ளத்திலே கதாபாத்திரங்களும், சம்பவங்களும் என்றோ எப்போதோ கருப்பிடித்து உறங்கும்; வளர்ந்து கொண்டிருக்கும். ஆனால் எந்த நேரத்தில் எந்தக் கரு பூரண வளர்ச்சி பெற்று வெளியுலகத்தைப் பார்க்கும் என்பது எனக்கே தெரியாது. சமயங்களில் சின்னக் கருவே பெரிய கருக்களை முந்திக் கொண்டு வளர்ந்து விடும். இலக்கிய சிருஷ்டியின் பரிணாம விசித்திரம் அப்படி!

'பஞ்சும் பசியும்' சரித்திர நாவல். பத்தாண்டுகளுக்கு முன்னால் நமது நாட்டில் கைத்தறி நெசவாளர்கள் பட்ட அவலத்தையும் அதைப் போக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் சித்திரிக்கும் நாவல். அன்று எல்லோரையும் போலவே நானும் மவுண்ட் ரோட் ரவுண்டானாவாயினும், மங்கம்மாள் சாலையாயினும் எங்கும் எந்தத் திக்கிலும் பஞ்சையராகித் திரிந்த நெசவாளிகளைக் கண்டேன். நாட்டுமக்களின் மானத்தைக் காப்பதற்காக உழைத்த மக்கள் தங்கள் மானத்தைக் காப்பதற்கு வகையற்றுத் திரியும் அலங்கோலத்தைக் கண்டேன். ஆணும் பெண்ணும் குழந்தை குட்டிகளும் அல்லோலகல்லோலப் பட்டுச் சீரழிவதைப் பார்த்தேன். அவற்றைக் கண்டபோது எனது உள்ளமும் உதடும் துடித்தன. அவற்றைச் 'சொல்லு, சொல்லு!' என்று என் மனக்குறளி இடித்தது. ஆம், அவற்றைச் சொல்லத்



தான் வேண்டும்! எப்படிச் சொல்வது? அந்த மக்களோடு சேர்ந்து நானும் கண்ணீர் வடிப்பதா? நான் அழுகுணிச் சித்தன் அல்ல. கண்ணீர் விடுபவனோடு கண்ணீர் விடுவது, அவனுடன் சேர்ந்து ஒப்பாரி வைப்பது எழுத்தாளனுக்கு அழகல்ல. கண்ணீரைத் துடைக்க வழி காணும் பாதையிலே செல்பவன்தான் சிறந்த எழுத்தாளன். மனிதத் தன்மையை இழந்து நிற்கும் அந்தப் பிறவிகளை மனிதர்களாக்கிக் காட்ட வேண்டும் என்று நினைத்தேன்; வெறும் ஜீவ காருண்ய உணர்ச்சியான மரக்கறிவாதம் அதற்குப் பயன்படாது என்பதும் எனக்குத் தெரியும். எனவே நான் அன்றைய சரித்திரச் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள முனைந்தேன். அதன் காரண காரியங்களை ஆராய்ந்தேன்; அதற்காக எவ்வளவோ படித்தேன். அந்தத் துறையிலே அனுபவம் மிகுந்தவர்களிடம் பேசினேன். நெசவாளர்களின் துன்ப துயரங்களையும் பிரச்னைகளையும் அந்தச் சமூகத்தாரிடமிருந்தே கண்டும் கேட்டும் அறிந்தேன். காதில் விழுந்த செய்திகள், கண்ணில் பட்ட நிகழ்ச்சிகள் முதலியவற்றைக் கவனம் செய்து என் ஏட்டில் பதிவு செய்து கொண்டேன். இவ்வளவும் செய்த பின்னர் எனக்குக் கிடைத்தது என்ன? கதையின் ஆதார கருதியாக விளங்க வேண்டிய சரித்திர தத்துவ தரிசனம்தான். ஆனால் சரித்திரமோ, தத்துவமோ மட்டும் இலக்கியமாகி விடுவதில்லையே! உயிரும் உணர்ச்சியும் சதையும் ரத்தமும் கொண்ட கதாபாத்திரங்கள் அல்லவா கதையை, நாவலை உருவாக்க முடியும்! காலம், களம் என்ற கட்டுக்கோப்பமைதியில் அல்லவா அந்தப் பாத்திரங்கள் நடமாட வேண்டும்! காலத்தைப் பற்றிய தரிசனத்தைச் சரித்திரம் தந்து விட்டது. அடுத்தாற் போல் களத்தை நிர்ணயிக்க வேண்டும்.

எனது நாவலில் கதை நிகழும் பிரதான இடங்களாக அம்பாசமுத்திரமும், மதுரை நகரும் இடம் பெற்றன. அம்பாசமுத்திரம் சிறு வயதிலிருந்தே என்னைக் கவர்ந்த ஊர்; மதுரைக்கு என் இதயத்திலே தனி மதிப்பும் இடமும் உண்டு. மேலும் நான் கையாள நினைத்த கதைப் பொருளுக்கு அவை ஏற்ற இடங்களாகத் தெரிந்தன. அம்பாசமுத்திரத்தை நான் திறம்படவே சித்திரித்தேன். எனது நாவலை செக் மொழியில் மொழி பெயர்த்த கமில் ஸ்வலெபில் என்ற செக் நாட்டு அறிஞர் தமிழகத்துக்கு வந்தபோது, என்னிடம் "நான் அம்பாசமுத்திரத்தைப் பார்க்க வேண்டுமே. உங்கள் கதையிலிருந்து என் மனத்தில் அதைப் பற்றி ஓர் உருவம் படிந்திருக்கிறது. இருந்தாலும் கற்பனையும் யதார்த்தமும் எப்படி இருக்கின்றன என்று பார்க்க வேண்டாமா?" என்று கூறினார். அவர் மதுரைக்கு வந்தார்; எனினும் அம்பாசமுத்திரத்தைப் பார்க்க அவருக்குக் கொடுத்து வைக்கவில்லை. அதற்குள் அவர் தமது தாயகத்துக்குத் திரும்பி விட்டார். எனது கதைக் களத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை ஓர் அன்னிய நாட்டாரின் மனத்தில் எனது நாவல் உருவாக்கி விட்டதல்லவா? அது எனக்கு ஒரு வெற்றிதான்.

இனி, பாத்திரங்கள்: என் கதையில் வரும் பாத்திரங்கள் எல்லாம் குறிப்பிட்ட சரித்திர காலத்தைச் சேர்ந்தவர்கள். ஆனாலும், அவர்கள் எல்லாம் எந்தக் காலத்திலோ என் மனத்தில் கருப்பிடித்து வளர்ந்தவர்கள். சிறு வயதிலேயே எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் நெசவைத் தொழிலாகக் கொண்ட ஒருவர் தறி வைத்திருந்தார். அந்தத் தறியில் தாள லயம் தவறாது எழும் சத்தத்தையும் ஊடும் பாவும் பின்னிப் பிணையும் அதிசயத்தையும் நான் மணிக்கணக்கில் கண்டு கேட்டு அனுபவித்திருக்கிறேன். மேலும் நெல்லையில் நான் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே நெசவாளர் சமூகத்தினர் அதிகம். அவர்கள் மத்தியிலே எனக்கு நண்பர்களும் உண்டு. எனவே இளம் வயது முதலே என் உள்ளத்திலே சதையும் தசையும் கொண்ட உருவங்களாக எத்தனையோ பேர் பதிந்துபோய் விட்டார்கள். மேலும் எந்தச் சமூகத்தினர் ஆனாலும் மனிதர்கள் மனிதர்கள்தானே. எனவே எனது நாவலின் கதாபாத்திரங்கள் பெரும்பாலும் நெசவாளி சமூகத்தினர்தான் என்றாலும், அந்தப் பாத்திரங்களை வடித்து உருவாக்குவதில் நான் வாழ்க்கையில் கண்ட எல்லாச் சமூகத்தையும் சேர்ந்த மனிதர்கள் பலரும் பயன்பட்டார்கள்.

எனது நாவலில் வரும் கைலாச முதலியார், மைனர் முதலியார், வடிவேலு முதலியார், இருளப்பக்கோனார், தர்மாம்பாள், வீரையா, சங்கர், கமலா, மணி முதலிய பாத்திரங்களைப் படைத்தபோது அவர்கள் ஒவ்வொருவருடைய குணம்சங்களையும் பெற்ற எத்தனையோ பேர்கள் என் மனத்தில் எழுந்தார்கள். உதாரணமாக, கைலாச முதலியாரின் குணம்சங்களைப் பெற்ற பல்வேறு கைலாச முதலியார்கள் சேர்ந்துதான் ஒரு கைலாச முதலியாராக உருவானார்கள். என்றாலும், அவர்கள் அத்தனை பேரிலும் யாராவது ஒருவர்தான் என்முன் பிண்டப் பிரமாணமாகக் காட்சி அளித்தார்.



துரிதமாக
சுவையான
ஒரு பலகாரம்
மொனகோ

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப் படுத்து கிறது


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆன் மோல்ரோப்" பரிசோதனைகளில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையையும்விட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.

சொத்தைபாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பல்லில் சொத்தை பாக்கும் கிருமிகள் அழிகின்றன

கால்கேட்டின் பிரத்தியேகமான சோதனை முறையைக் கொண்ட குளோரோபிலின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபிலின் பூரண தன்மையை அடைந்து, ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க உதவுகிறது. உண்மையான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட் சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை வாசிப்பதில் மிக்க அனுபவம்கொண்ட உலகிலே மிகப்பெரிய ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்படுகிறது!

வேறு எந்த பற்பசையிலும்
இதைவிட அதிக வீரிய குளோரோபில்
இல்லை — குழந்தைகள் அதன்
பெப்பர்மின்ட் வாசனையை மிகவும்
விரும்புகிறார்கள்!



பெரிய எக்கானமி
சைஸ் லாபகரமானது!

CTPA-G-10 TAM.

நாவல் பிறக்கிறது

அடுத்த இதழில்

சிதம்பர சுப்பிரமணியன்

தமது அநுபவங்களை எழுதுகிறார்!

இப்படி ஒவ்வொரு பாத்திரமுமே பல்வேறு பாத்திரங்களின் திரட்சி என்ற போதிலும், அவர்களில் ஒருவர்தான் ஒவ்வொரு பாத்திரத்தின் கண்கண்ட உருவமாக என் முன்னே நின்றார். அந்த 'ஒருவர்'கள் எனக்கு மிகவும் வேண்டிய நண்பர்களாகவும் இருக்கலாம்; எனக்குப் பிடிக்காதவர்களாகவும் இருக்கலாம். எங்கோ எப்போதோ கண்ட பின் மறக்க முடியாது என் உள்ளத்தில் தமது உருவைப் பதித்தவராகவும் இருக்கலாம். இவர்களிலே வியாபாரிகள், அரசியல்வாதிகள், மாணவர்கள், மாணவிகள், மைனர்கள், தொழிலாளிகள் பலரும் உண்டு. அவர்கள் இன்னின்னார்தான் என்ற ரகசியத்தை வெளிப்படையாக நான் எடுத்துக் கூறிவிடலாமா? அப்புறம் ஆபத்தாயிற்றே!

சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட நாக சர்ப்பம்போல், இந்தப் பாத்திரங்கள் எல்லாம் நான் எடுத்துக்கொண்ட சரித்திர கதிக்குக் கட்டுப்பட்டு, கதையை அவர்களே நடத்திச் சென்றார்கள். நானும் அந்தச் சரித்திர கதிக்குக் கட்டுப்பட்டவன். எனவே நான் எனது இஷ்டத்துக்கு எதையும் உருவாக்கிவிட முடியாது. சொல்லப் போனால், ஒவ்வொரு பாத்திரமும் 'சாமி குடி புகுந்தமாதிரி' அந்தந்தச் சமயத்தில் என்னுள்ளே கூடுவிட்டுக் கூடு பாய்ந்து நின்று அவர்களே கதையை உருவாக்கினார்கள். நான் அந்தக் கதா பாத்திரங்களின் கருவியாகத்தான் பயன்பட்டேன். அவர்கள் பேசியபோது நானும் பேசினேன். அவர்கள் சிரித்தபோது நானும் சிரித்தேன். அழுதபோது நானும் அழுதேன்; குமுறியபோது குமுறினேன். தர்க்கித்தபோது தர்க்கித்தேன். அவர்கள் வாழ்வுக்காகப் போராடிய போது நானும் போராடினேன்; அவர்கள் இறந்தபோது நானும் அந்தக் கணத்துக்கு இறந்து மீண்டேன். இறுதியில் நாவலின் முடிவில் "பல்வேறு சிற்றாறுகளைத் தன்பால் இழுத்துச் சேர்த்து மகாப் பிரவாகமாகப் பரிணமித்துச் செல்லும் ஜீவ நதியைப் போல்" நாவலின் கதாநாயகர்களான நெசவாளிகள் ஊர்வலமாகச் செல்லும் போது நானும் அந்த ஜீவ நதியில், ஊர்வலத்தில் ஒரு துளியாகக் கலந்து நடந்தேன். ஆமாம்! அவர்களோடு நான் "நடந்தேன். நடக்கின்றேன். நடந்து நடந்தேகுகின்றேன்!"

ஊர்வலம் என்று சொன்னவுடன் எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. 'பஞ்சும் பசியும்' நாவலில் மதுரை நகரில் நடைபெறும் இரண்டு பிரும்மாண்டமான ஊர்வலக் காட்சிகள் வருகின்றன. நாவலின் சிகர கும்பங்களாக இடம்பெறும் நிகழ்ச்சிகள் அவை. அந்தக்காட்சிகளைப் பிரத்தியட்ச சொரூபமாகச் சொல்லில் வடித்தெடுக்க நான் எவ்வளவு வெறி வேகத்தில் இருந்தேன் என்பது வேறு விஷயம். எனினும்எனதுநாவலை விமர்சிக்க நேர்ந்த எழுத்தாளர் ஒருவர் அந்தக் காட்சிகளுக்கான 'இன்ஸ்பிரேஷனை' நான் மாக்ஸிம் கார்க்கியிடமிருந்துதான் பெற்று, அதனைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதாக வலிந்து குற்றம் சாட்டினார். ஆனால் பாவம், உண்மை அதுவல்ல.

என்னைப் பொறுத்த வரையில் நான் மாணவப் பருவத்திலேயே தேசியப் போராட்டக் காலத்தில் பல ஊர்வலங்களை யெல்லாம் உருவாக்கியவன்; அந்த ஊர்வலங்களுக்குத் தலைமை தாங்கியவன்; பங்கெடுத்தவன். அந்தக் காலத்தில் தடியடிப் பிரயோகத்துக்கு இரையான ஊர்வலங்களிலும் கூட ஒன்றி நின்றவன். மேலும் மதுரை நகரிலேயே இரண்டு லட்சம் பேர்கள் கொண்ட பிரும்மாண்டமான ஊர்வலத்தைக் கண்டவன்; களித்தவன். அதன் காந்த சக்திக்கு ஆட்பட்டவன். 'பாரடா! என்னோடு பிறந்த பட்டாளம்' என்ற உணர்வைப் பெற்றவன். எனவே அத்தகைய ஊர்வலக் காட்சியைச் சொல்லாட்சித் திறனோடு உருவாக்கும் சந்தர்ப்பத்தைத்தான் எதிர்நோக்கியிருந்தேன்.

'பஞ்சும் பசியும்' எனக்கு அந்தச் சந்தர்ப்பத்தைத் தந்தது. ஏனெனில் எழுத்தாளன் என்பவன் வாழ்க்கையில் பார்வையாளனாக இருக்கக் கூடாது; பங்குதாரனாக இருக்க வேண்டும் என்று கருதுபவன் நான். வாழ்க்கைதான் இலக்கிய கர்த்தாவுக்கு வற்றாத கருவூலம். அதுதான் அவனுக்கு சர்வத்தையும் வழங்குகிறது.

அந்த வாழ்க்கையிலே கலந்து நிற்கத் தெரியாமல் நத்தை மாதிரி தன்னுள்ளே தானும் உடம்பையும் உள்ளத்தையும் சுருக்கிக் கொள்பவன்தான் 'இன்ஸ்பிரேஷ'னுக்காக அடுத்தவனிடம் முந்திப் பிச்சை கேட்க வேண்டியிருக்கும்!



எனது நாவல் வாழ்க்கையிலிருந்தே பிறந்தது; வாழ்க்கையிலே வேரூன்றி நிற்பதன் காரணமாகத்தான் அதன் வலுவையும் வெற்றியையும் யாரும் அலட்சியப்படுத்த முடியவில்லை. எனது அரசியல் போக்கையும் இலக்கிய நோக்கையும் ஒப்புக் கொள்ளாதவர்களும் ஒதுங்கி நிற்பவர்களும்கூட, அந்த நாவலின் கதாபாத்திரங்களின் வலுவையும் வனப்பையும் புறக்கணிக்க முடியவில்லை. அரை மனசு குறை மனசாகவேனும் அதை ஒப்புக் கொண்டாக வேண்டி நேர்ந்தது.

தமிழ் இலக்கியத்திலே புதியதொரு பாதையை அந்த நாவல் வகுக்க முயன்றது. அதில் முன்னோடியாகத் திகழ்ந்த காரணத்தினாலேயே, அந்த நாவல் அன்னிய நாட்டிலும் மொழி பெயர்க்கப்பட்டு, தமிழுக்கும் எனக்கும் பெருமையைத் தேடித் தந்தது.

இன்றும் அந்த நாவலை எண்ணிப் பார்க்கும்போது—


அதோ மைனர் முதலியார்வாளின் 'கான்பூர் நைட்குயீன்' ஸெண்டின் மணம் என் மூக்கைத் துளைக்கிறது; கைலாச முதலியார் பூசும் திருச்செந்தூர் பன்னீர் விபூதியின் மணம் கமகமக்கிறது; தர்மாம்பாளின் புதுப் பட்டுப் புடவை சரசரக்கும் ஓசை கேட்கிறது; தாதுலிங்க முதலியாரின் பியூக் காரின் பயங்கர உறுமல் காதைச் செவிடுபடச் செய்கிறது; "பொருமிப் பொருமி வீசும் மேல் காற்று தன் ஜீவனைப் பறித்துக் கொண்டு விடாதவாறு உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்" மெலிந்த தீச்சுடரைப் போல் இருளப்பக் கோனார் நடமாடுவது என் கண்ணுக்குத் தெரிகிறது. வடிவேலு முதலியாரின் வைரம் பாய்ந்த உரிமைக் குரல் என் காதில் இனிய நாதமாக விழுகிறது.....

ஆமாம். அவர்களை நான் மறக்க முடியாதுதான். அவர்கள் வெறும் கற்பனை வடிவங்கள் அல்ல; நம்மோடு வாழ்ந்தவர்கள்; வாழ்பவர்கள். அவர்களை எப்படி மறப்பது?


எட்டு ஆண்டுகளுக்குப் பின்னால், மீண்டும் 'பஞ்சும் பசியும்' நாவலைப் புரட்டிப் பார்க்கும்போது, அதிலுள்ள சிற்சில குறைபாடுகள் எனக்குத் தெரியத்தான் செய்கின்றன. தெரிந்தாலென்ன? எனது குறையினை நானே கண்டுகொள்ள முடிகிறது என்றால், நான் வளர்ந்திருக்கிறேன் என்றுதானே அர்த்தம்!


"தச்சு வேலையில் சிறந்தவன்" என்று அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.
நான் பலவீனமடைந்து சரியாக வேலையே செய்ய முடியவில்லை. எங்கள் மேஸ்திரி தினமும் இரண்டு வேளை போர்ன்-வீடா அருந்தச் சொன்னார்.
அவருடைய டாக்டரும் அதையே சொன்னாராம். நானும் அதைக் கடைப் பிடித்தேன். சக்தியும் பலமும் பெற்று ஊக்கத்துடன் வேலை செய்ய முடிந்தது.
இப்பொழுது அதிக வேலைகூட என்றால் செய்ய முடிகிறது.
எல்லாம் போர்ன்-வீடா தந்த சக்தி.


Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் இவ்வளவு
திறமையாக
வேலை செய்வதற்கு
சக்தியளித்தது
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்



கார்ன் புராடக்ட்ஸ் கம்பெனியைச் சேர்ந்த திரு ஹரிஹரனுக்கும் சௌ. பார்வதிக்கும் அதி விமரிசையாகக் கல்யாணம் சமீபத்தில் நடைபெற்றது.




திரு பி. ஜி. ராமசாமி அவர்களின் புதல்வி சௌபாக்யவதி விமலாவுக்கும் திரு சுப்பிரமணியத்துக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.




சென்னை அகௌண்டெண்ட் ஜெனரல் காரியாலய ஆடிட்டர் திரு சுந்தரராஜனுக்கும் சௌபாக்கியவதி கன்யாவுக்கும் வெகு சிறப்பாக விவாகம் நடந்தது.



கீழையூர் நியூஸ் ஏஜண்ட் திரு துரைராஜன் அவர்களின் சகோதரர் திரு ராமையனுக்கும் சௌபாக்கியவதி வேதநாயகிக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது.



பம்பாய் திரு ஏ. எஸ். சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌ. ராஜலக்ஷ்மிக்கும் திரு பாலசுப்பிரமணியத்துக்கும் வெகு விமரிசையாகக் கல்யாணம் நடைபெற்றது.



நெய்வேலி கல்கி ஏஜண்ட் ஸ்ரீ டி. என். முதலியார் அவர்களின் சகோதரி சௌபாக்கியவதி கஸ்தூரிக்கும் திரு பார்த்தசாரதிக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.



திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

18

மக்கள் நல்வழியினின்று தவறாமல் செல்வதற்காகப் பல அறவுரைகளை அமுதத் தமிழிலே குழைத்து ஊட்டுகிறார் திருமூலர். இந்த அறவுரைகள் மூன்று வகைப்படும்.

பாவம் செய்யாதீர்கள் என்று சொல்லுவது புனித தருமத்துக்கு அடிப்படையான உபதேசம். பாவங்களைச் செய்யாமல் இருப்பதோடு, புண்ணியச் செயல்களைப் புரியுங்கள் என்பது இரண்டாவது. இந்த இரண்டும் கலந்ததே வாழ்க்கையின் ஒழுக்க நெறி. இனி, இந்த இரண்டோடு மூன்றாவது உபதேசம் என்னவென்றால், இறைவனுடைய பேரின்பத்தை இந்த உடம்போடு இருக்கும்போதே பெற்று அனுபவிக்க வேண்டும் என்பது!

திருமூலருடைய உபதேசத்தின் இந்த மூன்று பாகுபாடுகளும் திருமந்திர நூல் முழுதும் பரந்து விளங்கக் காண்கிறோம்.

வாழ்வில் மக்கள் விலக்க வேண்டிய தீச் செயல்களை எடுத்துக் கூறும் முனிவர், புண்ணியச் செயல்கள் சிலவற்றை வரிசைப்படுத்திச் சொல்லி, இவற்றை நாள்தோறும் செய்து வாருங்கள் என்று உபதேசிக்கிறார்.

உள்ளத்தில் கருணையை வளர்த்துக் கொள்ளுங்கள், இதுவே மனிதப் பண்பாகும் என்று சொல்லி, ஈகையின் சிறப்பை விளக்குகிறார்.

ஆர்க்கும் இடுமின்
அவர்இவர் என்னன்மின் :

பசித்தவர் யாராயிருந்தாலும் உணவு இட்டு உதவுங்கள். வேற்றுமை பாராட்டாதீர்கள். என்னன்மின்— என்று சொல்லாதீர்கள். அதாவது பாவிக்காதீர்கள்.

ஆர்க்கும் இடுமின்
அவர்இவர் என்னன்மின் ;
பார்த்திருந்து உண்மின் ;

[பார்த்திருந்து உண்மின் — யாராவது பசித்தவர்கள் வருகிறார்களா என்று பார்த்துவிட்டுப் பிறகு சாப்பிட உட்காருங்கள்.]

இனி, போஜன நியமத்தை எடுத்துச் சொல்லுகிறார்.

பழம்பொருள் போற்றன்மின்

[பழம்பொருள்—சமைத்து உண்டு பின் மீந்துபோனதை மறுநாளைக்கு என்று வைப்பது. போற்றன்மின்— உண்ணாதீர்கள்.]

வேட்கை உடையீர்
விரைந்துஒல்லை உண்ணன்மின்

[வேட்கை உடையீர்—பசி அதிகமாக உண்டாகியதனால், அக்கினியில். விரைந்து ஒல்லை உண்ணன்மின்—ஆத்திரத்துடன், நிதானமின்றி, விழுங்காதீர்கள்.]

காக்கை கரைந்துண்ணும்
காலம் அறிமினே

[காக்கை கரைந்துண்ணும் காலம்— காக்கை உணவைக் கண்டபோது பிற காக்கைகளையும் அழைத்தே சாப்பிடுகிற இயற்கைக் குணத்திலிருந்து. அறிமினே — வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்து கொள்ளுங்கள்.]

தானங்களில் எல்லாம் சிறந்தது, பசித்தவருக்கு உணவளித்தல். உணவு உண்ண வேண்டிய ஆரோக்கிய முறையைச் சொல்லவந்த முனிவர், பசித்தவருக்குக் கொடுத்துவிட்டு அதன்

பிறகே சாப்பிடுங்கள் என்பதையும் சேர்த்து ஏன் சொன்னார்? நிதானமாக மென்று சாப்பிட வேண்டியது எப்படி போஜன விதியோ, அதுபோல எளிய வருக்குக் கொடுத்து விட்டு அதன் பிறகே சாப்பிட வேண்டும் என்பதும் உணவுக் கிரமத்தில் ஒன்று என்று பாடுகிறார். மென்று சாப்பிடுவது வைத்திய முறையிலே உடம்பின் ஆரோக்கியத்துக்கு உகந்த முறை. அதுபோலவே எளியவருக்கு உணவு அளிப்பதும் ஆரோக்கிய வாழ்வுக்கு இன்றியமையாமல் வேண்டப்படுகிறது!

ஆர்க்கும் இடுமின்
அவர்இவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின்
பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர்
விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும்
காலம் அறிமினே!

இனி, தினசரி வாழ்க்கையில் மறவாமல் செய்ய வேண்டிய சில கடமைகளை எடுத்துச் சொல்லுகிறார் முனிவர்.

யாவர்க்கும் ஆம் இறை
வற்குஒரு பச்சிலை

[இறைவற்கு—இறைவனுக்கு. இலிங்கம் அல்லது மூர்த்தி. யாவர்க்கும்—ஏழை தனவந்தன் எல்லாருக்குமே பொதுவாக. ஆம்—ஆகும், அதாவது செய்யக்கூடிய எளிய காரியம் ஆகும்.]

தினந்தோறும் பூஜையில் ஒரு பச்சிலையை எடுத்து அர்ச்சனை செய்வது எளிய காரியமே ஆகும். அதை ஒரு கிரமமாக வைத்துக் கடைப்பிடிக்க வேண்டும்.

யாவர்க்கும் ஆம் இறை
வற்கொரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசு
வுக்குஒரு வாய்உறை

[ஒரு வாய் உறை—ஒரு வாய் ஏதேனும் உணவு.]

பசு என்பது எந்த ஊமைப் பிராணியையும் குறிக்கும். பசுவுக்கு ஒரு வாய் உணவு கொடுப்பது யாவர்க்கும் ஆகக் கூடிய எளிய செயல். இது ஜீவ காருண்யத்தை வளர்க்கிற தினசரி ஒழுக்கமுறை. இதைச் செய்யுங்கள்.

யாவர்க்கும் ஆம், உண்ணும்
போதுஒரு கைப்பிடி

தாம் உண்ணும்போது ஒரு பிடி பலியாக எடுத்து வைப்பது பழைய ஆசாரம். உணவில் ஒரு கவளம் பிற ஜீவனுக்கு என்று வைத்து விடுவது புராதன வழக்கம். இது எல்லாராலும் ஆகக் கூடிய அறச் செயல் தான். இதைத் தவறாமல் செய்ய வேண்டும் என்கிறார் முனிவர்.

பிற ஜீவன்களுக்கு உணவு தருவதன் கடமையையும் எளிமையையும் சொல்லும்போது, முனிவருடைய உள்ளம் இதைப்போலவே எளிய வேறு சில மனித தர்மங்களைப் பற்றிச் செல்கிறது. இனிமையாகப் பேசுவது எவ்வளவோ எளிதாக இருந்தும், அதில் எவ்வித நஷ்டமும் இல்லை என்பது தெரிந்தும், ஏன் மக்கள் அதை மறந்து கடுஞ்சொல் பேசுகிறார்கள் என்று வருந்தி அதையும் சேர்த்துப் பாடுகிறார்.


யாவர்க்கும் ஆம் பிறர்க்கு
இன்னுரை தானே!

பிறரிடம் கடுஞ்சொல் பேசாமல் எதைச் சொல்லும்போதும் இனிய வார்த்தைகளைப் பேசுவது எல்லாராலும் ஆகக் கூடிய செயல்தான். அதைப் பழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

ஆண்டவனை வழிபடுவதும், பிற உயிர்களிடத்தில் கருணை செலுத்துவதும், இனிய பேச்சும் வாழ்க்கைப் பண்பாடாகும். இந்தக் கடமைகளை எவ்வளவு ஏழையாக இருந்தாலும் எல்லாராலும் செய்ய முடியும். அதைச் செய்ய வேண்டும் என்பதை யாவர்க்கும் புரியும்படியான தமிழில் எடுத்துச் சொல்லுகிறார் முனிவர் இந்தத் திருமந்திரப் பாட்டில்.

யாவர்க்கும் ஆம்இறை
வற்கொரு பச்சிலை;
யாவர்க்கும் ஆம் பசு
வுக்கொரு வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும்
போதொரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்
கின்னுரை தானே!

இந்தப் பாட்டில் சொல்லியுள்ளவற்றை ஒருவன் செய்தானானால், அவன் பாரதநாட்டின் பண்பாட்டில் பூரணம் அடைந்தவன் ஆவான்.





புது வெள்ளம்

அத்தியாயம் மூன்று

வரலாற்றுச் சிறு துளி

முருகையன் ரயிலின் சன்னல் கதவோரம் சாய்ந்து கொண்டு பெட்டிக்குள்ளிருந்த பிரயாணிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான். வெள்ளைக்கார ஆட்சிதான் இந்த நாட்டுக்கு ரயில்களைக் கொண்டு வந்தது என்று அவன் வரலாற்றுப் பாடத்தில் படித்தது இப்போது அவன் நினைவுக்கு வந்தது.

அவர்கள் கொண்டு வந்த ரயிலின் வசதிகளை நம்மவர்களும் அனுபவிக்கும் உரிமைகளைப் பெற்று விட்டார்கள். அந்த உரிமைகளை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதை மட்டும் இன்னும் பலர் தெரிந்து கொள்ளாமலிருந்தது முருகையனுக்கு வருத்தத்தைத் தந்தது. எதிலும் ஓர் ஒழுங்கில்லை; கட்டுப்பாடில்லை; கூடிய வரையில் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் பிரயாணம் செய்ய வேண்டுமே என்ற ஒரு பொறுப்பில்லை.

மூட்டை முடிச்சுக்கள் அங்கும் இங்குமாக அலங்கோலமாய்க் கிடந்தன. சாப்பிட்டு முடித்த உணவுப் பொருள்களின் மீதப் பகுதிகள் பலகைகளில் ஒட்டிக் கொண்டிருந்தன. ஓர் இளைஞன் வாழைப் பழங்களை உரித்து உரித்து உள்ளே தள்ளிக் கொண்டே, தோல்களைத் தன் காலடியில் போட்டுக் கொண்டு வந்தான். அவற்றைச் சன்னல் வழியாக வெளியே எறிய வேண்டுமென்றால், ஒரு முறை எழுந்திருக்க வேண்டுமே என்ற சோம்பல் அவனுக்கு!

இதைப் பார்த்துக் கொண்டு வந்த குருசாமி தன் இடத்திலிருந்து எழுந்தான்; குனிந்து சோம்பேறியின் காலடியில் துழாவினான்; தோல்களை எடுத்து வெளியில் வீசினான்.

வீசி விட்டு, "தம்பி! நம்ப நாட்டிலே மாத்திரம் வாழைப்பழம் தோலில்லாமல் பழுத்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்?" என்று கேட்டு விட்டுச் சிரித்தான்.

முருகையனுக்குக் குருசாமியின் கலகலப்பான பேச்சும், அவனுடைய சுறுசுறுப்பான சுபாவமும் பிடித்திருந்தன. அவன் மிகவும் பிரபலமான நடிகன் இல்லையென்றாலும், பலர் அவனது நடிப்பைக் கண்டு களித்திருக்கிறார்கள். பெரும்பாலும் புராண நாடகங்களையே நடத்தும் 'பாய்ஸ்' கம்பெனியில் அவன் இருந்தாலும், இடையிடையே வந்து, பாரதியின் தேசியப் பாடல்களைப் பாடிவிட்டு, அவன் உள்ளே ஓடி விடுவான். 'வெள்ளைக் கொக்குப் பறக்குதடி, பாப்பா!' என்ற விசுவநாத தாசின் பாட்டை அவன் பாடாத மேடைகள் கிடையாது.

குருசாமி, தான் கேட்ட கேள்விக்கு முருகையன் பதிலளிக்காமல் இருப்பதைக் கண்டு, "ஏண்ணே, எதுக்காகச் சிறைக்குப் போயிட்டு வந்திங்கன்னு இன்னும் சொல்லலையே?" என்று கேட்டான்.

"நீங்க எந்த ஊருக்குப் போகப் போறீங்க?"

"திருச்சி தாண்டிப் போகணும்."

"அப்போ, மெதுவாய்ச் சொல்லுறேன்" என்றான் முருகையன்.

மற்றவர்களுக்கு முன்பு முருகையன் அதைச் சொல்ல விரும்பவில்லையோ, அல்லது அவ்வளவு முக்கியமான விஷய



மாக அதை அவன் நினைக்கவில்லையோ, அல்லது அருகில் எங்கேயாவது ரகசியப் போலீஸார் இருக்கக் கூடும் என்று அவன் தயங்கினானோ தெரியவில்லை.

முருகையன் சிறைக்குச் சென்றவிஷயம் மிகச் சாதாரணமானதுதான். ஆனால் அதற்கான காரணச் சூழ்நிலை இருக்கிறதே, அது இந்த நாட்டு மக்களின் அடிப்படை வரலாறு ஆகும். அதைச் சிறிது பின்னால் புரட்டிப் பார்த்தால் முன்னே போவதற்குள்ள வழிகள் அங்கே தென்படக் கூடும்.

தெற்கே கன்னியாகுமரியிலிருந்து வடக்கே இமயம் வரையிலும் அப்போது விடுதலை உணர்ச்சி என்கிற பெருவெள்ளம் பொங்கிப் பெருகி அலைமோதிக் கொண்டிருந்தது. அமைதியாக வாழ்ந்த மக்களை அலைக்கழிக்க வந்த வெள்ளமல்ல அது: அடிமைத் தளைகளையும் சுரண்டல் முறைகளையும் வேரறுக்க வந்த சத்தியப் பெரு வெள்ளம். ஏழை எளியவர்களுடைய கூரைக் குடிசைகளையோ, உயிர் உடைமைகளையோ அடித்துக் கொண்டு போவதற்கு அது வரவில்லை. முற்றிலும் மாறாக அழிவை நோக்கித் தேய்ந்து கொண்டிருந்த நம் சமுதாயத்துக்குப் புத்துயிரும் புது வாழ்வும் கொடுக்க வந்த புனித வெள்ளம்–அதுவே மகாத்மா காந்தி என்ற மனித வெள்ளம்; தியாகப் பெரும் புனல்!

அந்த வெள்ளத்தின் குமுறல் ஒலி நாடெங்குமிருந்த நல்லவர்களின் நெஞ்சுகளிலெல்லாம் எதிரொலித்துக் கொண்டிருந்தது: "நம்முடைய மக்களின் ரத்தத்தை உறிஞ்சிக் குடித்து, அவர்களை நிரந்தர அடிமைகளாக, தன்னம்பிக்கை அற்றவர்களாக மாற்றி வருகிறது ஆங்கில ஆட்சி. பொருளாதாரச் சுரண்டல்களால் நம் புற வாழ்வும் அக வாழ்வுமே பாழ்பட்டு வருகின்றன. நமக்குப் புற வாழ்வுச் சுதந்திரம் வந்து, நாம் அக வாழ்விலும் விடுதலை பெற்று விறு கொண்டெழ வேண்டும். பரிபூரண விடுதலையே நமது லட்சியம்!"

காந்தியம் என்கிற புரட்சி வெள்ளத்தில் குதித்துத் தீமையைச் சாடுவதற்காகப் புறப்பட்டவர்கள் தாம் எத்தனை பேர்கள்! ஒன்றுமே அறியாத கிராமவாசிகள், வக்கீல்கள், வணிகர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், மாணவ மாணவிகள், ஏழைகள், பணக்காரர்கள்-இப்படிப் பலதரப்பட்டவர்களையும் ஒன்றாகக் காந்தியம் கவர்ந்து விட்டது.

எங்கு பார்த்தாலும் கூட்டங்கள், ஊர்வலங்கள், பேச்சுக்கள், பாடல்கள், எழுத்துக்கள், எழுச்சி தரும் நிகழ்ச்சிகள்! ஆங்கிலேயர்கள் இவ்வளவையும் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பார்களா? கூட்டங்கள், பேச்சுக்கள், எழுத்துக்களுக்குத் தடை! பத்திரிகைகளுக்குத் தடை! நாடகங்களுக்குத் தடை! மீறியவர்களுக்குப் போலீஸ் தடியடி, சிறைச்சாலை, சித்திரவதை, உடைமை பறிமுதல், அபராதம், துப்பாக்கிக் குண்டுகள் தூக்கு மேடைகள்!

இவ்வளவு துன்பங்களுக்கிடையிலும் ஒரே ஒரு இன்பம் மட்டிலும் அன்றைக்கு நாட்டில் நிலவி வந்தது. பொது வாழ்க்கைத் துறையில் வழிகாட்டியாக இருந்தவர்களில் பெரும்பாலோர் உண்மையிலேயே பரந்த மனமுள்ளவர்களாகவும், தியாக உணர்ச்சி உள்ளவர்களாகவும், மக்களுக்குத் தங்களது தன்னலமற்ற வாழ்க்கையால் உற்சாகமும் ஊக்கமும் தரத் தக்கவர்களாகவும் இருந்தார்கள். பணத்தாலும், அதிகாரத்தாலும் அன்று தங்களை உயர்த்திக் கொண்டவர்கள் பரிகசிக்கப்பட்டார்கள். குணத்தாலும் செயலாலும் தங்களை உயர்த்திக் கொண்டவர்கள் போற்றப்பட்டார்கள்.

இரண்டாவது உலகப் போரும் வந்து விட்டது. நம்முடைய நாட்டுக்கு விடுதலை தேடித் தந்ததில் ஒரு பகுதிப் பெருமை அந்தப் போருக்கும் உண்டு. அதன் பின்னர் விளைந்துள்ள சிறுமைகளிலும் அதற்குப் பங்கு உண்டு.



போர் மூண்டவுடன் ஆங்கிலேயர்கள் இந்த நாட்டையும் சேர்த்து யாரையும் கேட்காமலே போரில் ஈடுபடுத்தி விட்டார்கள். அவர்களது எதிரிகளான ஜெர்மானியர்களை அழிப்பதற்காக, ஏற்கனவே கால் வயிற்றுக்கும் அரை வயிற்றுக்குமிடையில் அல்லல்பட்டுக் கொண்டிருந்தவர்களை மேலும் மேலும் கசக்கிப் பிழியத் தொடங்கினார்கள். எஞ்சிய செல்வத்தை உறிஞ்சிக் கொண்டு டாங்கிகளையும் போர் விமானங்களையும் பீரங்கிக் கப்பல்களையும் உற்பத்தி செய்தார்கள். வேலையில்லாமல் தவித்த நம்முடைய இளைஞர்களைப் போர்க் களங்களில் கொண்டு போய்க் குவித்தார்கள்.

ராணுவத்தின் ஒரு பகுதி நாட்டு மக்களின் எழுச்சிக்கு எதிராக எப்போதும் தன் ஆயுதங்களைத் திருப்பிக் கொண்டு நின்றது.

இந்த நிலையில்தான் மகாத்மா காந்தி தாம் அதுவரை செய்து வந்த சத்திய சோதனைகளையெல்லாம்விட மிகப் பெரிய சோதனை ஒன்றைச் செய்யத் திட்டமிட்டு விட்டார்.

தன்னுடைய நாட்டுத் தலைநகரமான லண்டன் மாநகரில் குண்டுகள் விழுந்து கொண்டிருந்த அந்த நிலையிலும், ஆங்கிலேயன் தனது ஏகாதிபத்தியத்தை விட்டு விட விரும்பவில்லை.

மகாத்மா நாட்டு மக்களுக்கு அறை கூவல் விடுத்தார்: "வெள்ளையரை வெளியேற்று! இதைச் செய்து முடி; அல்லது செத்து மடி!"

"செய்து முடி; அல்லது செத்து மடி!"

இந்தச் செய்தி மக்களுக்குக் கிடைப்பதற்கு முன்பே மகாத்மாவை வெள்ளையர்கள் கைது செய்து விட்டார்கள். அப்போதைக்கு அவர்கள் அவரைச் செய்து முடிக்கவும் விடவில்லை; செத்து மடியவும் விடவில்லை.

ஆனால் நாடெங்கும் எப்படியோ போராட்டத் தீ கட்டுப்பாடற்ற முறையில் பரவி விட்டது. வெள்ளைக்காரர்களும் ராணுவத்தைக் கட்டவிழ்த்து விட்டு விட்டார்கள்.


அத்தியாயம் நான்கு

போலீஸ் ஒற்றன்

இரவு பன்னிரண்டு மணிக்கு மேலிருக்கும். வானமெங்கும் மேகத்திரள் கவிந்திருந்ததால் நிலவு மறைக்கப்பட்டு, எங்கும் கனமான காரிருள் மூடிக்கொண்டிருந்தது. திருச்சிராப்பள்ளியைச் சுற்றி வளைத்துச் செல்லும் காவேரி மட்டிலும் தன் ஓட்டத்தை நிறுத்தவில்லை. ஒரு புறம் திருவரங்கத்து அம்மா மண்டபம் படித்துறையையும், மறுபுறம் திருச்சியின் சிந்தாமணிக் கரையையும் தொட்டுக் கொண்டு, அந்தக் காலத்து இளைஞர்களின் மனம் போல் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தது. ஆற்றின் வேகத்தில் அதன் ஆழமும், அகலமும், புதுமையும் ஒன்றாகக் கலந்திருந்தன.

சிந்தாமணிக் கரை மண்டபத்தில் வழக்கமாகப் படுத்துறங்கும் பிச்சைக்காரர்கள் கூட்டம் அங்கில்லை. புதுவெள்ளம் வரத் தொடங்கும் ஆனி-ஆடி மாதங்களில் அவர்கள் ஆற்றங்கரையை நம்ப மாட்டார்கள். இரவோடு இரவாகத் தங்களையும் வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடுமோ என்ற பயம் ஒரு புறம்; குலையை நடுங்கச் செய்யும் குளிர் காற்றை ஒரே உடையான இடுப்புக் கந்தலைக் கொண்டு எப்படிச் சமா





விப்பது என்ற சிக்கல் மறுபுறம். — ஆகவே, வேறு எங்கேயாவது தலையைச் சாய்ப்பதற்குப் பொது இடங்களைத் தேடி அலைவதிலேயே அவர்கள் இரவைக் கழித்து விடுவார்கள்.

கரையோரத்துப் பழைய மண்டபமும் அதையடுத்துத் தழைத்துச் செழித்திருந்த மரம் செடிகொடிகளும் வெளிப் பார்வைக்கு அமைதியாகத்தான் தோற்றமளித்தன. ஆனால் அவற்றினூடே காவேரியின் உறுமல் சத்தம் குமுறிக் கொண்டிருந்தது; ஊதல் காற்று வீசிக் கொண்டிருந்தது.

திடீரென்று அங்கே பத்துப் பன்னிரண்டு மனித உருவங்கள் நிழலாடின. யாரேனும் அங்கு மறைந்திருக்கிறார்களா என்று கண்காணிப்பது போல் அவை சுற்றுமுற்றும் பார்த்தன. பின்னர் ஒருவருமில்லை என்று துணிவு பெற்றது போல், மண்டபத்தை நோக்கி நடந்து வந்தன. உள்ளே புகுந்து பதுங்கிய படியே மண்டபத்தின் இருளில் நெருங்கி அமர்ந்தன.



அவர்கள் திருடர்களுமில்லை, கொள்ளைக்காரர்களுமில்லை, கொலை செய்ய வந்தவர்களுமில்லை. எல்லோருமே இருபது வயதுக்குச் சற்று முன்னும் பின்னுமாக உள்ள இளைஞர்கள். படித்துக் கொண்டிருந்தவர்கள். கல்லூரி மாணவர்கள்.

"எந்த நாட்டில் அடிமைத்தனமும், எதேச்சாதிகாரமும், அடக்குமுறையும் ஆட்சி என்ற பெயரால் நடக்கின்றனவோ, அங்கே மனத்தில் நினைப்பதை வெளியில் சொல்லக்கூட உரிமையில்லை. நம்முடைய துன்பங்களைச் சொல்லி வாய்விட்டு அழக்கூட நமக்கு உரிமை கிடையாது.—அத்தகைய ஒரு பயங்கரமான அன்னிய ஆட்சியை ஒழித்துக் கட்டுவதற்காகத்தான் நாம் இங்கே ரகசியமாய்க் கூடியிருக்கிறோம்!"-இது நமக்குப் பழக்கமான முருகையனின் குரல்.

குளிரால் நடுங்கிக்கொண்டிருந்த இளைஞர்களின் இருதயங்களிலே கனல் பிறந்து, அவர்களது குளிரை விரட்டியடித்தது. அவர்கள் நிமிர்ந்துட்கார்ந்திருந்தார்கள்.

முத்துச்சாமி என்ற ஓர் இளைஞன் மெல்லக் கேட்டான்: "போராட்டத்தை எப்படி நடத்துவது என்று சொல்வதற்கு முன்புதான் காந்தியடிகளைக் கைது செய்து விட்டார்களே? எந்த முறையில் இது நடக்கப் போகிறது?"

"கைது செய்யப்பட்ட காந்தியின் சக்தி, வெளியில் நடமாடும் காந்தியின் சக்தியை விடப் பல மடங்கு வலிமை உள்ளது என்பதை வெள்ளைக்காரர்கள் இந்தப் போராட்டத்தில் கண்டு கொள்வார்கள். — வன்முறைச் செயலில்லாத ஒத்துழையாமைதான் நம்முடைய ஒரே ஆயுதம்! வெள்ளைக்கார ஆட்சியை இங்கு நடத்தி வருபவர்கள் பெரும்பாலோர் இந்தியர்கள்தாம். அரசாங்க அலுவலகங்கள், தபால், தந்தி, போலீஸ் ராணுவம், ரயில், வாணிபம் எல்லாவற்றிலுமே இருந்து கொண்டு, அவர்கள் சார்பில் நம்மைச் சுரண்டுபவர்கள் நம்மவர்களே! ஆகவே, அவர்களது மனச்சாட்சியைத் தியாகத்தால் தூண்டிவிட்டு, அவர்களை ஒத்துழைக்காமல் செய்வதற்காக, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலைகளை விட்டு மறியல் செய்வார்கள். நாட்டின் நிர்வாக இயந்திரமே முறிந்துவிட்டால், பிறகு எப்படி அவர்கள் நம்மை ஆளமுடியும்? — மகாத்மாவின் கடைசிப் போராட்டம் இது. கல்லூரிகளை விட்டுவிட்டு நாமும் இப் போராட்டத்தில் குதிப்போம். வெள்ளையரை வெளியேற்றுவோம். — அதைச் செய்து முடிப்போம்; அல்லது செத்துமடிவோம்!"

மின்சாரம் பாய்ந்தது போல் சிலர் அதிர்ச்சியுற்றார்கள்; சிலர் நடுநடுங்கினார்கள்; சிலர் அப்போதே சாவதற்குச் சித்தமாக இருந்தார்கள்.

ஒருகணம் தாமதித்து விட்டு, அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரின் பிள்ளை மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "ஆமாம், மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா? அரசியல் போராட்டத்தில் கலந்து கொள்ளலாமா?" என்று தயக்கத்தோடு கேட்டான்.



"கூடாது! கூடவே, கூடாது! நாம் நம்முடைய கல்வியை ஒழுங்காகக் கற்றுத் தேர்ந்து, நம்முடைய நாட்டுக்கும் வீட்டுக்கும் பயனுறும் பயிற்சி பெறுவதற்கே இங்கு வந்திருக்கிறோம். படிப்புத் தான் நமது முதல் கடமை. அதிலிருந்து தவறி நாம் அரசியல் போராட்டங்களில் ஒருகாலும் ஈடுபடக் கூடாது!" என்று முருகையன் கண்டிப்பான குரலில் கூறினான்.

இதைக் கேட்டுச் சிலர் புரியாமல் விழித்தார்கள். இன்னும் சிலருக்கோ முருகையன்மீதே பலமான சந்தேகம் வந்து விட்டது.

"அரசியல் என்பது வாழ்க்கையின் உடல் போன்றது. ஆனால் அறநெறியென்பது உயிரும் உயிருக்குள் சுடர் விடும் ஆத்மாவும் கூடியது. காந்தியடிகள் முதலில் அற நெறியாளர்; பிறகே அரசியல்வாதி. — அவர் இந்த நாட்டு மக்களின் மனச்சாட்சிப் போர் வீரர். அவர் நடத்துவது வெறும் அரசியல் போராட்டமல்ல. நம்முடைய சமுதாயத்தின் மனிதப் பண்பு அழிந்து விடுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக, ஓர் உத்தமமான ஆத்மா கொட்டும் கடைசிப் போர் முரசு!"

"முருகையா! விளக்கமாகச் சொல்!" என்றான் ஓர் இளைஞன்.

"நம் நாடு விடுதலை பெற்ற பிறகு, நம் நாட்டின்மீது வெளி நாட்டார் போர் தொடுத்தால், நம்மைப் போன்ற வயது வந்த இளைஞர்கள் கல்லூரிகளை விட்டு ராணுவத்தில் சேர்ந்து விடுவோமல்லவா? நம் உயிரையும் மானத்தையும் காக்க நாம் அனைத்தையுமே தியாகம் செய்ய வேண்டிய நெருக்கடி வந்து விடுமல்லவா? அதைப் போன்ற ஒரு பயங்கரமான அழிவுச் சுழலில் நாம் இப்போது அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம்."

"வன்முறைச் செயலில்லாத அஹிம்ஸைப் போர் என்கிறாய். ராணுவத்தைப் பற்றிப் பேசுகிறாயே?"

"ராணுவத்தின் வேலை பகைவர்களை ஆயுதங்களால் அழிப்பது; தன்னை ஆயுதங்களால் காத்துக் கொள்வது. குறைந்த எண்ணிக்கையுள்ள ராணுவத்தை வைத்துக் கொண்டுதான், அதன் கட்டுப்பாட்டாலும், ஒழுங்காலும், கடமை உணர்ச்சியாலும் கட்டுப்பாடும்



பம்பாய் பாரதிய வித்யா பவனத்தினர் தொடங்கியுள்ள பத்திரிகைத் தொழில் பயிற்சிக் கல்லூரியை மத்திய சர்க்கார் நிதி மந்திரி மொரார்ஜி தேசாய் அவர்கள் ஜுலை 15ந் தேதி ஆரம்பித்து வைத்தார். பிரபல அமெரிக்க ஆசிரியர் லூயி பிஷர், இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் பிராங்க் மொரேய்ஸ், ஹிந்துஸ்தான் லீவர் ஸ்தாபனத்தின் தலைவர் திரு தாண்டன், வால்டர் தாம்ஸன் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் பீல்டன் ஆகியோர் சொற்பொழி வாற்றினர். பாரதிய வித்யா பவனத்தின் தலைவர் திரு கே. எம். முன்ஷி இவ்விழாவுக்குத் தலைமை வகித்துச் சிறப்பித்தார். எழுத்துக் கலை, விளம்பரக் கலை, அச்சுக்கலை ஆகியவற்றில் இருநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் இக் கல்லூரியில் பயிற்சி பெறுவார்கள்.

ஒழுங்குமில்லாத நம்முடைய நாட்டு மக்களை வென்று விட்டார்கள் வெள்ளையர்கள். காந்தியடிகளோ நம்மை ராணுவ வீரர்களைவிட உயர்ந்த மாபெரும் தியாக வீரர்களாக மாற்ற விரும்புகிறார். நம் சமுதாயத்துக்கு வீரமும், கட்டுப்பாடும், ஒழுங்கும், சுறுசுறுப்பும், போராட்ட உணர்ச்சியும் வேண்டு மென்பதற்காகவே, ராணுவத்தையும் ஆயுதமின்றி எதிர்க்கத்தக்க துணிவைத் தூண்டிவிட்டிருக்கிறார். பகைவருக்குத் துன்பம் கொடுக்காமல், ஆனால் அவருக்கு அஞ்சாமல் போராடும் புதிய முறைதான் இந்த அறப்போர் முறை!''

''பயங்கரமான விஷயங்களையெல்லாம் நீ சொல்கிறாய்!'' என்றான் பயந்த சுபாவமுள்ள ஒருவன்.

''பயங்கரமான உலகத்தின் மத்தியில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சாகத் துணியாதவர்கள், போராட்ட சக்தி இல்லாதவர்கள் இனி என்றென்றும் ஆடுமாடுகளைவிடக் கேவலமான அடிமை நிலையில் வாழ வேண்டியதுதான்.''

''நமக்கு என்ன தண்டனை கிடைக்கும்?''

''ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டார் மகாத்மா: — உனக்குப் பின்னால் வருகிறவர்களாவது சுதந்திர மனிதர்களாக வேண்டுமென்றால் நீ இந்தப் போராட்டத்தில் செத்து மடியத் தயாராக இருக்க வேண்டும்!''

இளைஞர்களில் சிலருக்கு மனத்தின் அடித்தளத்திலே அச்சம் பரவத் தொடங்கியது. என்றாலும் அதை உதறிவிடத் துடிப்பவர்கள் போல், மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு ஒரே குரலில் முழங்கினார்கள்.

''செய்து முடிப்போம்; அல்லது செத்து மடிவோம்!''

ரகசியமாகத் தொடங்கிய பேச்சுக்கள், முடிவின்போது இடி முழக்கங்களாக வெளி வந்தன. காற்றின் சீற்றத்தையும் காவேரியின் உறுமலையும், மேகத் திரளின் மோதுதல்களையும் மீறிக் கொண்டு அவை விண்ணதிரச் செய்தன.

பாவம், உணர்ச்சி வயப்பட்ட, நேர்மைத் துடிப்புள்ள, இளமை முறுக்கேறிய செந்தமிழ் நாட்டுக் கட்டிளம் காளைகள்! அவர்களைச் சுற்றிலும் பின்னப்பட்டிருந்த இரும்பு வலையை அவர்கள் கவனிக்க மறந்து விட்டார்கள்.

தொடக்கத்தி லிருந்தே அவர்களைப் பின்தொடர்ந்து, மண்டபத்தின் பின்புறத்தில் மறைந்துகொண்ட ஓர் ரகசியப் போலீஸ் ஒற்றரை அவர்கள் கண்டு கொள்ளவில்லை. அந்த ஒற்றரோ, தம்முடைய உத்தியோக உயர்வை ஒரு பக்கம் மனத்தில் வைத்துக் கொண்டு, முருகையன் பேசிய பேச்சுக்களுக்குச் சிறிது கற்பனை மெருகும் கொடுத்துச் சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டு விட்டார்.

இளைஞர்கள் தங்களுடைய கல்லூரி விடுதிக்குப் போய்ச் சேருவதற்கு முன்பாக, அந்தப் போலீஸ் ஒற்றரின் மோட்டார் சைக்கிள் நகரத்தின் இருட்டை இரு கூறாகக் கிழித்துக் கொண்டு பறந்தது.

(தொடரும்)



1. இமயம் அழைக்கிறது

என்.வி.அனந்தராமன்

பாரத நாட்டுத் தத்துவ ஞானத்தின் வழியே அழகும், தெய்வீகமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. இந்த நாட்டு மக்கள் மலைகளையும், ஆறுகளையும் இறை நலமுடையவையாகக் கண்டு, அந்த இயற்கை எழுச்சிகளிலே தெய்வங்களை உணர்ந்து போற்றியவர்கள். நதிக்கரையிலும், மலைச்சிகரங்களிலும் அழகையும், தெய்வத்தையும் சேர்த்துப் பார்த்த புண்ணியத் திருநாடு இது.

இந்த நாட்டின் வடக்கு எல்லையில் காஷ்மீரத்திலிருந்து அஸ்ஸாம் வரை ஏறத்தாழ 1500 மைல்கள் நீண்டும், 250 மைல்கள் அகன்றும் வரிசை வரிசையாய்க் காணப்படும் இயற்கைக் கனவுகளுக்குத்தான் இமயம் என்று பெயர். ஓங்கிச் செழித்த பனிக் கோளாய் உருகாத சீதளக் கவராய் பண்ணின் நினைவுகளை விண்ணுக்கு வளர்க்கும் தெய்வ நெடும் படியாய்ப் பரந்து கிடக்கும் இந்த வெள்ளிப் பனி மலைத் தொடரிலிருந்துதான் கங்கை நதியும், நமது ஆன்மீக இலட்சியங்களும் இணைந்து உற்பத்தியாகின்றன. சிந்து, பிரம்மபுத்திரை முதலிய நதிகள் மட்டுமின்றிப் பாரத நாட்டின் பாரமார்த்திக நினைவுகளும் இங்கிருந்துதான் பிறக்கின்றன என்று எண்ணும்போது நமக்கு மெய்சிலிர்க்கவில்லையா? கங்கையோடு பிறந்து கங்கைக் கரையில் வளர்ந்து, கங்கை பாயும் ஒலியோடு தானும் ஒலித்து ஞானிகள் நினைவிலே பதிந்து தலைமுறை தலைமுறையாக விளங்கிவரும் சிதையாத சித்தாந்தங்கள் தோன்றிய இடம் இமயம் அல்லவா? நம்முடைய சித்தாந்தங்களின் தலைவனாகிய பெருமான் தழலாடும் கையினனாக நடமாடும் இடம் இந்தப் பனியாடும் மலைதானே!

இந்தத் தொல்பெருந் தேசத்தின் புண்ணியம் ஒன்றாய்த் திரண்டு காஷ்மீரத்திலிருந்து அஸ்ஸாம் வரை உயர்ந்து பரந்து தோன்றுவதுபோலல்லவா இந்த மலை விளங்குகிறது.

'தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும்
மன்னி வாழ் கயிலைத் திருமாமலை'....

என்றும்,

'உலகம் என்னும் ஒளிமணிவல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதும்
மால்வரை'

என்றும்—சேக்கிழார் இந்த மலையைப் புகழ்ந்து பரவசப் படுகிறார். சேக்கிழாருடைய பரவசத்துக்குச் சற்றும் குறைவில்லாமல் மகிழ்ச்சிக் கூத்தாடுகிறார் புதுயுகக் கவிஞராகிய பாரதியார். 'இமய மலை நமக்குச் சொந்தம்' என்பதில் பாரதியாருக்கு உண்டாகிற தற்பெருமை கொஞ்ச நஞ்சமில்லை. உலகத்திலேயே இப்படி வேறு மலை கிடையாது என்பதனால் அவருடைய பெருமை கர்வமாகவே ஓங்கி விடுகிறது.

'மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநில மீதது போற் பிறிதிலையே'

என்று பாடுகிறார் பாரதியார்.

இமயமலை இந்துக்களுக்கு மட்டும்தான் தெய்வமலை என்பதில்லை. புத்தர் இங்கு நித்தியவாசம் செய்வதாகப் பௌத்தர்கள் கருதுகிறார்கள். சமணர்களும் இதனைப் புண்ணிய மலையாகப் போற்றுகிறார்கள். பாரதியாருடைய தீர்க்க தரிசனத்தை என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை. இந்தச் சீனக்காரர்கள் வம்பு வரும் என்று அன்றைக்கே எதிர்பார்த்தது போல் 'இமயமலை எங்கள் மலை'—என்று அடித்துச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்; பாருங்களேன். அடித்துச் சொல்லவும் துணிவில்லாமல் அணைத்துச் சொல்லவும் வழியில்லாமல் பாரத அரசாங்கத்தார்தான் இன்றைக்குத் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மலைத்தொடரில் தெய்வத் திருத்தலங்கள் எத்தனை. வானளாவி நிற்கும்

பனிச் சிகரங்கள் எத்தனை. மரங்களின் வகைகளும், மலர்களின் விதங்களும்தான் எத்தனை.

இமயம்! — மனிதனுடைய நினைவுகளுக்கும் கனவுகளுக்கும் அது ஓர் இலட்சிய உயரம். பக்தனுக்கு அதன் உயரம் பக்தியின் உயரம். கவிஞனுக்கு அதன் உயரம் கற்பனை அழகின் முடிந்த முடிவான உயரம். துறவிக்கு அதன் உயரம் தவத்தின் உயரம். ஞானிக்கு அதன் உயரம் ஞானத்தின் உயரம்.

பவித்திரமான கோவில்கள் பல இமயத்தில் உண்டு. திருக்கேதாரம், அமரநாதம், பத்ரிநாதம், துங்கநாதம், கங்கோத்ரி, யமுனோத்ரி முதலிய தெய்வீகத் தலங்கள் இமயத்திலே இருக்கின்றன.

நைனிதால், ஸிம்லா, டார்ஜிலிங் போன்ற கோடை நகரங்கள் இந்த மலைத் தொடரில் விளங்குகின்றன. ஏராளமான சிகரங்களும், படிக நீர் பரந்து நிறைந்த ஏரிகளும் இமயத்தின் மடியில் இலங்குகின்றன.

இமயத்தின் மணி முடியாய்க் கடல் மட்டத்துக்குமேல் 22028 அடி உயரமும், முப்பத்திரண்டு மைல்கள் சுற்றளவும் கொண்டதாய்ச் சிவ பரம்பொருளின் விராட் வடிவமாய்த் திருக்கைலாய சிகரம் விளங்குகிறது. 'உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல் மலரும் வெண்மலர்'—என்று சேக்கிழார் வர்ணித்திருக்கும் அழகைக் கைலாச சிகரத்தின் வெண்பனிக் கோலத்தை நேரிற் கண்டவர்களே உணர முடியும். அந்த வெண்பனிக் கொடுமுடியைத் தழுவினாற்போல மானஸரோவர ஏரி. கைலாச சிகரம் சிவ வடிவமாகவும், மானஸரோவரம் சக்தி வடிவமாகவும் காட்சியளிக்கின்றன. இவ்விரண்டையும் சேர்த்துக் 'கௌரி சங்கரம்'—என்று அழைக்கிறார்கள். பாரதத்தின் கணக்கற்ற தலங்களைத் தரிசிக்கும் பெரும் பயன் கைலாச தரிசனம் ஒன்றிலேயே நிறைவேறி விடுகிறது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் நெடுஞ் சேரலாதன் என்னும் சேர அரசன் இமயத்தை வெற்றி கொண்டு இமயவரம்பன் எனச் சிறப்புப் பெற்றதை வரலாற்றில் படிக்கிறோம். இமயவரம்பனும், கரிகாலனும் வெற்றிக்கு முற்றுகையிட்டு இமயம் கண்டவர்கள்.

பக்தி முற்றுகையிட்டு இமயம் கண்டவர்களும் இருக்கிறார்கள். ஆளும் நாயகன் 'கயிலை கண்டன்றி மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'—என்று புறப்பட்ட திருநாவுக்கரசரும், கைலாசத்தைக் காலால் மிதிக்க அஞ்சித் தலையால் நடந்து சென்ற காரைக்காலம்மையாரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமான் நாயனாரும்,— இமயத்தைப் பக்தி முற்றுகையிட்டு வென்றவர்கள்.

'இமயம்' என்னும் பேரழகு மலைத் தொடரின் மேலும், அதில் கோவில் கொண்டிருக்கும் பெருமான் மேலும் — தனக்கு ஏற்பட்ட அன்பின் மிகுதியால் அம்மலையையே இலங்கைக்குப் பெயர்த்தெடுத்துக் கொண்டு போக முயன்ற இராவணனின் முயற்சியைப் புராணம் கூறுகிறது.

பல ஆயிரம் ஆண்டுகளாக மனித இலட்சியத்தின் உயரத்துக்கு எல்லையாக விளங்கி வரும் இந்த வெள்ளிப் பனிமலையின் வீதியிலே சிகரங்களை உடைத்து ஓடும் காட்டாறுகளையும், பாய்ந்து வரும் அருவிகளையும், செங்குத்தான மலைச்சுவர்களையும், திகைப்பூட்டும் பெரும் பள்ளங்களையும், பனிக்கட்டி மழையையும் காணலாம்.

நாற்பது நாட்களுக்கும் மேலாக மெய் வருத்தம் பாராது, பசித் துன்பம் பாராது, கண் துஞ்சாமல், கருமமே கண்ணாயிருந்து பனிமலைப் பயணத்தில் ஈடுபட்ட இன்பத்தை விவரிப்பதற்குச் சொற்களே இல்லை.

பயணத்தின்போது அலுப்பையும், சலிப்பையும் காட்டும் சோர்வுக் குரல்கள் யாரிடமிருந்தும் ஒலிக்கவில்லை.

"போலோ கைலாஸ்நாத்கீ ஜே!"

"ஹரஹர சம்போ மகாதேவா!"

— என்ற குரல்கள்தான் மலை முகடுகளில் எதிரொலி செய்தன. நடக்கவும், துணியவும் நெஞ்சுக்கு உரமளித்த தாரக மந்திரம் இந்தக் குரல்தான். கைலாய யாத்திரையின்போது ஒவ்வொரு விநாடியும் செவிகளில் மட்டுமின்றி மனத்திலும் இந்தக் குரலே ஒலித்துக் கொண்டிருந்தது.

கைலாயத்தின் தெய்வ பூமியில் நான் நிற்பதற்கு முன்னால் என்னுடைய நினைவிலே கைலாயம் நீக்கமற நிறைந்திருந்தது. திபெத்தினர்களால் கைக்கொள்ளப் பட்டிருக்கும் கெடுபிடி நிறைந்த காலத்தில் 20,000 அடி உயரத்திலிருக்கும் இமயமலையை ஆயிரம் மைல்களுக்கு இப்பால் சென்னையிலிருந்து நான் நினைத்துக் கொண்டிருந்தேன். என்னுடைய நினைவு வீணாகவில்லை. எனது நினைவில் இருந்த இமயத்துக்கு நான் யாத்திரை போகும் வாய்ப்பு ஏற்பட்டது.


1959ம் ஆண்டு ஜூன் மாதம் தருமபுர ஆதீன கர்த்தர் கயிலை யாத்திரை செல்லப் போவதாகவும், அவர்களோடு நானும் சேர்ந்து செல்லலாம் என்றும் நண்பரொருவர் தகவல் தெரிந்து எனக்கு எழுதியிருந்தார். கடிதம் கிடைத்தவுடனே மாயவரம் சென்று தருமையாதீன கர்த்தரைச் சந்தித்துத் திருவருள் யாத்திரையில் நானும் கலந்துகொள்ள அனுமதி பெற்றேன். நானும் உடன் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேன்.

ஏற்கெனவே இரண்டு முறைகள் கயிலாய யாத்திரை சென்று திரும்பிய நண்பர் திரு டி. என். கிருஷ்ணசாமி அவர்கள் வீட்டுக்குச் சென்று யாத்திரைக்கு வேண்டிய அநுபவ யோசனைகளைப் பெற்றுக் கொண்டேன்.

வெண்பனிக் கோயிலாகிய இமயத்துக்குப் புறப்படும் அந்தப் புனித நாளும் என்வாழ்வில் வந்தது. 1959ம் ஆண்டு ஜூன் மாதம். சென்னையில் மண்டையைப் பிளக்கிற வெயில். பகல் ஒன்றரை மணிக்குக் கைலாயத்தின் குளிர்ச்சியைப் பாவனை செய்து கொண்டு சென்டிரல் நிலையத்தில் இரயில் ஏறினேன்.

"உன்னை இதே இரயில் நிலையத்தில் வரவேற்கும் பாக்கியத்தை எனக்குக் கொடுப்பாயா?" என்று கண்களில் நீர் கலங்கப் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த என் வயது முதிர்ந்த தாய் கேட்டபோது, எனக்கு அழுகையே வந்துவிட்டது. சிரமப்பட்டு என்னைத் தேற்றிக் கொண்டேன். இரயில் புறப்பட்டது. 'வெள்ளிப் பனிமலை மீது உலவும்'-வேட்கையோடு நானும் என் கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன். (தொடரும்)

பிளாஸ்டிக்கின் இந்த
அழகிய
வீட்டிற்கான சாமான்களை
உபயோகித்து



நாகரீகமாகவும் உல்லாசமாகவும் இருங்கள்

சௌகர்யத்திற்கும், நீண்ட நாள் உழைப்பை தரும்-பிரைட் பிளாஸ்டிக் சாமான்களைப் போல் வேறொன்றும் இல்லை. இவை நவீன இல்லங்களில் எல்லோராலும் உபயோகிக்கப்படும் சிறந்த சாமான்கள். வர்ண மயமான, நீண்ட நாள் உழைக்கக்கூடிய மற்றும் சௌகர்யமான இந்த சாமான்களை நீங்கள் ஒரு முறை உபயோகிக்கத் தொடங்கினால், இவைகளை நீங்கள் எப்பொழுதுமே உபயோகிக்க விரும்புவீர்கள். அழகான வர்ணங்கள், சேர்த்தியான தயாரிப்பு மற்றும் சிறந்த தன்மை முதலானவைகளுக்கு பிரைட் என்ற பெயரைப் பார்த்து வாங்குங்கள்-பிரைட் தான் வேண்டுமென்று கேளுங்கள்.

Brite

பிரைட் பிளாஸ்டிக்ஸ்

பிரைட் பிரதர்ஸ் பிரைவேட் லிட்., 155-A, தார்தேவ் ரோட், பம்பாய்-7.


நரிவேட்டை
18
கதை: ஜெயந்தி
சித்திரம்: விஜு
ஷியாமளாவைப் பார்த்தறியாத வின்ஸி, அவளைக் குமாரின் தங்கை என்றே நம்புகிறாள். ஷியாமளாவுக்கு ஆபத்து என்று அறிந்ததும் பதற்றத்துடன் குமாருடன் ஓடி வருகிறாள்.
குமார்! ஸாஷா கூறியதைக் கேளுங்கள்!
'டேப்ரிகார்டர்' இயங்குகிறது.
... என்னைத் தொட்டால் போதும்! குமார் தன் உயிருக்குயிரான ஷியாமளாவை மறந்துவிட வேண்டியதுதான்! ..... ஷியாமளா என் பங்களாவில்தான் இருக்கிறாள்....
ஷியாமளா! ஏன் டில்லியை விட்டுப் புறப்பட்டாய்? எதற்காகக் காலிம்பாங் வந்தாய்? ... ஒருவேளை.......
வின்ஸி! ஷியாமளாவுக்கு நீ ஏதேனும் செய்தி அனுப்பினாயா?
ஆமாம், இப்போது ஞாபகம் வருகிறது. உங்களுக்கு ஆபத்து நேர்ந்தால் தந்தி கொடுக்கச் சொன்னீர்களே! 'லாக்-அப்'பில் உங்களை வைத்ததும்.....
... எனக்கு ஆபத்து என்று எண்ணிவிட்டாயா? அவசரப்பட்டு விட்டாய், வின்ஸி!
உங்கள் தங்கைக்கும் உங்களுக்கும் என்னால் எவ்வளவு துன்பம்? குமார்! என்னை மன்னியுங்கள்.


அன்று மாலை தோட்டத்தில் உலவுவது போல ஷோபாவின் மோட்டாருக் கருகில் வருகிறாள் ஷியாமா.
என் நன்மையைக் கருதித்தான் நீ நடந்து கொண்டாய். அது விபரீதமாகி விட்டது. சரி, நான் உடனே இன்ஸ்பெக் டருடன் கலந்தாலோ சித்து விட்டு வருகிறேன்.
யாருமில்லை. இது தான் தக்க சமயம்!
மோட்டாரின் 'டிக்கி'யைத் திறந்து அதிலிருந்து 'ஜாக்கி'யை எடுத்துச் செடி மறைவில் போட்டு விடுகிறாள்.
இருள் கவியும் நேரத்தில் ஷோபா வெளியே கிளம்புவதைத் தன் அறையிலிருந்த வாறே கவனிக்கிறாள் ஷியாமா.
ஆகட்டும்!
நான் போய் வருகிறேன். உஷாராயிருங்கள்!
இரட்டையரும் அப்பால் போன பிறகு, ஷியாமா மறைவிடத்திலிருந்து 'ஜாக்கி'யை எடுத்து....
கார் சக்கரங்களை மாற்ற உதவும் இது, இன்று சதியின் விளைவுக்குப் பயன் படப் போகிறது!
யார் கண்ணிலும் படாமல் ஷியாமா எடுத்து வரும் 'ஜாக்கி'யை இரும்புக் கம்பிகளிடையே பொருத்தி இயக்க...
உம், சீக்கிரம்!


அரைப்பட்டினி போட்டதால் மெலிந்திருக்கும் ரஹீம் வளைந்து விலகிய கம்பிகளினிடையே சுலபமாகப் புகுந்து வெளியே வருகிறான்.
இருவரும் மெல்ல நகருகிறார்கள். ஆனால் இதற்குள் மாடிப்படியருகே சீட்டுக் கச்சேரி ஆரம்பமாகி விட்டிருக்கிறது.
அவர்கள் தப்ப நினைத்தாலும் இந்த வழியாகத்தானே போக வேண்டும்! எவனாவது வந்தாலும் சட்டென்று தெரியும்.
சரிதான், ஆடடா!
அந்தப் பக்கமாகச் செல்ல முடியாது. இப்படி வா, தைரியமாக!
ஜாக்கிரதையாக இறங்கு, ஷியாமா!
தப்பிக்க முயலுபவர்களைப் பார்த்து நாய்கள் குரைக்கின்றன.
அந்தக் கதவைத் திறந்து விட்டால் போதும். நம் கதி அதோகதிதான்! ஓடு, ஷியாமா! ஓடு!
அதே விநாடியில் கேட்டுக்குள் நுழையும் காரின் விளக்கொளி அவர்களை ஸ்தம்பிக்கச் செய்கிறது.
டேய்! நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்கிறதே! போய்ப் பார்க்கவா?
ஏன்? ஆட்டத்தில் தோற்றுக் கொண்டிருப்பதால் நழுவப் பார்க்கிறாயா?
தொடரும்



THY-8 TAM

5-13-8

21-தெய்வநாட்கள் சில

மணிபல்லவம்

நா. பார்த்தசாரதி



காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து தனக்காகவே திருநாங்கூர் வந்திருந்த முல்லையினிடமும், கதக் கண்ணனிடமும் மனம் நெகிழ்ந்து பழகாமல் அவர்களுடைய அன்பையும், ஆர்வத்தையும் புறக்கணித்துத் திருப்பி யனுப்பியதை நினைத்தபோது இளங்குமரனுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. அன்று மாலை, தூய நினைவுகள் பொங்கும் மனத்தோடு உலகத்துப் பேரறிஞர்கள் எல்லாம் அணிவகுத்து நிற்கும் ஞானவீதியில் தனியொருவனாக நடந்து தான் வெற்றிக் கொடி உயர்த்திச் செல்வதாக எண்ணியபடி அவன் இருந்த கனவு நிலையை முதலில் விசாகை வந்து கலைத்தாள். தாயைப் பற்றி நினைவூட்டிக் கலங்கச் செய்தாள். அந்தக் கலக்கத்திலிருந்து நீங்குமுன்பே முல்லையும், அவள் தமையனும் வந்து வேறொரு வகைக் கலக்கத்தை உண்டாக்கிவிட்டுப் போயிருந்தார்கள். தன்னுடைய கல்வி கலக்கத்திலிருந்து விலகி நிற்கும் தெளிவை இன்னும் அடையவில்லை என்பதை அவன் இப்போது உணர முடிந்தது.

'கலக்கங்களில் இருந்துதான் தெளிவு பிறக்க வேண்டுமென்று'—அடிகள் பலமுறை கூறியிருந்தாலும் பழைய சார்புகளும், நினைவுகளும் தன்னை வழி மாற்றிக் கொண்டுபோய் விடலாகாதே என்று பயம் அவனுக்கு இருந்தது. பருகி விடுவதுபோன்ற தாகத்தோடு தன் நீலோத்பல விழிகளை — அம்புகளின் கூர்மையுடையனவாக்கிக் கொண்டு முல்லை பார்த்த பார்வையை நினைத்துக் கொண்டான் இளங்குமரன். அந்தக் கண்களின் வனப்புக்குத் தான் அளித்த காணிக்கையான கவிதையையும் நினைத்துக் கொண்டான்.

இயல்பாகவே எழும் பாசங்களைப் போக்கிக் கொள்வதென்பது தேர்ந்த மனித மனத்துக்கும் அரியது என்று அன்றைக்கு அவன் உணர்ந்தான். 'நெல்லுக்கு உமியும், செம்பிற் களிம்பும் போலப் பாசங்கள் மனத்துடனேயே பிறந்தவை'—என்று அவன் கற்றிருந்ததன் அநுபவம் அவனுக்கே விளங்கிற்று. முல்லை வந்து எதிரே கண்கலங்கி நின்றிரா விட்டால் காவிரிப்பூம் பட்டினமும் பழைய சார்புகளும் அவனுடைய நினைவில் வந்திருக்கப் போவதில்லை. பாடல் எழுதப்பெற்ற அந்த ஏட்டையும், நாகலிங்கப்பூவையும் முல்லையின் கையில் கொடுக்கும்போது பேதைச் சிறு பெண்ணாய் அவள் தன் முன்னால் சிரித்

துக் கொண்டு நின்ற பழைய நாட்கள் எல்லாம் நினைவு வந்து அவனையே மனம் நெகிழ்ந்து உருகும்படி செய்து விட்டன. அடுத்த நாள் பொழுது புலரும் வரை அவன் தன் மனத்தில் அவளை மறக்க முயன்று கொண்டே நினைத்துக் கொண்டிருந்தான். பொழுது புலர்ந்தபின் நீராடித் தூய்மை பெற்றுப் பாடம் கேட்பதற்காக அடிகளின் இரந்த சாலைக்குள் அவன் நுழைந்தபோது விசாகை பளீரென்று மின்னும் புதிய சீவர ஆடை புனைந்து கையில் அட்சய பாத்திரமும் ஏந்தியவளாய் எங்கோ புறப்பட்டுக் கொண்டிருந்தாள். நிர்மலமான புனிதப் பூ பொன் நிறத்தில் பூமியையே காம்பாகக் கொண்டு பூத்து நிற்பது போல அந்த வைகறையில் விசாகை தோன்றினாள். அவள் எங்கேயோ யாத்திரை போகிறாள் போலத் தோன்றியது.

இளங்குமரனை எதிரே பார்த்ததும் விசாகை நின்றாள். இளங்குமரனும் நின்றான். "இந்தப் பாத்திரத்தில் நிறைவதைக் கொண்டு ஏழைகளின் வயிற்றை நிறைப்பதற்காக ஊர் சுற்றப் புறப்பட்டு விட்டேன். மறுபடியும் விரைவில் நாம் சந்திப்போம். ஞான நூல்களைக் கற்கும்போது மனத்தில் எந்தக் கலக்கமும் இருக்கக் கூடாது. இரும்பில் தோன்றும் துரு வளர்ந்து பெருகி இரும்பையே அழித்து விடுவதுபோலச் சஞ்சலம் மன உறுதியை அழித்து விடும். மந்தையில் ஊரார் பசுக்களைக் கணக்கிட்டு எண்ணி மேய்க்கின்ற ஆயனைப்போல நமக்குப் பயன் கொள்ளாமல் நூல்களை எண்ணிப் படிப்பதில் உறுதியில்லை. இன்றிலிருந்து உங்களுடைய ஒவ்வொரு நாளும், தெய்வ நாளாகக் கழிய வேண்டும்" என்று விசாகை கூறியபோது மனமும், மெய்யும் சிலிர்த்து அந்தப் பரிசுத்தவதியைக் கைகூப்பி வணங்கினான் இளங்குமரன்.

தூய்மையே வடிவமாகி ஒரு மின்னல் நகர்ந்து செல்வது போல விசாகை மேலே நடந்தாள். 'நேற்று மாலை ஒரு பெண் தன்னுடைய மோகம் நிறைந்த வார்த்தைகளால் எனக்குக் கலக்கத்தை உண்டாக்கினாள். இன்று காலையில் இன்னொரு பெண் தன்னுடைய ஞானம் நிறைந்த வார்த்தைகளால் என் கலக்கத்தைப் போக்கினாள்' என்று நினைத்து வியந்த வண்ணமே தன் நாட்களைத் தெய்வ நாட்களாக்குவதற்காக இரந்த சாலைக்குள் நுழைந்தான் இளங்குமரன். விசாகையின் வார்த்தைகள் அவனுக்குப் புதிய உறுதி அளித்திருந்தன.

அன்றைய தினத்துக்குப் பின் கால ஓட்டத்தைப் பற்றிய நினைவே அவனுக்கு இல்லை. அவன் மூழ்கிப்போன உலகத்தில் ஒரே ஒரு காலம்தான் இருந்தது. அதற்குப் பெயர் அழிவின்மை. அவன் கற்ற நூல்களில் காலத்தின் சிற்றெல்லை பற்றியும், பேரெல்லை பற்றியும் கருத்துக்கள் வந்தன. காலத்தின் மிகக் குறுகிய சிற்றெல்லைக்குக் கணிகம் என்று பெயர். காலத்தின் மிகப் பெரிய பேரெல்லைக்குக் கல்பம் என்று பெயர். ஏழு செங்கழு நீர்ப்பூவின் இதழ்களை வரிசையாய் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிப் பலசாலியான மனிதன் ஒருவன் மிகவும் கூரிய ஊசியைக் கொண்டு துளையிட்டால் ஆறு இதழ்களைத் துளைசெய்து முடித்துவிட்டுப் பின்பு ஏழாவது இதழிலும் புகுவதற்கு ஆகிற நேரம் ஒரு கணிகம். ஒரு யோசனைத் தொலைவுக்கு உயர்ந்து இறுகிய வச்சிரமலை ஒன்று. கருக்கொண்ட பெண்டிர் உடுத்து நைந்த பட்டுத் துணியினால் தேய்க்கப்பட்டு முற்றிலும் தேய்ந்து போவதற்கு ஆகிற காலம் கல்பம். 'ஆசீவக சமயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த உலகமும், இதில் வாழும் உயிர்களும் எண்பத்துநான்கு லட்சம் மகா கல்பகாலம்தான் வாழ்வார்கள்' என்ற கருத்துடையவர்கள். அந்தச் சமயத்தின் கொள்கைகளையும், தத்துவங்களையும் இளங் குமரனுக்குக் கற்பிக்கிறபோது அடிகள் காலத்தைப் பற்றிய இந்த அளவுகளையும் கற்பித்திருந்தார். 'பசித்து உண்பவன் அங்ஙனம் உண்பது பின்னும் பசிப்பதற்காகவே' என்று ஒரு சித்தாந்தம் உண்டு. அந்த சித்தாந்தத்தைப் போலவே இளங்குமரனுடைய ஞானப்பசியும் தீரத் தீர வளர்ந்து கொண்டிருந்தது. எவ்வளவு கற்றாலும் அடங்காத பசியாக இருந்தது அது. எத்தனை திங்கட்காலம் வேறு உலக நினைவுகளே இல்லாமல் ஞான வேட்கையில் மூழ்கினாலும் ஒரு கணிக நேரம்தான் கற்றதுபோல் குறைவாகத் தோன்றியது. தன்னை நுகர்வதில் சோர்வு தராத அநுபவம் எதுவோ அது தெய்வீகமானது. அதில் ஈடுபடும் நாட்களும் தெய்வ நாட்களே! உயரிய தத்துவங்களையும், சமயங்களின் நெறிகளையும், வாதிட்டு வெற்றி கொள்ளும் தருக்க முறைகளையும், கற்கக் கற்க, இன்னும் கற்க வேண்டுமென்ற ஆர்வம் பெருகியது இளங் குமரனுக்கு.

ஒரு காலத்தில், மாமிசபர்வதம் போல எதிர்த்து வந்த மல்லர்களை யெல்லாம் இடது கையால் கழற்றிக் கீழே தள்ளக் கூடிய வலிமை பெற்றிருந்த தன் உடம்பு இப்போது கொடிபோன்று இளைத்து மெலிந்திருப்பதையும், ஆனால் அந்தக் காலத்தில் ஞானபலமில்லாமல் இளைத்திருந்த தன் மனம், இப்போது அந்த வலிமையையேப் பெற்றுப் பெருத்து வருவதையும் சேர்த்து நினைத்தான் அவன்.

இனிமேல் கண் பார்வையின் ஒளியினாலும், இதயத்தின் ஆழத்திலிருந்து பிறக்கும் கனிந்த சொற்களாலும், ஆன்மாவின் பலத்தினாலுமே இந்த உலகத்தில் எதையும் வெற்றி கொண்டு தீர்க்க முடியும் போல் ஒரு நம்பிக்கை அவனுக்கு உண்டாயிற்று. அவன் மனத்திற்குள்ளே தொடங்கிய இந்த ஞானயாத்திரையில் பல மாதங்கள் கழிந்து போயிருந்த போதிலும் 'கற்றது குறைவே' என்னும் உணர்விலும் கழிந்த காலம் எல்லாம் மிகச் சில நாட்களைப் போலவே அவனுக்குத் தோன்றின. ஐந்திரம், பாணினீயம், தொல்காப்பியம் போன்ற இலக்கணக் கடல்களில் நீந்துவதற்குக் கழிந்த காலமும், தருக்கத்திற்காக வேத வியாசரின் பத்து அளவைகளையும், கிருத கோடியின் எட்டு அளவைகளையும், சைமினியின் ஆறு அளவைகளையும், ஆழ்ந்து கற்ற காலமும்,—தெய்வத் திருநாட்களாக அவன் வாழ்வில் வந்தவை. பௌத்தர்களின் திரிபிடக நெறியையும் பிற கருத்துக்களையும் அவன் கற்ற காலத்தில் விசாகை அவனுக்குப் பெருந்துணையாக இருந்தாள். வேத நெறிக்கு உட்பட்ட ஐந்துவகைச் சமயங்களின் வாதங்களையும், வேத நெறிக்குப் புறம்பான ஐந்துவகைச் சமயங்களின் வாதங்களையும், அவன் ஞானக்கடலாகிய நாங்கூர் அடிகளிடம் கற்று அறிந்து தெளிந்த காலம் மறக்க முடியாத பொற்காலமாயிருந்தது. இப்படிக் கழிந்த தெய்வ நாட்களினிடையே காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து நீலநாகமறவரும், வீரசோழிய வளநாடுடையாரும் அடிக்கடி திருநாங்கூருக்கு வந்து இளங்குமரனைச் சந்தித்து விட்டுச் சென்றார்கள். விசாகை இடையிடையே யாத்திரை செல்வதும், மீண்டும் திருநாங்கூருக்கு வந்து தங்குவதுமாக இருந்தாள். காலம் அடக்குவாரின்றி ஓடிக் கொண்டிருந்தது.

இளங்குமரன் திருநாங்கூருக்கு வந்த பின் ஓராண்டுக் காலம் கழித்து வைசாக பௌர்ணமிக்குப் பத்து நாட்கள் இருக்கும்போது வீரசோழிய வளநாடுடையார் மட்டும் தனியாக அவனைத் தேடிவந்தார். அவர் தேடிவந்தபோது பிற்பகற் போதாகியிருந்தது. "தம்பி! இன்றே நீ என்னோடு புறப்படவேண்டும். இருட்டுவதற்குள் நாமிருவரும் காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்து அங்கே பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து விட்டு இன்று பின்னிரவில் மணிபல்லவத் தீவுக்குக் கப்பலேற வேண்டும்" என்று அவசரமும், பதற்றமும் கலந்த குரலில் வேண்டினார் வளநாடுடையார். இளங்குமரன் அதற்கு இணங்கவில்லை. "உன் வாழ்வில் நீ அடைய வேண்டிய பெரும் பயன் இந்தப் பயணத்தில்தான் இருக்கிறது. மறுக்காமல் என்னோடு புறப்படு" என்று வற்புறுத்தினார் அவர்.

"என் வாழ்வில் நான் அடைய வேண்டிய பெரும்பயனை இந்தத் திருநாங்கூர்ப் பூம்பொழிலில் அடைந்து கொண்டு தானே இருக்கிறேன்?" என்று சொல்லிப் பிடிவாதமாக மறுத்தான் இளங்குமரன். அடிகளிடமே நேரில் சென்று இளங்குமரனைத் தன்னோடு மணிபல்லவத்துக்கு அனுப்ப வேண்டுமென்று மன்றாடினார் வளநாடுடையார். அடிகளும் சிரித்துக் கொண்டே மறுத்துவிட்டார். உண்மையைச் சொல்லிக் கூப்பிடலாம் என்றால் சக்கரவாளக் கோட்டத்துக் காளி கோவிலில் அருட்செல்வ முனிவருக்குச் செய்து கொடுத்த சத்தியம் நினைவு வந்து வளநாடுடையாரைத் தடுத்தது. நாங்கூர் அடிகளிடம் கோபமாகவும் கேட்டுப் பார்த்தார் அவர்:

"எப்போதுதான் இந்தப் பிள்ளையாண்டானை உங்களுடைய ஞானச் சிறையிலிருந்து விடுதலை செய்யப் போகிறீர்கள்?"

"இன்னும் சிறிது காலத்துக்குப் பொறுத்துக் கொள்ளுங்கள் ஐயா! அவனே சிறைக் கதவுகளைத் திறந்து கொண்டு புறப்பட்டுவிடுவான்" என்று சிரித்தபடியே கூறி அவரை அனுப்பி விட்டார் அடிகள். வளநாடுடையார் ஏமாற்றத்தோடு திரும்பினார். அவர் மட்டும் அன்று இரவு மணிபல்லவத்துக்குப் புறப்பட்டுப் போய் வந்தார்.

• • •

உலகம் எங்கும் ஒரேவிதமாக ஓடிக் கொண்டிருந்த காலம், திருநாங்கூரில் இளங்குமரனுக்குத் தெய்வ நாட்களாகவும், காவிரிப்பூம் பட்டினத்தில் வளநாடுடையார் முல்லை முதலியவர்களுக்கு நைந்த நாட்களாகவும், எங்குமே வெளியேறிச் செல்ல முடியாமல் செல்வச் சிறையிலே அடைபட்டுக் கிடந்த சுரமஞ்சரிக்கும் அவள் தோழிக்கும் காலமே இயங்காதது போலவும் தோன்றின.

வெயிலும், மழையும், காற்றும், பனியுமாகப் பருவங்களால் விளையும் அழகுகள் பூம்புகாரில் மாறி மாறி விளைந்து கொண்டிருந்தன. நகைவேழம்பரும், பெருநிதிச் செல்வரும் வாணிக நிமித்தமாக அடிக்கடி கப்பல்களில் கடற் பயணம் செய்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர். பூம்புகார் வாசிகள் மேலும் இரண்டு இந்திர விழாக்களை அநுபவித்து மறந்து விட்டார்கள். மூன்றாவது இந்திர விழாவும் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

22. கடைசி நாளில் கற்றது

திருநாங்கூர்ப் பூம்பொழிலின் ஒரு சோலையில் அடிகளும் இளங்குமரனும் வீற்றிருந்தனர். சாயங்கால வேளை. உலகம், பகல் என்னும் ஒளியின் ஆட்சியை இழந்து போய் விட்டதற்காகச் சோக நாடகம் நடத்துவதுபோல விளங்கும் மேற்கு வானம். போது ஒடுங்கும் அந்தி மாலைக்குச் சொந்தமான சோகத்திசை மூலையிலே இந்தச் சோக நாடகத்துக்குத் திரை யெழுதினாற் போன்ற காட்சிகள். மேற்கு நோக்கி அமர்ந்திருந்த அடிகளுக்கு முன்புறம் கிழக்கு முகமாகப் பார்த்தவாறு இளங்குமரன் இருந்தான். அவரிடமிருந்து ஏதோ நிறையக் கேட்டு அறிந்து கொள்வதற்கு இருப்பதுபோல அமைந்து அடங்கி இருந்தான் இளங்குமரன். அவரும் அவனுக்குக் கூறுவதற்காக மனத்துக்குள் சிந்தனைகளை வரிசைப் படுத்திக் கொண்டிருப்பது போன்ற முக பாவத்தோடு இருந்தார். மேற்கு வானத்தில் காட்சிகள் மாறிக் கொண்டிருந்தன.

இதேபோன்ற ஒரு மாலை நேரத்தில் முதன் முதலாக நீலநாக மறவர் தன்னை அங்கே அழைத்துக் கொண்டு வந்த நாளை நினைத்தான் இளங்குமரன். இறந்த காலத்தின் நிகழ்ச்சியாக எங்கோ ஒரு கோடியில் நெடுந்தொலைவு நடந்து வந்த பின்னால் காலவீதியின் அந்தப் பழைய திருப்பத்துக்குப் பாவனைகள் மூலமாகவே பின்னோக்கி யாத்திரை போய் விட்டுத் திரும்பினான் அவன்.

அடிகளின் குரல் அவனை அழைத்துப் பேசத் தொடங்கியது :—

"இளங்குமரா! இன்று காலை நீ கற்க வேண்டிய கடைசிச் சுவடியின் கடைசி வாக்கியத்தையும் கற்று முடித்து விட்டாய். அடிக்கடி உன்னைத் தேடிக் கொண்டு இங்கே வருவாரே. அந்தப் பெரியவர் வீரசோழிய வளநாடுடையார்—அவர் எப்போதோ ஒருநாள் கோபத்தில் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். அதை நான் இந்த விநாடி வரை மறக்கவில்லை. 'இளங்குமரனை உங்களுடைய ஞானச் சிறையிலிருந்து எப்போது விடுதலை செய்யப் போகிறீர்கள்?' என்று என்னை அவர் கேட்டிருந்தார். அந்தக் கேள்விக்கு நான் விடை சொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது. அதாவது உன்னை இந்த ஞானச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டிய நேரத்துக்கு வந்தாயிற்று. விடுபட வேண்டிய தகுதி உனக்கும் வந்துவிட்டது.

"இந்த உலகத்தில் எல்லாச் சிறைகளிலிருந்தும் எல்லாத் தளைகளிலிருந்தும் விடுபடுவதுதான் ஞானம் என்று நான் பல்லாண்டுகளாக நினைத்தும், கற்பித்தும், உணர்ந்தும் வந்ததை ஒரே ஒரு கணத்தில் மாற்றி 'ஞானச் சிறை'—என்று சொல்லிய தைரியத்தை அந்தக் கிழவரிடம் தான் கண்டேன் அப்பா!" என்று அடிகள் சொல்லிச் சிரித்தபோது,—

"அதை அடிகள் பொறுத்தருள வேண்டும். அவர் ஏதோ உணர்ச்சி வசப்பட்டு அப்படிக் கூறியிருப்பார்" என்று இளங்குமரன் குறுக்கிட்டுக் கூறினான்.

"பொறுத்தருளாவிடில் இதுவரை இக் கேள்வி என் மனத்திலேயே தங்கியிருக்குமா? நான் பொறுத்துக் கொள்வதற்குக் கடமையும் உண்டு. என்னிடம் நீலநாகன் உன்னைப்பற்றி எப்போது முதல் முறையாகச் சொன்னானோ அப்போதிருந்து நானே உன்னைக் காப்பதற்குத் தவித்தேன் என்ற இரகசியத்தை இன்று நீ தெரிந்து கொள்வதனால் தவறில்லை. என்னுடைய ஞானத்தைப் பயிர் செய்ய ஏற்ற விளை நிலமாவதற்கு முழுமையான மனிதன் ஒருவனை நான் தேடிக் கொண்டிருந்தேன். என்போன்றவர்களுக்கு 'அவதி ஞானம்' என்று ஒருணர்வு உண்டு. 'முன்பின் தொடர்பின்றி இன்னதை இப்படிச் செய்தால் வெற்றிதான் கிடைக்கும்' என நாங்கள் அவ்வப்போது மனத்தில் தோன்றும் தோற்றத்தால் உறுதி கொள்ளும் செயல்களும் மங்கலமாகவே அமையும். நடந்ததையும், நடக்கப் போவதையும் நினைவிலேயே உணர்ந்து கணிக்கும் அவதி ஞானத்தைப் பற்றி உனக்கும் கற்பித்திருக்கிறேன். மனம் கனிந்தால் அந்த அபூர்வ ஞானம் எளிது.

"இளங்குமரா! உன்னைப் பற்றிக் கேள்விப்படுவதற்கு முன், காண்பதற்கும் முன், என்னுடைய நினைவுகளிலும், சங்கல்பத்திலும் நெடுங்காலமாக நான் பாவனை செய்து கொண்டு வந்த பரிபூரணமான மாணவன் எவனோ, அவனாகவே நீ விளைந்து வந்தாய். நீலநாகன் உன்னை இங்கே அழைத்து வந்த நாளில் நம்முடைய முதற் சந்திப்பின் போது நான் கூறிய வார்த்தைகளை நீ இன்னும் மறந்திருக்க மாட்டாய். சந்திக்கின்ற

போது உண்டாகிற உறவு பிரிகிறபோது நினைவு வருவதைத் தடுக்க முடியுமானால் உலகத்தில் துக்கம் என்று உணர்வே ஏற்பட்டிருக்காது. என்னைப் போலவே அந்தப் பழைய நினைவுகளை நீயும் இப்போது திரும்ப எண்ணிக் கொண்டிருப்பாயானால் நான் அப்போது கூறிய வார்த்தைகளையும் மறந்திருக்க மாட்டாய். 'அறியாமையையும், ஆணவத்தையும் தவிர உங்களிடம் கொடுப்பதற்கு வேறொன்றும் கொண்டு வரவில்லை' - என்றாய் நீ. 'உன்னையே எனக்குக் கொடு' - என்று வாங்கிக் கொண்டேன் நான். இன்னும் சில வார்த்தைகளும் அப்போது உன்னிடம் கூறினேன்.

"'என்னுடைய மனத்தில் உதயமாகும் காவியம் ஒன்றிற்கு நாயகனாக ஏற்ற முழுமையான மனிதன் ஒருவனை நான் தேடிக் கொண்டிருந்தேன். அவன் இன்று எனக்குக் கிடைத்து விட்டான்' என்று பூரிப்போடு உன் கைகளைப் பற்றிக்கொண்டு நான் மகிழ்ச்சிக் கூத்தாடியதையும் மறந்திருக்க மாட்டாய். அவற்றை எல்லாம் இப்படித் திருப்பிக் கூறுவதன் நோக்கம் இளங்குமரன் என்கிற காவியத்தின் நிறைவெல்லையாக நான் ஏதைக் கற்பனை செய்து கொண்டிருக்கிறேனோ அதைப் பொய்யாக்கி விடாதே என்று வற்புறுத்துவதுதான்.''

இப்படி இந்தச் சொற்கள் உணர்ச்சி தோய்ந்து அவரிடமிருந்து ஒலித்தபோது அவர் முகத்தை நன்றாகப் பார்க்கும் ஆவலோடு நிமிர்ந்த இளங்குமரன் அப்போதுதான் கிழக்கே உதயமாகிக் கொண்டிருந்த சந்திரனையும், அவருடைய முகத்தையும் சேர்த்துப் பார்த்தான். நாளைக்கு விடிந்தால் சித்திரா பௌர்ணமி என்பதும் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா என்பதும் அவனுக்கு நினைவு வந்தன. தான் திருநாங்கூரில் குருகுலவாசம் செய்த காலத்தில் எத்தனை இந்திர விழாக்கள் நடந்திருக்கும் என்று கழிந்த ஆண்டுகளை எண்ணியது அவன் மனம். தான் நகரத்தில் இருந்தபோது நடந்த இந்திரவிழாக்களையும் நாளைக்குப் புதிய மனிதனாகப் புதிய கண் பார்வையோடு சென்று காண்பதற்கிருக்கும் இந்திர விழாவையும் இணைத்து நினைத்தான் அவன். அடிகளின் பேச்சு மீண்டும் அவன் கவனத்தை ஈர்த்தது. அவன் அவருடைய சொற்களைக் கேட்கலானான்.

"இளங்குமரா! நீ எங்கிருந்தாலும் திருநாங்கூரின் இந்தப் பூம்பொழிலிலிருந்து இரண்டு கண்கள் உன்னை இடைவிடாமல் பார்த்துக் கொண்டிருப்பதாகப் பாவனை செய்து கொண்டிரு. அந்தப் பாவனை நீ செல்லுமிடங்களில் எல்லாம் உனக்கு வெற்றியை அளிக்கும். குருகுலவாசத்தை முடித்துக் கொண்டு எண்ணற்ற மாணவர்கள் உன்னைப்போல இங்கிருந்து பிரிந்து போயிருக்கிறார்கள். அவர்கள் யாவரும் குருவைப் பிரிந்து போவதற்காகக் கவலைப் பட்டிருப்பார்கள். அவர்களைப் பிரிய நேருவதற்காகச் சாமான்ய மனிதரைப் போலக்



குரு கவலைப்பட்டதில்லை. இன்றைக்கு உன்னுடைய குருவுக்கு நீதான் அப்படிப் பட்ட கவலையைத் தருகிறாய்'' என்று சொல்லிக் கொண்டே வந்தவர் குரல் நெகிழ்ந்து அதற்குமேல் சொற்களே வராமல் கண் கலங்கி அவனைப் பார்த்தார். அவனிடமிருந்து பதில் இல்லை. பார்வையும் இல்லை.

இளங்குமரன் கீழே குனிந்தவாறு இருந்தான். அடிகள் அருகில் வந்து அவன் முகத்தை நிமிர்த்திப் பார்த்தார். அவன் மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்ததைக் கண்டார்.

"நீ எதற்காக அழுகிறாய்?''

"சுவாமீ! நான் உங்களுடைய பேரறிவுக்கு முன்னால் அற்பமானவன். சுக துக்கங்களினால் சிறிதும் சலிப்படையாமல் உபசாந்தநிலை பெற்றவராகிய

நீங்களே எனக்கு விடை கொடுக்கக் கண் கலங்குகிறீர்கள். உங்களைப் போன்ற ஞானதேசிகரைப் பிரிந்து புறப்படும் நான் அழாமல் தாங்கிக் கொள்ள இயலுமா? இதுவரை நான் கற்றதெல்லாம் இதற்கு முன்பு கல்லாதிருந்த காலத்து அறியாமையின் அளவைத் தெரிந்து கொள்ளும் அளவுதான். அற்பனாகிய எளியேனுடைய பிரிவு உங்களைக் கண் கலங்கச் செய்யுமானால் அடியேன் நிறையப் பாவம் செய்தவனாக இருக்க வேண்டும்.''

இளைத்த உடல் நடுங்கிட எழுந்து நின்ற இளங்குமரன் அழுதுகொண்டே அடிகளுடைய பாதங்களில் விழுந்து வணங்கி



அவற்றைப் பற்றிக் கொண்டான். அவனுக்குத் தெரியாமல் தம்முடைய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவனுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக அவனை எழுப்பி நிறுத்தித் தோளோடு தோள் தழுவிக் கொண்டார் அந்தப் பெரியவர். கலங்கியறியாத அவர் மனமும் அன்று கலங்கியிருந்தது.

ஞானக் கடலும் ஞான ஆறும் கலப்பது போன்ற இந்தத் தூய்மையான ஞான சங்கமத்தைப் பார்க்கக் கூசியவனைப் போல் என்றும் களங்கமுடைய சந்திரன் தன்னை மேகத்தில் மறைத்துக் கொண்டான். தன்னுடைய ஆணவம் மெய்யாகவே அழிந்து விட்டதா, இல்லையா, என்பதைச் சோதிப்பதற்காகவே அடிகள் இந்தக் கடைசி நாளில் இப்படி விநயமாகப் பழகுகிறாரோ என்று இளங்குமரன் அஞ்சினான். அந்த அச்சத்தினால் தான் அவன் உடலே நடுங்கியது. அவனுடைய வினாவை அச்சத்தை அடிகள் தம் பேச்சினாலேயே போக்கினார்.

''பாசங்களை விட்டுவிட வேண்டுமென்று இவ்வளவு காலமாக உனக்குக் கற்பித்துவந்த எனக்கு உன்னிடமிருந்து கிடைத்தது என்ன தெரியுமா?''

''என்ன சுவாமீ?''

''என்றும்விடமுடியாத பெரியபாசம்.'' அவனுக்குத் தெரியாமல் மறுபடியும் கண்களில் அரும்பிய நீரைத் துடைத்துக் கொண்டார் அவர். அன்றிரவு விடிய விடிய இளங்குமரனுக்கு அவர் பல அறிவுரைகளைக் கூறிக்கொண்டிருந்தார். அடுத்த நாள் விடிந்து சிலநாழிகைகளுக்குப் பின் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து நீலநாகமறவர் இளங்குமரனை அழைத்துப் போவதற்கு வந்து விட்டார். தம்முடைய மனத்தை ஆட்கொண்ட புதிய மாணவனைப் பழைய மாணவனாகிய நீலநாகவிடம் திரும்ப ஒப்படைக்கும் போதும் நாங்கூர் அடிகள் உணர்ச்சி வசப்பட்டார். இளங்குமரன் ஞான மல்லனாகிய தன் குருவை வணங்கிவிட்டுச் சமய வாதம் புரிவதற்கு அவர் ஆசியுடன் தனக்கு அளித்த ஞானக் கொடியை வலது கையில் தாங்கியபடி பூம்பொழிலுக்கு வெளியே பாதங்களைப் பெயர்த்து வைத்து நடந்தபோது, யாத்திரை போயிருந்த விசாகை எதிரே திரும்பி வந்து கொண்டிருந்தாள்.

''என்னுடன் வாதிடுங்களேன். முதல் வெற்றியை நான் உங்களுக்கு அளிக்கிறேன்'' என்று நின்றாள் விசாகை. நீலநாகமறவர் திகைத்தார். இளங்குமரன் சிறிது தயங்கியபின், ''அம்மையாரே! தொடக்க நாளில் என்னுடைய பய பக்தியையே பிட்சையாக ஏற்றுக் கொண்ட வகையில் நீங்களும் எனக்கு ஒரு குரு! உங்களோடு வாதிட மனம் ஒப்பவில்லை. உங்களை வணங்குகிறேன். வாழ்த்துங்கள்'' என்று வணங்கினான். விசாகை அவனை வாழ்த்திவிட்டுச் சென்றாள்: ''இந்தக் கொடி வெற்றிக் கொடியாக உயரட்டும்.''

இளங்குமரன் நீலநாகமறவரோடு தேர் நின்று கொண்டிருந்த இடத்தை நோக்கி நடந்தான். தன்னுடைய ஞான குருவின் கண்களை மானசீகமாகப் பாவனை செய்து கொண்டே நடந்தான் எதிரே அவனுடைய வழி நீண்டு விரிந்து கிடந்தது. (இரண்டாம் பருவம் முற்றும்)



வாழ்வும் கனவும்

கு. வேங்கடரமணி

உச்சிப் பொழுதின் வெய்யில் வெம்மையைக் கொட்டிக் கொண்டிருந்தது. குடையை மடக்கிக் கொண்டு, நெற்றியிலும் முகத்திலும் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே நளினி அந்த வார்டுக்குள் நுழைந்தாள். வெள்ளை உடையில், ஓசை வெளிப்படாத மெதுவான காலணிகளோடு ஒவ்வொரு கட்டிலின் அருகிலும் நின்று நின்று நடக்கும் போதும், கடமையின் வழக்கமான நிதானத்தைக் கடந்து அவள் நெஞ்சம் அடித்துக் கொண்டது. கடைசியில்தான் அவள் ஜன்னலின் அருகில், ஓரத்தில் போடப்பட்டிருக்க கட்டிலை நெருங்கினாள்.

மேலே மின் விசிறி விடாமல் சுழன்று கொண்டிருந்தும் புழுங்கிக் கொட்டியது. மருந்தின் நெடி கலந்து குழைந்த காற்று வெளியேற மனமில்லாமல் அங்கே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. நளினிக்கு இது பழகிப்போன இடம்தான். பழகிப் போன மரத்துப் போன வாசனையும் சூழ்நிலையும்தான். இருந்தும் இன்று அவள் வேதனையின் வெம்மையை அதிகமாக அனுபவித்தாள். ஜன்னல் அருகில் நிலைகுத்தி, கண் இமைக்காமல் படுக்கையில் கிடக்கும் அவன் முகத்தைப் பார்த்தாள். அவள் நெஞ்சம் ஆடித்தது.

"வாழ்க்கையில் நினைத்ததெல்லாம் ஏன் நடக்காமல் போக வேண்டும்? நினைக்காததெல்லாம் ஏன் நிகழ வேண்டும்? கொஞ்சமும் எதிர்பாராத இந்த சந்திப்பு ஏன் நிகழ வேண்டும்?"

கேள்விகள் அவளை வந்து மொய்த்துக் கொண்டன. அவற்றின் வேகம் தாங்காமல், அல்லது அவைகளுக்கு விடை தேடியோ நளினி தன் பார்வையை அவன் மேலிருந்து எடுத்து, நகர்ந்து ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றபடி வெளியே செலுத்தினாள்.

எதிரே பெரிய சாலை தெரிந்தது. அதிலே மனிதக் கூட்டம் விதம்விதமான வாகனங்களில் இரு திசைகளையும் நோக்கித் தங்களுடைய நித்திய கதியில் விரைந்து கொண்டிருந்தது. போக்குவரத்து வெள்ளச் சீறலையும் இலட்சியம் பண்ணாமல், அதைப் பற்றி நினைக்கவும் நேரமில்லாமல், அதே கூட்டத்தின் மற்றொரு பகுதி இரு விளிம்புகளிலும் நடைபயின்று கொண்டிருந்தது. அத்தனை பேர்களுக்கும் எங்கெங்கே என்னென்ன வேலைகள் இருக்குமோ?

மூன்று நாட்களுக்கு முன்னும் இதே சாலையில், இப்படிப் பறக்கும் அவசரத்தின் நடுவில்தான் ஒரு விபத்து நிகழ்ந்தது. நடைபாதையில் இருந்து வேகமாகச் சாலையைக் கடந்து வந்து கொண்டிருந்தவன் காரின் அசுர வேகத்தில் அடிபட்டுக் கீழே விழுந்து விட்டான். வலது காலின் மேல் ஏறிவிட்ட சக்கரம் அதையே நொறுக்கிவிட்டு விட்டது. கொஞ்ச நேரம் அந்த இடத்தில் கூட்டமும் கூக்குரலுமாக இருந்தது. அதற்குப் பிறகு அங்கே விபத்தின் சின்ன அடையாளங்கூட இல்லை. ஆனால்...

நளினி அவசரமாகத் திரும்பித் தலைக்குப் பின்னாலும் அந்த ஜன்னல் ஓரப் படுக்கையைப் பார்த்தாள். இரத்தம் குறைந்து வெளிறிவிட்ட முகம். வேதனை அதை உருக் குலைத்திருந்தது. மூன்று நாட்களாய், சுவாசத்தின் மெல்லிய சலனத்தைத் தவிர வேறு அசைவே இல்லாமல் கிடப்பவனின் முகம். அவனுக்கு இப்பொழுது அந்த விபத்தைப் பற்றிய நினைவு இருக்குமோ, என்னவோ? தன்னுடைய வலது காலின் நிரந்தரக் குறைவை உணரும் சக்தி எப்பொழுது அவனுக்கு வருமோ, அதை உணர்ந்த பிறகு அந்த அதிர்ச்சியை எப்படித் தாங்கிக்கொள்வானோ?

நளினி அந்த முகத்தையே பார்த்தாள். நீண்ட நேரத்துக்குப் பின், கனவிலிருந்து விடுபடுவது போலக் கண்ணிமைகள் படபடத்தன அவனுக்கு. நெஞ்சில் நினைப்புகள் கனமாகக் கூடி, நெட்டுயிர்ப்பாக வடிந்தன.

"நளினி!" அவள் திரும்பிப் பார்த்தாள். வீட்டுக்குத் திரும்புவதற்காக, உடை மாற்றிக் கொண்டு தாழ்வாரத்தோடு நடந்த மேரியின் குரல். நளினி மௌனமாகப் பார்த்துக் கொண்டே தலையசைத்தாள். ஆனால் மேரி மேலே நடக்கவில்லை. உள்ளே நுழைந்து நளினியின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன நளினி! ஒரு மாதிரியா யிருக்கே?"

"ஒன்றுமில்லையே!"



"ஊஹூம்! என்னை ஏமாற்ற முடியாது. நானும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன். நீ ரெண்டு நாளாய் சரியாவே இல்லே. ஏதோ பிரமை புடிச்சாப்பிலே மலேச்சு, மலேச்சு, நிற்கிறே... சரியாச் சொன்னா, இந்த விபத்து ஆசாமி வந்தது முதல்தான் நீ இப்படி இருக்கே!" மேரி அந்த ஜன்னல் பக்கத்துப் படுக்கையைப் பார்வையால் சுட்டிக் காட்டினாள்.

"இல்லே மேரி! நீயாக ஏதாவது கற்பனை பண்ணாதே!"

"அப்படியானால் நீயே சொல்லிப்பிடு. அவர் யார்? சொல்லு நளினி!"

"உனக்குத்தான் என் கதை தெரியுமே மேரி! எல்லாம் சொல்லியிருக்கேனே" என்றாள் நளினி.

"ஓ! அவரா? உன் மனசிலே ஒரு காலத்திலே ஆசையை வளர்த்து அப்புறம் ஒரு மொட்டைக் கடுதாசை நம்பி உன்னை உதறி விட்ட ஆசாமியா?"

நளினியின் தலை மட்டும் அசைந்தது; ஆமாம் என்று பதில் கூறியது.

கொஞ்ச நேரம் நின்றுவிட்டு மேரி போய் விட்டாள்.

எதிர்க் கோடியில் இருந்து ஒரு படுக்கை முனகத் தொடங்கியது. இத்தனை நேரம் மறந்திருந்த சூழ்நிலை நளினிக்கு நினைவு வந்தது. அவள் அவசரம்அவசரமாக அந்தக் கோடிக்கு ஓடினாள். வெப்பிசிவின் கொடுமை தணிய வெகு நேரமாயிற்று.

மறுநாள் கிட்டத்தட்ட இதே அனுபவந்தான். அவனுடைய முகத்தையே பார்த்துப் பார்த்து செயலிழந்து நின்றாள் நளினி. பழைய காட்சிகளைக் காண்கிறவள்போல, ஜன்னல் அருகில் நெடு நேரம் நின்றாள். அதில் வேடிக்கையும் பரவசமும், வேதனையும், மனத் துடிப்பும் மாறி மாறி வந்து அவள் திணறினாள்.

மேலும் நான்கு நாட்கள் இதே போலக் கழிந்தன. அவன் சாவுக்கும் பிழைப்புக்கும் நடுவில் எந்தப் பக்கம்

திரும்புவது என்று புரியாமல் தடுமாறிக் கொண்டு கிடந்தான்.

நளினிக்கு மூச்சுவிட நேரமில்லை. இரண்டு மணி நேரம் சுற்றிச் சுழன்று களைத்துப் போனாள் அவள். இது மாதிரி அவள் ஒரு நாளும் களைத்துப் போனதில்லை. நான்கு நாட்களாய்க் குழம்பிய மனம் அவளை எப்படிச் சோர்ந்து போகச் செய்துவிட்டது?

"நளினி!" மேரி உள்ளே நுழைந்தாள்.

"வா மேரி. உட்கார்ந்திரு. ஒரு நிமிஷம்! கையைக் கழுவிக் கொண்டு வரேன்."

"இல்லே. உன்னிடம் ஒரு சேதி சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்."

"என்ன அப்படி அவசரம்?"

"நீ மனசுக்குள்ளேயே வைச்சுக்கிட்டு வெளியில் சொல்லா விட்டால் எனக்குத் தெரியாது என்று நினைக்காதே. உன்னை அந்த வார்டிலே இருந்து மாத்திட்டாங்களா? இப்போ நான் அங்கேயிருந்துதான் வரேன்."

"உம். விஷயத்தைச் சொல்லேன்!"

"அவருக்கு இன்னிக்கு மயக்கம் தெளிஞ்சு போச்சு."

"யாருக்கு?"

"அவர்தான். உனக்கு வேண்டியவர். இல்லே, ஒரு காலத்திலே உன் மனசைக் கொள்ளை கொண்டவர். அவர் பெயர் மறந்து போச்சே....!"

"நாராயணன்..."

"ஆமாம். கண்ணைத் திறந்து பார்த்தார்!"

"அப்புறம்?"

"வலி தாங்காமல் கத்தினார்."

"அவருக்குத் தெரிஞ்சு போச்சா? வலது காலை எடுத்துவிட்டதைச் சொல்லிட்டயா?"

"ஓ! அவருக்கே அது தெரிஞ்சு போச்சு."

நளினி பேசாமல் நின்றாள்.

"வீட்டுக்குத் திரும்பும்போது வந்து பாரேன்" என்றாள் மேரி.

"எதற்காக நான் வந்து பார்க்கணும்?"

"இப்படிக் கேட்கிறவள் அன்னிக்கு ஏன் பிரமை புடிச்சு நின்னே? அப்புறம் உன் இஷ்டம். உன்னிடம் சொல்லத்தான் ஓடிவந்தேன். நேரமாச்சு, நான் போறேன்."

தலையசைக்கக் கூடத் தோன்றாமல் நின்றாள் நளினி. நாராயணனைப் போய்ப் பார்ப்பதா, வேண்டாமா என்ற சிந்தனையில் அவள் பிலையாகிப் போனாள்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு நாராயணனின் கண்கள் மெள்ளத் திறந்தன. எதிரில் தன்னையே பார்த்துக் கொண்டு நின்ற நளினியை அவனும் பார்த்தான். அவனுடைய நெற்றி சுருங்கியது. அவளைப் புரிந்துகொண்டதும் ஒரு மலர்ச்சியும் ஏக்கமும் கலந்து அவன் முகத்தில் படிந்தன.

"நீயா?" என்று வறண்ட குரலோடு கேட்டான் நாராயணன்.

"என்னை நினைவு இருக்கா?"

"நளினி!"

"இப்போது நான் இங்கே நர்ஸாக இருக்கிறேன்..."

"நான் நோயாளியாக இங்கே வந்து சேர்ந்திருக்கிறேன்."

காங்கிரஸ் ஆட்சி வகுத்துள்ள காரிய சாத்தியமற்ற திட்டங்களை நிறைவேற்ற காகிதப் பணத்தை இஷ்டம் போல அச்சடித்துப் புழங்க விடுவதால் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்து ஏழைகள் பரம ஏழைகளாக்கப்படுகிறார்கள். ஆகவே காங்கிரஸினுடைய சோஷலிஸம் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்குப் பதில் அதிகப்படுத்தியே வருகிறது.

—ராஜாஜி

அவன் இதைச் சொல்லிவிட்டுச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"என்னை நானே ஏமாற்றிக்கொள்ளத்தான் இனிமேல் எனக்கு என்ன இருக்கிறது? ஒற்றைக் காலோடு உயிரையும் வைத்துக்கொண்டிருக்கவேணும் என்றால், உணர்ச்சி இருக்கக் கூடாது. உள்ளுக்குள்கூட அழக்கூடாது."

"ஆமாம். ஒரு வழியில் இதில் ஆறுதலைத் தேடி, சந்தோஷப்பட வேண்டியதுதான். உயிருக்கே வந்தது காலோடு போயிற்றே!"

"அதுதான் நளினி வேதனை! உயிர் போயிருந்தால் கவலையே இல்லை."

நளினி தன் காதுகளைப் பொத்திக்கொண்டாள். மறுபடியும் அவன் அதே குரலில் சிரித்தது தெரிந்தது. அதற்குமேல் அவளால் அங்கே நிற்க முடியவில்லை. என்ன இருந்தாலும் அவளைப் பித்தம் கொள்ள வைத்தது அந்த உருவம்: குரல்.

"நேரமாகிறது. நான் போகட்டுமா?"

"சரி."

சோதனைபோல் மறுபடியும் நாராயணன் இருக்கும் வார்டுக்கே அவள் வரவேண்டியிருந்தது. நான்கு நாட்கள் கட்டாயப்படுத்தி அந்தப் பக்கமே திரும்பாமல் இருந்தவள் மீண்டும் தன் கடமையை நினைவூட்டும் வெள்ளை உடைகளோடு அந்த வார்டுக்குள் நுழைந்தாள்.

கடைசியில் நாராயணனின் கட்டிலை நெருங்கினாள். வாய் திறவாமல் அவனையே அவள் பார்த்தாள். அவனும் மௌனமாய் அவனுடைய உடலின் உஷ்ண நிலையைக் கணக்கெடுத்து மற்ற வேலைகளையும் கவனித்தாள்.

"நளினி!" — கூப்பிட்டுக் கொண்டே நாராயணன் தலை நிமிர்த்தான்.


"ஊஹூம்! அசையக்கூடாது. அப்படியே படுத்திருங்கள்!"

"முடியாது, நளினி! இப்படியே படுத்திருந்தால் கூட எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். எனக்குக் கொஞ்ச நேரமாவது எழுந்து உட்கார்ந்து உலகத்தைப் பார்க்கணும்."

"அப்புறம் ஜுரம் வந்துவிடும். உடம்பை அசைக்கவே கூடாது."

"வந்தால் வரட்டும்!"

நீங்கள் அறிய மகிழ்ச்சியடைவீர்கள்....



2 புதிய


நேஷனல் எக்கோ

ரேடியோக்கள்

உங்களுக்கு இணையிலா இசை இன்பத்தை அளிக்கும்

இதோ இரு நேர்த்தியான புதிய ரேடியோக்கள் ... நேஷனல்-எக்கோவினால் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட இந்த ரேடியோக்கள் உங்களுக்கு இனிய இசை விருந்தளிக்கும் ... ஒன்று மின்சார சக்தியால் இயங்குகிறது, மற்றொன்று பாட்டரியினால் இயங்குகிறது. இவ்விரண்டும் அழகான வினியர் காபினெட்கள் கொண்டவை ... ஹை-பை லௌட் ஸ்பீக்கர்களும், கவர்ச்சியான டயல்களும் கூடியவை ... தொனியை தத்ரூபமாக அளிப்பவை! மேலும் இவைகள் முற்றிலும் மான்ஸூனைஸ் செய்யப்பட்டவை!

இன்றே உங்கள் அருகாமையிலுள்ள நேஷனல்-எக்கோ ரேடியோ டீலரிடம் இவைகளை இலவசமாக இயக்கிக் காண்பிக்கச் சொல்லுங்கள்!



மாடல் U-755:

ஏஸி/டிஸி மின்சார சக்தி கொண்டு இயங்குகிறது. 6-வால்வுகள், 8 பாண்டுகள். டோன் கண்ட்ரோல். விலை ரூ. 351.00. எக்ஸைஸ் ட்யூடி உள்பட; வரிகள் தனி

மாடல் B-755:


பாட்டரியினால் இயங்குகிறது. 5 வால்வுகள், 8 பாண்டுகள். டோன் கண்ட்ரோல். பாட்டரி மிகக் குறைவாக செலவாகிறது. விலை: ரூ. 351.00. எக்ஸைஸ் ட்யூடி உள்பட; வரிகள் தனி

நேஷனல்-எக்கோ
ரேடியோக்கள் சிறந்தவை—
அவைகள் மான்ஸூனைஸ்
செய்யப்பட்டவை!

ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸஸ்
லிமிடெட்
பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • டில்லி
பாட்னா • பெங்களூர் • ஸெகந்திராபாத்

GRA-2256/II

நரை மயிரென இயற்கையைக் குறைகூறுதல் முறையோ?



"இயற்கையாகவே என் கேசம் நரைத்துவிட்டது ஐயா; என்ன செய்ய முடியும்?" —இவ்வாறு பலர் குறைகூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆனாலும் நரை மயிருக்காக இயற்கையைக் குறைகூறுபவர், ஒருவருடைய கேசம் ஏன் நரைக்கிறது என்று ஆராய்வதுண்டா? 90 சதவிகிதம் இளமையில் நரை, சரியான கேச பராமரிப்பு இல்லாமையாலும், சுகாதாரமற்ற இடங்களில் வசிப்பதாலும், மற்றும் மட்டரகமான கூந்தல் தைலங்களை உபயோகிப்பதாலும் ஏற்படுகின்றன என்று பரிசோதனைகள் மூலம் தெளிவாகியுள்ளது. விஞ்ஞான முறையில் அகமதாபாத்தில் உள்ள ஒரு மிக்க நவீனமான பாக்டரியில் தயாரிக்கப்படும் "லோமா" நரை மயிர் ஏற்படுவதைத் தடுக்க சிறந்த மூலதாரப் பொருட்களுடன் சீரிய முறையில் செம்மையாகத் தயாரிக்கப்படுகிறது. "லோமா"வை வாங்குங்கள், இந்தியாவிலும் மற்றும் வெளிநாடுகளிலும் பல இலட்சக்கணக்கான மக்கள் ஏன் "லோமா"வில் பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்களே உணர்வீர். ஞாபகமிருக்கட்டும். "லோமா" என்பதன் பொருள், சிறந்த தரம் என்பதே—நீங்கள் எதிர்பார்ப்பதும் அதுவே!



கேசத்தைக் கருமையாக்குவதில் **லோமா** பாரினில் புகழ்பெற்றது.

பூரண ஏஜெண்டுகளும் ஏற்றுமதியாளர்களும்:
எம். எம். கம்பாத்வாலா
அகமதாபாத்-1 (இந்தியா) ஏஜெண்டுகள்:
வி. நரோத்தம் & கம்பெனி பம்பாய்-2

MPS-TAM

சென்னை ஏஜெண்டுகள்: ஜே. [illegible] கம்பெனி, 200, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜெண்டுகள்: [illegible] கோ., 41, 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

அவன் எழுந்து உட்கார முயன்று கைகளை மடித்து ஊன்றி உடலை நிமிர்த்தினான். நளினி சட்டென்று பாய்ந்து அவனைப் பிடித்துப் படுக்கையோடு கிடத்தினாள். இருவருமே ஒரு விநாடி அதிர்ந்து போனார்கள்.

"நளினி!"

"உம்..."

"என்னைப் பற்றி நீ கேட்கவே இல்லை. உன்னைப் பார்த்தப்புறம் நான் பேசணும் என்று துடிக்கிறேன். நாலு நாட்களாய் நீ திரும்பியே பார்க்கவில்லை."

தன் உள்ளத்தின் நெகிழ்வை மூடிக் கொண்டு, கடுமையாக, வேண்டு மென்றே ஏதாவது சொல்ல வேண்டும் என்று அவள் துடித்தாள். ஒரு காலத்தில் அவள் ஏமாற்றப் பட்டதின் துக்கம் அவள் நெஞ்சை அடைத்துக்கொண்டிருக்கிறதே, அவனைப் பார்த்து விட்டது முதல்.

"நான் எதற்காக உங்களைப் பார்க்க வரணும்? இன்றைக்கு ஏதோ கடமை, அதனால் வந்தேன்."

"நளினி! நான் உண்மையை உணர்ந்து எத்தனையோ நாளாச்சு. ஆனால் நீ இருக்கிற இடம் தெரியவில்லை. தெரிந்ததும் உன்னைப் பார்க்கத்தான் ஓடி வந்தேன். நான் நினைத்து வந்தது நடந்துவிட்டது. அதோடு நினைக்காததும் நடந்துபோச்சு. நளினி, நான் நொண்டி."

"என்னால்தான் இப்படி ஆச்சு என்கிறீர்களா...?"

"ஐயோ! சத்தியமாக அப்படிச் சொல்லவில்லை, நளினி."

"பின்னே?"

"நான் தப்பு செய்துவிட்டேன். அதை உணர்ந்ததும் உன்னிடம் மன்னிப்புக் கேட்க ஓடி வந்தேன்."

"ஒரு வாழ்வு முழுவதையும் பாலைவனமாக்கிவிட்டு அதற்குப் பிறகு மன்னிப்புக் கேட்கக் கூட இடம் இருக்கிறதா? என்னைப் பற்றி யாரோ இல்லாததை யெல்லாம் எழுதினதை நம்பி, என்னையே உதறிவிட்டீர்கள். முதல் நாள்வரை பார்க்கக் குளிர்ச்சியாய் இருந்த என் முகம், உங்களுக்குப் பார்க்கப் பிடிக்காததாகப் போய்விட்டது. அது மட்டுமா? என்னைப் பற்றி ஊர் முழுதும் ஒரே அபவாதம். எல்லாம் உங்களால் வந்தது. ஊரை விட்டே அப்பாவும் நானும் கிளம்பினோம். ஆனால் எங்கே போனாலும் உங்கள் கதை எனக்கு முன்னால் வந்தது. அப்பா எத்தனையோ பாடுபட்டார். எனக்குக் கல்யாணம் நடக்க வழியே இல்லை. நானும் ஒரு பெண்ணாக உலகத்தில் வாழ முடியாது என்று தீர்மானமாகிவிட்டது. அதற்கு மேல் அந்த ஆசையை மூட்டை கட்டி விட்டேன். இப்படி வேலை பார்த்துப் பிழைக்கிறேன். மனசை மரத்துப் போகச் செய்து கொள்கிறேன்."

"நளினி! எல்லாம் எனக்குப் புரிகிறது. நான் உனக்குமேல் எவ்வளவோ அனுபவித்தேன். உன்னை மறக்க, உன்மேல் வெறுப்பை வளர்க்க நான் எத்தனை பாடுபட்டேன், தெரியுமா? உண்மையைச் சொல்கிறேன், நளினி! அதற்குப் பிறகு நான் எந்தப் பெண்ணையும் நினைத்துப் பார்த்ததுகூடக் கிடையாது. கல்யாணமே வேண்டாம் என்று விட்டேன். அப்பா எத்தனையோ ஆசை காட்டினார். போன வருஷம் அவரே போய் விட்டார். போகும் போதுதான் அவர் சொன்னார். நான் உன்னை விரும்பினது அவருக்குப் பிடிக்கவில்லையாம். அவர் நிலைமைக்கு அது தகாத சம்பந்தமாம். நேரிடையாகச் சொன்னால் நான் கேட்க மாட்டேன் என்று அவரே உன்னைப் பற்றி ஏதேதோ எனக்கு எழுதி என் மனத்தைக் கலைத்துவிட்டார். கடைசி மூச்சு வெளியேறும்போது இதற்காக அவர் கண்ணீர் விட்டார். நளினி! நளினி! நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்கத்தான் வந்தேன்."

"யார் செய்ததாய் இருந்தால் என்ன? எனக்கு ஒரு வழியில் வாழ்வு இருண்டு போய்விட்டது!"

"அதற்காகத்தான் நான் ஓடிவந்தேன். உன்னிடம் மன்னிப்புக் கேட்டு, உன்னை வாழ வைக்கத் துடித்துக்கொண்டு வந்தேன். ஆனால் என் எண்ணம் நிறைவேறவில்லை. நொண்டியாக உன்னிடம் வந்து சேர்ந்தேன்."

"நடக்காததைப் பற்றிப் பேச இனிமேல் எதுவும் இல்லையே!"

அவனுக்கு மூச்சுத் திணறியது. நெஞ்சு வறண்டு புகைந்தது. தண்ணீர் வேண்டுமென்று சைகை காட்டினான். நளினி அவனுடைய வாயில் நீரை வார்த்தாள்.

"நீங்கள் இத்தனை பேசியிருக்கக் கூடாது. தூங்குங்கள்."

நாராயணன் சோர்வோடு கண்களை மூடிக் கொண்டான்.

மறு நாள் அவனுக்கு ஜுரம் வந்து விட்டது. அபாய நிலையைத் தொடும் கட்டம். உள்ளே நுழைந்து அவன் கிடந்ததைப் பார்த்ததுமே நளினி திடுக்கிட்டாள். அவளுடைய பிடிவாதத்தை மீறிக் கண்கள் கலங்கின.

'நான் நேற்று அவ்வளவு தூரம் அவருடைய மனத்தை நோகச் செய்திருக்கக் கூடாது' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். யாரும் அறியாமலே கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஆனால் மனத்தைத் துடைக்க முடியவில்லை.

"அவர் பிழைத்துவிட வேண்டும்' என்று திரும்பத் திரும்ப மனத்துக்குள் வேண்டினாள். நேரம் வளர, வளர அவள் மனத்தில் இந்த ஆசையின் தீவிரமும் வளர்ந்தது.

'என்னைத் தேடி என்னிடம் மன்னிப்புக் கேட்க, என் வாழ்வில் புதுத் துளிரைக் காண ஓடி வந்தாரே! வந்தவர் ஒரு காலைப் பறி கொடுத்தார். அதையும் பார்த்துவிட்டு நான் அவரை நிம்மதியாக இருக்க விடவில்லை. அமைதியோடு சாக விடவில்லை. முன்பின் தெரியாத நோயாளிக்கும் செய்யும் கடமையைக்கூட மறந்து விட்டேன். எப்படியாவது இவர் பிழைத்து விடட்டும். ஒரு காலத்தில் நான் இவரிடம் வைத்த அன்புக்காகவாவது இவர் உயிர் பிழைக்கட்டும். அப்புறம் இவருக்காக நான் என் வாழ்க்கையே கொடுக்கிறேன்.'

இதே எண்ணங்களோடு காத்திருந்தாள் நளினி. மூன்று மணி நேரமாய்த் தன்னுடைய வாழ்க்கையே அவனுக்காக வைத்துக்கொண்டு காத்திருந்தாள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு நாராயணனுக்குக் காய்ச்சல் முற்றிலும் குணமடைந்து விட்டது. நளினி அவசரப் படவில்லை. 'இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்' என்று காத்திருந்தாள்.

அவன் ஆஸ்பத்திரியை விட்டுப் போக நாள் குறிப்பிட்டு விட்டார்கள். அதற்கு முதல் தினம். அதாவது அவன் ஜன்னல் பக்கத்துப் படுக்கையில் தங்கியிருந்த கடைசி நாள்.

"நளினி! உன்னை நான் மன்னிப்புக் கேட்டேன். ஆனால் நான் உன் வாழ்வையே வீணாக்கியதற்கு, என்னுடைய உயிர் உள்ள வரையில் அதை நினைத்து வருந்தப்பட வேண்டும். அதுதான் சரி."

"அப்படிச் சொல்லாதீர்கள்...."

"நீ எனக்காக வருந்தப்பட்டு நான் பிழைக்க வேண்டு மென்று வேண்டினாய், நளினி! அதற்காக நான் நன்றியைத் தெரிவிக்கிறேன். அதையாவது ஏற்றுக்கொள். என்னால் வேறு எதுவும் செய்ய முடியாமல் போய் விட்டது."

"நான் ஏதோ அப்போது ஆத்திரமாகப் பேசிவிட்டேன். அதை மறந்து விடுங்கள். மறந்துவிடு—"

"அது நியாயந்தான் நளினி. அதில் எனக்கு வருத்தமே இல்லை. உன் வாழ்வைக் கனவாகச் செய்து விட்டேன்."

"இல்லை. என் வாழ்வு அர்த்தமில்லாதது என நினைத்தேன். ஆனால் இப்பொழுது அதையும் அர்த்தமுள்ளதாகச் செய்யலாம் என்று புரிந்து கொண்டேன். இனிமேல் உங்களாலும் தனியாக வாழ முடியாது. அதனால்....?"

"நளினி!"

நாராயணன் அவளையே பார்த்தான். அவள் முகம் சிவக்க சட்டெனத் திரும்பினாள். ஜன்னலுக்கு அப்பால் எதையோ தேடினாள்.

'வேண்டாம் நளினி! நீ இத்தனை நாட்கள் கல்யாணம் ஆகாமலே துன்பப்பட்டது போதும். ஒரு நொண்டியைக் கைப்பிடித்து இனிமேலும் ஓயாத அந்த மனக் குறைக்கு ஆளாக வேண்டாம். எனக்கும் அந்த ஆசை இருந்தது. ஆனால் அதை அறிந்துவிட்டேன். உன்னால் ஆயிரம் நோயாளிகளுக்கு வாழ்வும் ஆறுதலும் அளிக்க முடியும். எனக்காக இதை உதறிவிட்டால், அதனால் நம் இரண்டு பேருக்குமே நிம்மதி யிருக்காது. வாழ்க்கையில் கனவுகள் எத்தனையோ காணலாம். ஒரு நாளும் கனவு வாழ்வாகிவிடாது. அதனால் நான் சொல்கிறேன். நளினி! நாம் இருவரும் ஒரு சிறுபிக் கனவை வாழ்வு என்று நினைத்து ஏமாற வேண்டாம். அப்படிச் செய்தால் நம் வாழ்வு முழுதும் நமக்குப் பிடிக்காத கனவு களே வந்து கொண்டிருக்கும்."

நளினி கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டாள். "உங்களால் இப்படியே ஒண்டியாக வாழ முடியுமா?"

"உன் நினைவு இருக்கிறவரையில் முடியும்."

அவள் சிறிது நேரம் அங்கேயே நின்றாள். அப்புறம் அவள் வரவை எதிர்பார்த்த மற்ற நோயாளிகளைப் பார்க்கப் போய்விட்டாள்.

அவனை அழைத்துப் போக மறுநாள் அவனுடைய உறவினர் ஒருவர் வந்தார். நாராயணன் எல்லாரிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டான். நளினியிடமும் விடைபெற்றுக் கொண்டான். அவள் வாயே திறக்கவில்லை. தலையை மட்டும் அசைத்தாள்.

அழைக்க வந்தவரின் கையைப் பிடித்துக் கொண்டு அவன் நடந்தான். தாழ்வாரத்தைக் கடந்து, படியிறங்கி, வெளிச் சுவரையும் தாண்டிப் போய்விட்டான்.

'அவன் ஏன் வந்தான்? ஆசையோடு வந்து, ஒண்டியாகித் தனியே திரும்பிப் போகவா? இது வாழ்வு. இதில் நினைத்தது எல்லாம் நிகழாது. இது கனவு அல்ல. இதிலே எதிர்பார்க்காத நிகழ்ச்சிகள்தான் அதிகமாயிருக்கும்.'

நளினி ஜன்னலை விட்டு நகர்ந்தாள். அதன் அருகில் கிடந்த கட்டில் காலியாக இருந்தது. நாராயணன் சொன்னது உண்மைதான். அந்தப் படுக்கை எப்பொழுதும் இப்படியேவா இருந்துவிடப் போகிறது? நாளைக்கே வேறொரு நோயாளி அதைப் பிடித்துக் கொள்ள வந்து விடுவான்.

எதுவும் நிச்சயமில்லை; எதுவும் நிரந்தரமில்லை.

அவளுக்காகக் கடமை காத்திருக்கிறது. அதோடு வாழ்வுந்தான்! பின்னால் வந்து நின்று அவளுடைய தோளைப் பற்றி அசைத்த மேரி இதைத்தான் நினைப்பூட்டினாள்.


சோப் உபயோகிப்பதால்
கூந்தல் சோபையை
இழக்கிறது
'ஹேலோ'
கூந்தலைப் பளபளப்பா
கச்செய்கிறது!
HALO SHAMPOO
அமெரிக்காவில்,
ஏராளமாக
விற்பனை
யாகும்
ஷாம்பு
மறைந்து கிடக்கும் உங்கள் கூந்தலின் அழகை ஹேலோ பிரகாசிக்கச்செய்கிறது.


பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்துக்கும் பலத்துக்கும்
ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிட்.
மதராஸ்-17.

தென்காசி விசுவநாதர்

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

தென் பாண்டி மண்டலத்திலிருந்து அரசாண்ட பாண்டிய மன்னர்களில் பராக்கிரம பாண்டியன் என்று ஒரு மன்னன். இவன் தன் மனைவியுடன் காசி சென்று விசுவநாதரைத் தரிசிக்கிறான். தரிசித்து விட்டுத் திரும்பும் வழியில் மதுரை சொக்கலிங்கப் பெருமானையும் வணங்கி வழிபடுகிறான். அன்றிரவு கனவில் சொக்கர் 'உன் ஊர்ப் பக்கத்திலும் ஒரு காசி காண்' என்று அருளுகிறார். அரசன் நினைக்கிறான். காசியில் இறக்க முக்தி என்கிறார்களே என்று. எத்தனை வயோதிகர்கள் தமிழ்நாட்டிலிருந்து அந்தத் தொலை தூரத்திலுள்ள காசிக்குச் செல்கிறார்கள். அப்படிப் போக இயலாதவர்களுக்கெல்லாம் முத்திப் பேறு வாய்ப்பதாக இல்லையே. காசி விசுவநாதன் எவ்வளவோ கருணை உடையவன் ஆயிற்றே; தன்னிடம் வர இயலாதவர்களைத் தேடி அவன் வருதல் கூடாதோ என்று எண்ணியிருக்கிறான். அந்த எண்ணம் காரணமாகவே தென் காசி ஒன்றை நிர்மாணிக்கத் திருவுளங் கொள்கிறான். ஓர் எறும்புப்பொழுக்கு வழிகாட்ட அந்த வழியிலே சென்றவன் சிற்றாற்றின் கரையிலே ஒரு சிவலிங்கமும் நந்தியும் இருப்பதைக் காண்கிறான். தான் விரும்பியபடியே காசி விசுவநாதர்தான் அங்கு எழுந்தருளியிருக்கிறார் என்று உளம் பூரித்து அந்த விசுவநாதருக்கு ஒரு கோயில், அந்தக் கோயிலைச் சுற்றி ஒரு நகரம் என்றெல்லாம் அமைக்கிறான். அந்தக் கோயில் கட்டி முடிய ஆறு ஏழு வருஷங்கள் ஆகியிருக்கின்றன. தன் கஜானாவில் உள்ள பொன்னையும் பொருளையும் கொட்டிக் குவித்துக் கோயிலைக் கட்டுகிறான். மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை, கோபுரம், விமானம், மதில் எல்லாவற்றையும் அமைக்கிறான். காசி விசுவநாதரையும் அங்கு எழுந்தருளப் பண்ணுகிறான். கும்பாபிஷேகத்துக்கு என்று ஒரு நாளையும் குறிப்பிடுகிறான். அன்று கோயிலில் 'ஜே ஜே' என்று மக்கள் எல்லாம் குழுமியிருக்கின்றனர். பராக்கிரம பாண்டியன் மந்திரி பிரதானிகள் புடைசூழக் கோயிலுக்கு வருகிறான். வந்தவன் விசுவநாதர் சந்நிதிக்கு எதிரே தரையில் விழுந்து வணங்குகிறான். அவன் அப்போது யாரை வணங்குகிறான் என்பது கேள்வி. அந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதரையா? இல்லை, கோயில் கட்டத் தனக்குத் துணை புரிந்த தன் குடி மக்களையா? இத்தனை கேள்விக்கும் பதில் சொல்வது போல, அரசனுடன் வந்த புலவர் ஒரு பாட்டுப் பாடுகின்றார். அவர் பாடிய பாட்டு இதுதான்.

ஆராயினும் இந்தென்காசி
மேவு பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால்
அப்போது அங்கு வந்து அதனை
நேராகவே இருத்திப் புரப்பார்
தமை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன்
பராக்கிரம பாண்டியனே

அரசனது உள்ளத்தை நன்குணர்ந்த கவிஞன் பாடிவிட்டான். பாட்டும், பாட்டில் உள்ள கருத்தும் பராக்கிரம பாண்டியன் உள்ளத்தில் உள்ளதையே சொல்லியிருக்கிறது என்ற காரணத்தால் அரசன் அதனை அங்கீகாரம் செய்து அந்தப் பாடலைக் கோபுர வாயிலில் கல்லில் பொறித்து வைக்கிறான். உண்மைதானே. கோயில் கட்டுவது எளிது; அதைச் சரியாகப் பராமரிப்பது அவ்வளவு எளிதான காரியமா என்ன? அதிலும் அந்தக் கோயிலுக்குத் தீங்கு ஒன்று நேர்ந்து அந்தத் தீங்கை நிவர்த்தி செய்து இருத்தி அமைப்பது என்பது எவ்வளவு பெரிய சேவை. அப்படி எதிர்காலத்தில் சேவை செய்பவர்களையெதிர்நோக்கி விழுந்து வணங்கியிருக்கிறான் பராக்கிரமன். ஐயகோ! விசுவநாதர் ஆலயத்துக்கு ஆலயத்தை அணிசெய்யும் ராஜகோபுரத்துக்கு வராத தீங்கொன்று வந்து இடிந்திருக்கிறது. ஆனால் அத்தீங்கை நிவர்த்தி பண்ணித் திரும்பவும் கோயில் கட்டுவோர் ஒருவர்தான் இன்னும் தோன்றக் காணோம். பராக்கிரம பாண்டியனது தம்பிக்

ஊர்த்துவ தாண்டவர் - தென்காசி



கையை நிலைநிறுத்த ஆள் இல்லாதே போய் விட்டது பெருங்குறைதான். அது காரண மாகவே சிதைந்த கோபுரத்துடன் நிற்கிறது காசிவிசுவநாதர் கோயில் தென்காசியில். அந்தத் தென்காசியில் உள்ள காசி விசுவநா தர் ஆலயத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

தென்காசி தென் பிராந்திய ரயில்வேயில் ஒரு ஜங்ஷன். வடக்கேயிருந்து ரயிலில் வரு பவர் விருதுநகர் தென்காசி லயனில் தென் காசி வந்து சேரலாம். இல்லை, திருநெல்வேலி வழியாகவும் வரலாம். காரில் செல்பவர்கள் திருநெல்வேலிக்கு மேற்கே முப்பது மைல் சென்றால் தென்காசி வரலாம். ஊருக்கு நடுவே கோயில். கோயிலை இனம் கண்டு பிடிப்பதுதான் எளிதாயிற்றே. சிதைந்த கோபுரம் எங்கிருக்கிறது என்று கண்டு பிடித்துவிடலாமே. கோயில் பெரிய கோயில். நல்ல சுற்று மதில்களுடன் கூடியது. கிழமேல் 554 அடி நீளமும் தென்வடல் 318 அடி அகல மும் உள்ளது. கோபுர வாயிலைக் கடந்து உள் சென்றதும் முகப்பு மண்டபம் இருக் கிறது. இம்மண்டபம் ஓர் அரிய கலைக்கூடம்- அங்குள்ள எட்டுத் தூண்களிலும் எட்டுச் சிற்ப வடிவங்கள். அகோர வீரபத்திரன், மன்மதன், வேணுகோபாலன், காளி நால் வரும் தென் பக்கத்துத் தூண்களில். வீரபத் திரர், ரதி, மாதாண்டவர், ஊர்த்துவ தாண் டவர் நால்வரும் வடக்கு வரிசையில். இவை தவிர கோயிலைப் பார்க்க மேற்கு முகமாக உள்ள தூண்களில் இரண்டு பெண் வடி வங்கள். ஒருத்தி பொட்டிட்டுக் கொண்டிருக் கும் நிலை. சிற்பக் கலை வல்லுநர்கள் பல மணி நேரம் நின்று பார்க்க வேண்டிய சிலா வடிவங்கள். இவை காத்திரம், அழகு எல்லாம் நிரம்பியவை. இம்முகப்பு மண்ட பத்தைக் கடந்து, மகா மண்டபம், மணி மண்டபம், அர்த்த மண்டபம் எல்லாம் செல்ல வேண்டும். அதற்கடுத்த கருவறையில் தான் காசிவிசுவநாதர் இருக்கிறார். இவருக்கு எத்தனை எத்தனையோ பெயர்கள்.

விசுவனே விசுவநாதன்,
விசுவேசன், உலகநாதன்,
பசுபதி, சிவன், மயோன்,
பராபரன், முக்கட் பெம்மான்
சிவவரம் தருவோன், நம்பன்
சிவைமணாளன், ஏற்றோன்
அகனைநயார் நீலகண்டன்
அநாதி தென்காசி நாதன்

என்பது தல புராணப் பாடல். இந்த விசுவ நாதனைத் தரிசித்து வெளியே வந்துதான் தென் பக்கத்தில் உள்ள விசாலாக்ஷி சந்நிதிக்குச் செல்ல வேண்டும். இரண்டு கோயில்களுக்கும் இடையே ஒரு சிறு கோயில். அதன் முகப்பு மண்டபத்திலும் சிற்ப வடிவங்கள். இவை சிறப்பு வாய்ந்தவை அல்ல.

இங்குள்ள மூலக்கோயில் இன்று நெல் சேராக இருக்கிறது. இது ஆதியில் பெருமாள் கோயிலாக இருந்திருக்கிறது. இங்குள்ள பெருமாளையே ஆற்றங்கரைப் பெருமாள் கோயிலுக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். பெரிய கோயில் கட்டியபின் விஜயநகர மன்னன் அச்சுதன் இப்பக்கம் வந்திருக்கிறான். அவன்தான் இப் பெருமாள் கோயிலை இடை யிலே கட்டி வைத்தான் என்று வரலாறு கூறுகிறது. இதற்கும் தென் பக்கத்தில்தான் அம்மையின் சந்நிதி. அம்மை செண்பகமலர்க் கீழ் இருந்து அருளாட்சி புரிந்திருக்கிறாள். இங்குள்ள தலமரம் செண்பகமே. 'செண்பக மலர்க்கீழ் மேவும் சிவக்குறி' என்றும் 'நீழல் நல்கும் பவள மல்லிகை' என்றும் பாராட்டப் பட்டிருக்கிறது.

ஆதியில் இந்தத் தென்காசி செண்பக வன மாக இருந்திருக்கிறது. மாறன் மங்கலத்தி லிருந்து அரசாண்ட குலசேகர பாண்டியரே முதன் முதலில் விசுவநாதரை வழிபட்டு உலகநாதன் என்ற பிள்ளையைப் பெற்றிருக் கிறார். உலகநாதனுக்கு உலகம்மையே மக ளாகப் பிறந்து குழல்வாய்மொழி என்ற பெயரோடு வளர்ந்து வந்திருக்கிறாள். அக் குழல்வாய் மொழியை விசுவநாதரே வந்து திருமணம் செய்து கொண்டிருக்கிறார். அப்ப டித் திருமணம் நடந்த இடமே குலசேகரநாத சாமி கோயில். இந்தக் கோயில் தென்காசியி லிருந்து திருநெல்வேலிக்கு வரும் வழியில் பெரிய கோயிலிலிருந்து ஆறு பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது. உலகநாத பாண்டிய ருக்குப் பின் பல பாண்டியர்கள் மாறன் மங்க லத்திலிருந்து ஆண்டிருக்கிறார்கள். விந்த

ரீடா கூந்தலைப் பாதுகாக்கும்



தொல்லைகளைத் துரிதமாகவும்
திறமையாகவும் நீக்குகிறது.

ரீடாவை உபயோகித்து மயிர்க்கால்களுக்கு போஷாக்குத் தருவதால் உங்கள் கூந்தல் நீண்டு வளர்ந்து மிருதுவாகவும் பளபளப்பான கருமை நிறத்துடனும் காணப்படும். இதிலுள்ள மருந்துச்சத்துக்கள், மயிர் கொட்டுதலை நிறுத்தி, பொடுகைப்போக்கி, நரைக்காமல் பாது காக்கும். புட்டியிலுள்ள ரீடாவைத் தேங்காய் எண்ணெய், கடுகு அல்லது நல்லெண்ணெயில் கலந்து எப்போதும் உபயோகியுங்கள். காரிருள் போன்ற கருங்கூந்தல் அழகை நிச்சயம் நீங்கள் பெறலாம். ரீடாவை உபயோகிப்பதுடன் உங்கள் நண்பர்களுக்கும் சிபாரிசு செய்யுங்கள்.



ரீடா

கவர்ச்சி தரும் கூந்தலின் ரகசியம்

R.6 TM

ரீடா கம்பெனி, சென்னை-1.

பாண்டியன் காலத்திலே மாறன் மங்கலம் வித்தன் நல்லூர் என்று பெயர் பெற்றிருக்கிறது. இந்த வித்தனுடைய பேரனே அரிகேசரி, பராக்கிரம பாண்டியன், செண்பக மாறன் என்ற பெயர்களோடு வாழ்ந்திருக்கிறான். இவரது காலம் வரை விசுவநாதர் செண்பக மரத்தடியிலும், உலகம்மை பவள மல்லிகை நிழலிலும் இருந்திருக்கிறார்கள். இவர்களுக்குக் காசிகண்ட பராக்கிரமன் கோயில் கட்டி நகரமும் அமைத்திருக்கிறான். இந்தக் கோவில் கட்டப்பட்ட காலம் சாலிவாகன சகாப்தம் 1368 அதாவது கி. பி. 1445ல் கோவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இதனை,

ஒன்று சாலிவாகன
சகம் ஆயிரத்தொரு
மூன்று நூற்று அறுபானெட்டில்
முது மதிக்குலத்துத்
தோன்று மகன் அரி
கேசரி தேவனுத்துலங்கி
சான்றுகாண் பராக்கிரமன்
நன்று எடுத்தது இத்தலமே

என்று தல புராணம் கூறுகிறது. இந்தப் பராக்கிரம பாண்டியன் இறைவன் திருவடி நிழல் எய்தியபோது இவனது சிவபக்தியை உணர்ந்த ஒரு கவிஞர்,

கோதற்ற பத்தி அறுபத்து
மூவர்தம் கூட்டத்திலோ
நீதற்ற வெள்ளிச் சிகரம்
சிலம்பகத்தோ, செம்பொன்
அம்பலத்தோ
வேதத்திலோ, சிவலோகத்திலோ
விசுவநாதன் இரு
பாதத்திலோ சென்று புக்கான்
பராக்கிரம பாண்டியனே '

என்று பாடியிருக்கிறார். இதுவும் கோபுரத்துச் சுவரிலேயே பொறித்து வைக்கப்பட்டிருக்கிறது.

இத்தனையும் தெரிந்து கொண்டு வெளியில் வரும்போது முப்பது வருஷங்களுக்கு மேலாகத் தமிழ்ப் பணி புரிந்து வரும் திருவள்ளுவர் கழக மண்டபத்தையும் பார்க்கலாம். இதன் பின் அவகாசம் இருந்தால் இத்தலத்தில் மற்ற சுற்றுக் கோயில்களையும் மடங்களையும் போய்ப் பார்க்கலாம். ஊரின் பலபாகங்களிலே வரகுணநாதர் கோவில், குலசேகரநாதர் கோவில், விண்ணவரப் பெருமாள் கோவில், நவநீத கிருட்டினன் கோவில், பொருந்தி நின்ற பெருமாள் கோவில்கள் எல்லாம் இருக்கின்றன. இத்தலத்தில் செண்பகப் பாண்டியனால் எட்டுத் திருமடங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. எல்லா இடத்தும் சிவாகமங்கள் ஓதி உணர்வதற்கு நிபந்தங்களும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். இந்தக் கோவிலில் நிறையக் கல்வெட்டுக்கள் எல்லாம் நல்ல பாடல்களாகவே இருப்பது ஒரு பெருஞ் சிறப்பு. அவற்றில் இரண்டு பாடல்களை முன்னரே பார்த்தோம். அவையே போதும், இங்குள்ள கல்வெட்டுப் பாடல்களின் சிறப்பைக் கூற.

கோவிலை விட்டு வெளியே வரும்போது சிதைந்த கோபுரத்தைக் கண்டதும் இந்தக் கோபுரம் எப்படிச் சிதைந்தது என்று வினவத் தோன்றும். இக்கோபுரம் மிகவும் அவசரம் அவசரமாகக் கட்டப்பட்டது என்றும், அதனால் இதனில் வெடிப்புக் கண்டு நொறுங்கி விட்டது என்றும், இல்லை இடி விழுந்து நொறுங்கி விட்டது என்றும் கூறுவர். ஆனால் சௌக்கி பாதிரியார் 1792ல் எழுதி வைத்த குறிப்பிலிருந்து இக்கோவில் கோபுரமும் அக்கோபுரத்தில் வைக்கப்பட்டிருந்த நாழிகைக் கடிகாரமும் பழுதடையாது இருந்திருக்கிறது



தென்காசி - சிதைந்த கோபுரம்

என்று தெரிகிறது. ஆதலால் 1792க்குப் பின்பே — அதாவது பத்தொன்பதாம் நூற்றூண்டின் தொடக்கத்திலேதான் இக்கோபுரம் பழுதுற்றிருக்க வேணும். தென்னிந்தியாவில் நவாபுகள் ராஜ்யம் நடத்தபொழுது அவர்கள் தங்கள் ரிகார்டுகளை யெல்லாம் இக்கோபுரத்தில் பதனப்படுத்தி வைத்திருந்திருக்கிறார்கள். அந்த ரிகார்டுகளில் எப்படியோ தீப்பிடித்து அது பரவிக் கோபுரத்தின் மேல் தட்டுகள் எல்லாம் அழிந்திருக்கிறது என்பது ஒரு வரலாறு. எது எப்படியிருந்தாலும், யார் வைத்த தீயோ வீடு வெந்து போயிற்று. ஓங்கு நிலை ஒன்பதொடு உற்ற திருக்கோபுரம் சிதைந்து விட்டது. இதனை நேராகவே இருக்கப் புரப்பார்தமை எதிர்நோக்கித்தான், பராக்கிரம பாண்டியன் அன்றே விழுந்து வணங்கி யிருக்கிறான். அப்படி அவன் எதிர்நோக்கிய பெருமகன் எந்த வடிவில் என்று வரப்போகிறானோ என்பதைத்தானே தமிழ் உலகம் எதிர்நோக்கி நிற்கிறது.

தியாகச்

மாம்பலத்துக்கு அவசரமாகப் போக வேண்டியிருந்தது. எழும்பூர் ரயிலடிக்கு எதிரில் பஸ்ஸுக்காக நின்று நின்று அலுத்து மின்ரயிலைப் பிடிக்க முடிவு செய்தேன். நான் நடைமேடையை அடைவதற்கும் ஒரு வண்டித்தொடர் வருவதற்கும் சரியாக இருந்தது. நான் ஏறிய வண்டியில் அவ்வளவாக நெரிசல் இல்லை. உட்கார இடம் கிடைத்தது.

எனக்கு எதிரில் உட்கார்ந்திருந்தவர் முகம் தெரிந்த முகமாகப் பட்டது. ஆனால் எங்கே, எப்போது பார்த்தது, யார் என்று தெளிவு கிடைக்கவில்லை. அவருக்குச் சுமார் நாற்பது வயதிருக்கும். வாழ்க்கைப் பந்தயத்தில் ஓடி ஈடு கொடுக்க இயலாமல் உடலும் உள்ளமும் சோர்ந்தவர் போலக் காணப்பட்டார். அவர் உடையிலும் தெம்பில்லை.

வண்டி சேத்துப்பட்டில் நின்று விட்டுப் புறப்பட்டது. அவரை எங்கே பார்த்திருக்கிறேன் என்பதைக் கண்டுபிடிக்க நான் செய்த முயற்சி அவ்வளவும் பயனளிக்கவில்லை. கடைசியாக அவரிடமே, "உங்களை எங்கேயோ பார்த்திருப்பதாகப் படுகிறது. ஆனால் தெளிவில்லை" என்றேன்.

அவர் நைந்த புன்னகையுடன் "இங்கே சென்னையிலேயேதான் பார்த்திருப்பீர்கள். முப்பது ஆண்டுகளாக இங்கேதான் வாழ்கிறேன். கிடங்குத் தெருவில் ஒரு ஜவுளிக் கிடங்கில் வேலை. கடைக்கு வந்தபோது பார்த்திருக்கலாம்" என்றார்.

நான், "சாதாரணமாக வழியில் கண்ட முகமாகத் தோன்றவில்லை. எப்போதோ பழகிய மாதிரிப் படுகிறது. உங்கள் பெயர்?" என்று கேட்டேன்.

அவர், "ரங்கசாமி! எனக்கு உங்களைப் பார்த்த நினைவேயில்லை. எப்படிப் பேசிப் பழகியிருக்க முடியும்?" என்றார்.

"சொந்த ஊர்?" என்றேன் விடாமல்.

ரங்கசாமி, "என் தந்தையின் சொந்த ஊர் மதுரைக்கு அருகில் திருமங்கலம். தாய்க்கு வத்திராயிருப்பு. என் பத்தாவது வயதிலிருந்து இவ்வூரில்தானிருக்கிறேன்" என்றார்.

என் நினைவுக் குளத்தின் அடியில் ஏதோ கிளர்ச்சி நிகழ்ந்தது. அங்கிருந்து ஒரு குமிழி எழுந்து மேலே வந்து வெடித்தது. நான் ஆவலுடன் அவரிடம், "உங்கள் தந்தையின் பெயர் ஜகந்நாதன்தானே? சென்னை சர்க்காரில் நிலத்தீர்வை இலாகாவில் இருந்தாரா?" என்று கேட்டேன்.

ரங்கசாமியின் முகம் மலர்ந்தது. அவர், "ஆமாம், அப்பாவைத் தெரியுமா உங்களுக்கு? நான் முழுக்க முழுக்க அவர் ஜாடைதான். அதுதான் உங்களுக்கு என் முகம் பழையதாகப் பட்டிருக்கிறது" என்றார்.

"உங்களுடன் கூடப் பேசியிருக்கிறேன். அப்போது உங்களுக்குப் பத்து வயதிருக்கும். முப்பது ஆண்டுகள் ஆகிவிட்டதால் உங்களுக்கு நினைவில்லை. எனக்கும் உடனே



தெரிந்து கொள்ள இயலவில்லை. உங்கள் தாயார் ருக்மிணி அம்மாள் இல்லையா? உங்களுக்கு ஒரு அக்காள்கூட உண்டு. கௌசல்யா என்று பெயர். மதுரையில்தான் வாழ்க்கைப்பட்டிருந்தாள்....''

என் கேள்விகளுக்கெல்லாம் 'ஆம் ஆம்' என்று தலையை ஆட்டிவிட்டு, ரங்கசாமி, ''எங்கள் குடும்பத்தைப் பற்றி இவ்வளவு தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். எனக்கு உங்களைத் தெரியவில்லையே?'' என்றார்.

நான் என் பெயரைச் சொல்லி, ''உங்கள் இளமைப் பருவத்துக்குப் பிறகு நீங்கள் என்னைச் சந்திக்கவில்லை, இல்லையா? உங்கள் பெற்றோர்கள் சுகமாக இருக்கிறார்களா? எந்த ஊரில் இருக்கிறார்கள்?'' என்று குசலம் விசாரித்தேன்.

ரங்கசாமி, ''அப்பா காலமாகி ஐந்தாறு ஆண்டுகளாகின்றன. அம்மா என்னுடன்தானிருக்கிறாள். பழைய மாம்பலத்தில்தான் இருக்கிறேன். உங்கள் பெயரை மட்டும் சொல்லிவிட்டு நீங்கள் யார் என்பதைச் சொல்லவில்லையே?'' என்றார்.

என் மனக் கண்முன்னும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தவை





யெல்லாம் மறுபடியும் எழுந்தன. அந்த நாளில் ரங்கசாமியின் தாயார் ருக்மிணி அம்மாள் காட்டிய மனிதப் பரிவும் துணிச்சலும் என் உடலில் புல்லரிப்பை எழ வைத்தன.

தொள்ளாயிரத்து முப்பதில் காந்தி தொடங்கி வைத்த உப்பு சத்தியாக்கிரக இயக்கம் நாடு முழுதும் பரவி அங்கங்கே கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. சென்னையிலும் அந்த இயக்கம் உருவெடுத்தது. ஆனால் பெரிய தலைவர்கள் எல்லாரும் சிறைகளில் அடைபட்டவுடன் நகரில் இயக்கம் அடியோடு அடங்கிவிட்டது. அந்த ஆண்டு நவம்பர் டிசம்பரில் சென்னையில் இருந்தவர்கள் அந்த விடுதலை இயக்க வெள்ளப் பெருக்கைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்ததோடு சரி. நகரில் ஒன்றுமே நடக்கவில்லை.

சென்னையிலும் இயக்கத்தைத் தூண்டி விட்டு நடத்த வேண்டுமென்று நாங்கள் நாலைந்து பேர்கள் சேர்ந்து முயற்சி தொடங்கினோம். இயக்கத்தில் கலந்து அடிபடவும், சிறை செல்லவும் விரும்பித் துடித்த ஆறு வெளியூர் இளைஞர்கள் எங்களுடன் வந்து சேர்ந்தனர். வெளிநாட்டுத் துணிக்கடைகளின் முன் மறியல் இயக்கம் தொடங்கப் பட்டது.

ஒரு வாரத்துக்குள் இயக்கத்தில் சூடு பிடித்தது. சென்னைவாசிகள் அதைப் பற்றிச் சிந்திக்கவும், பேசவும் நிலைமையும் வந்தது. மேலும் பத்துப் பன்னிரண்டு தொண்டர்கள் வந்து எங்களுடன் சேர்ந்தார்கள். எல்லாரும் வெளியூர்க்காரர்கள் தாம்.

இயக்கத்தைத் தொடங்கிய முதல் கூட்டிலிருந்தவர்களில் இருவரைத் தவிர மற்றவர்களுக்கு நகரில் வீடு வாசல் எதுவும் கிடையாது. ஒருவர் மட்டும் ஒரு வீட்டில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்திருந்தார். அவர் இயக்கத்தில் கலந்து கொண்டிருக்கும் விவரத்தை யறிந்தவுடன் அந்த வீட்டுக்காரர் போலீஸுக்குப் பயந்து அறையைக் காலி செய்யச் சொல்லிவிட்டார். எங்கள் நிலைமையே இப்படி யென்றால் வெளியூர்களிலிருந்து வந்து சேர்ந்தவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

மறியலில் கலந்து கொண்ட தொண்டர்களுக்குச் சாப்பாடு வசதி செய்து, அன்றன்று கூட்டி, வேலைத்திட்டத்தை விளக்கிச் சொல்லிப் பிரித்து அனுப்பும் பொறுப்பு என்மேல் சுமந்தது. அதில் சலசலப்பும் குழப்பக் குளறுபடியும் சேர்ந்து விடாமலிருக்க நான் திருவல்லிக்கேணியைத் தலைமையாக்கிக் கொண்டேன். தொண்டர்களும் நானும் தினம் இரவைக் கடற்கரையிலும் அல்லது பார்த்தசாரதி ஆலயத்தைச் சுற்றியுள்ள தெருக்களில் அகப்படும் திண்ணைகளிலும் கழிப்போம். காலையில் கூடி அவரவர் வேலையைத் தெரிந்து கொண்டு பிரிந்து செல்வோம். மறியல் நேரத்துக்கு அன்றைய முறையுடைய தொண்டர்கள் குறிப்பிட்ட கடைவாசல் முன் குறித்த நேரத்துக்கு வந்து சேர்வார்கள்.

இயக்கம் தொடங்கிய புதிதில் போலீஸார் அதைச் சட்டை செய்யவேயில்லை. யாரோ அறுதை நத்தம் புறம்போக்குகள் நாலைந்து சேர்ந்து கூச்சல் போடுகின்றன என்று நினைத்து விட்டார்கள். ஆனால் அதற்காக அவர்கள் மறியல் நடக்க விட்டு விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கமுடியுமா?

மறியல் தொடங்கிப் பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு ஒரு போலீஸ் லாரி வரும். அதிலிருந்து ஓர் அதிகாரியும் சில ஜவான்களும் இறங்கி வந்து மறியல் செய்யும் தொண்டர்களைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் லாரியில் ஏற்றுவார்கள். நகருக்கு வெளியே இருபது இருபத்தைந்து மைல்கள், சில நேரங்களில் முப்பது மைல்களுக்கு அப்பாலும் கொண்டுபோய் அவர்களை வெட்ட வெளியில் இறக்கி விட்டு வந்து விடுவார்கள்.

பாவம்! பஸ், ரயில்களில் திரும்பி வரத் தொண்டர்களிடம் பணம் ஏது? நடந்து நடந்து மறுநாள் சென்னைக்கு வந்துசேர்ந்து விடுவார்கள். சில நாட்களில் அவர்களை வழியில் சந்திக்கும் கிராமவாசிகளின் உதவி பெற்று ரயிலிலோ பஸ்ஸிலோ அன்றே வந்து சேர்ந்து விடுவார்கள். மறுநாள் வழக்கம் போல் மறியல் தொடங்கும்.

தொடக்கத்தில் அப்படித் தொண்டர்களை வெளியேற்றுவதுடன் விட்டுவிட்ட போலீஸ் இலாகாவுக்கு இரண்டே வாரங்களில் அந்த விளையாட்டு அலுத்து விட்டது. போலீஸார் தொண்டர்களை அடித்து விரட்டும் முறையைத் தொடங்கினார்கள். அடிபட்டும் அங்கிருந்து அசைய மறுத்த தொண்டர்களை அவர்கள் நடுத்தெருவில் போட்டு இழுத்துக் கொண்டுபோய்த் தெருவுக்கு அப்பால் தள்ளி விட்டுப் போனார்கள்.

போலீஸார் எப்படி எவ்வளவு கடுமையாக அடித்திருந்தாலும், எழுந்து நடக்கவே இயலாத அளவில் அடிபட்டிருந்தாலும் இரண்டொரு தொண்டர்கள் எழுந்து மறுபடியும் போய் அதே கடை வாசலில் நின்று மறியல் தொடங்கி விடுவார்கள். இயக்கத்தில் அவர்களுக்கு அவ்வளவு உணர்ச்சி வேகம்.

நான் குறுக்கிட்டு, ''இன்றைக்குப் போதும். இன்னும் அரை மணி நேரத்தில் அடுத்த கோஷ்டித் தொண்டர்கள் வந்து சேர்ந்து விடுவார்கள். வந்து விடுங்கள். நாளை பார்த்துக் கொள்ளலாம்'' என்று அவர்களைத் தடுக்க முயலுவேன். சில நேரங்களில் என் முயற்சி பயனளிக்கும்.

என் பேச்சைக் கேட்காமல் வீம்பு பிடித்து மறுபடியும் போய் மறியல் செய்தவர்களில் ரத்தினவேலுவை நான் மறக்கவே முடியாது. அப்போது அவருக்கு இருபத்துநாலு வயதிருக்கும். நல்ல வாட்டசாட்டமான தோற்றம். முகத்திலே ஓர் அதிசயமான உறுதி. வீம்பு படர்ந்திருக்கும். சென்னையில் மறியல் இயக்கம் தொடங்கி யிருப்பதாகப் பத்திரிகையில் படித்து விட்டுத் திருச்சியிலிருந்து வந்து சேர்ந்தவர்.

அவரைப் பற்றிய விவரங்களை நான் பின்னால் தான் அறிந்தேன். அவருக்கு அந்த ஆண்டில்தான் கலியாணம் நடந்திருந்தது. சொந்த மாமன் மகளையேதான் கட்டியிருந்தார். ஏழெட்டு மாதங்களுக்கு முன் இயக்கம் தொடங்கிய நேரத்திலேயே அவர் அதில் குதிக்க விரும்பினார். ஆனால் உறவினர்கள்

வசீகரிக்கும் நவீன ஆடைகளுக்கு



மபத்லால் க்ரூப் பிரின்டட் பாப்ளின்கள்

நியூ ஷர்ராக் (ஷர்ராக்), அஹமதாபாத். நியூ ஷர்ராக், காதியாத்.
ஸ்டான்டர்ட், பம்பாய். ஸ்டான்டர்ட் (நியூ சைனா), பம்பாய்.
ஸ்டான்டர்ட், டிவாஸ். ஸஸ்ஸூன், பம்பாய்.
ஸஸ்ஸூன் (நியூ யூனியன்), பம்பாய். சூரத் காட்டன், சூரத்.
மபத்லால் பைன், நவ்ஸாரி. ககல்பாய் ஜூட், கல்கத்தா.
இந்தியன் டைஸ்டப், பம்பாய்.

MF 45

குறுக்கிட்டுத் தடுத்து நிறுத்தி மணமும் செய்து வைத்து விட்டார்கள்.

அவர் நெஞ்சிலே மூண்டு விட்ட தேசத்தொண்டுத் தீ உள்ளுக் குள்ளேயே கனிந்துகொண்டிருந்தது. திருச்சியிலேயே இயக்கத்தில் சேராமல் உறவினர்கள் தடையாக இருந்தார்கள். அதனால் யாருக்கும் தெரியாமல் சென்னைக்கு வந்து சேர்ந்து விட்டார்.

அன்று பகல் மூன்று மணிக்கு மறியலுக்குப் புறப்பட்ட ஆறு தொண்டர்களையும் ரத்தினவேலு தான் தலைமை வகித்து நடத்திச் சென்றார். பிரம்புக் கடைத் தெருவின் தென்முனையில் அவர்களை இரண்டு வரிசையாக நிறுத்தி விடுதலை இயக்கக் கோஷங்களுடன் நடத்திச்சென்றார். மூவர் மூவராக அவர்களை இரண்டு துணிக்கடைகளின் வாசலில் நிற்க வைத்து மறியலைத் தொடங்கி வைத்தார். அவர் இரண்டாவது கடை வாசலில் நின்றிருந்தார்.



"என்ன.....மாப்பிள்ளை சார்! ஒரு இஞ்ஜினியரா இருந்துகூட இந்த ரசத்துக்கு ஒரு அணை கட்ட முடியல்லியே !!"

போலீஸார் வந்தார்கள். திமுதிமுவென்று பாய்ந்து பாணாத் தடிகளால் தொண்டர்களைத் தாக்கினார்கள். அடி பொறுக்காமல் இரண்டு தொண்டர்கள் கீழே விழுந்தார்கள். அவர்களையும் நின்றவர்களையும் போலீஸ் ஜவான்கள் பிடித்து இழுத்துக்கொண்டு போனார்கள்.

ரத்தினவேலுவின் மேல் மழை பெய்வது போல் தடி அடிகள் விழுந்தன. அவர் நின்ற நிலையிலிருந்து அசையவேயில்லை. "மகாத்மா காந்திக்கு ஜே! வந்தேமாதரம்!" என்று குரல் எழுப்பி ஒரு குன்று மாதிரி நின்றார்.

அவரைத் தாக்கிய மூவரில் இரண்டு ஜவான்களும், ஒரு சட்டைக்கார சார்ஜண்டுமிருந்தார்கள். அவ்வளவு அடிக்கும் அவர் அசையாமல் நிற்பதைக் கண்ட சார்ஜண்டுக்கு ஆத்திரம் மூண்டது. தம் வலிமை முழுவதையும் சேர்த்துத் தடியால் ரத்தினவேலுவின் இடது தோளின் மேல் தாக்கினார். அதற்கும் அவர் அசையவில்லை. சார்ஜண்டு குனிந்து தடியால் ரத்தினவேலுவின் இரண்டு முழங்கால் முட்டிகளையும் சேர்த்து அடித்தார். ரத்தினவேலு ஒரு பெரிய மரம் முறிந்து விழுவது போலச் சரிந்து விழுந்தார்.

ஜவான்கள் இருவரும் அவர் கைகளைப் பிடித்துத் தார் மெழுகிய தரையில் இழுத்துக் கொண்டு போனார்கள். அவர்கள் அவரைக் கொண்டுபோய்ப் பாய்க்கடை பஸ் நிறுத்தத்தின் அருகில் தள்ளிவிட்டுப் போய்விட்டனர்.

அவ்வளவையும் வேடிக்கை பார்த்த கூட்டத்தின் இடையில் நின்று பார்த்துக் கொண்டிருந்த நான் பதறிக்கொண்டு ரத்தினவேலுவிடம் ஓடினேன். என் கைகால்களெல்லாம் கிடுகிடென்று ஆடின. உள்ளம் பதைத்தது.

அவர் அருகில் போய், "ரத்தினவேலு! ரொம்பப் பலமாக அடிபட்டிருக்கிறதே. வாருங்கள், ஒரு ரிக்ஷாவில் எனக்குத் தெரிந்த ஒரு டாக்டரிடம் அழைத்துச் செல்லுகிறேன்" என்று கை கொடுத்து அவரைத் தூக்கிவிட முயன்றேன்.

அவரால் எழுந்து நிற்கவே இயலவில்லை. முழங்கால்களில் அவ்வளவு பலமான அடி. என்னைப் பிடித்துக் கொண்டுதான் நின்றார்.

அன்று அவரை மறுபடியும் போய் மறியலுக்கு நிற்காமல் தடுப்பது எனக்குப் பெரும்பாடாகி விட்டது. அதட்டி மிரட்டி அவரை பஸ்ஸில் திருவல்லிக்கேணிக்கு அனுப்பி வைத்தேன்.

மாலை ஆறு மணிக்குக் கடைசிக் கோஷ்டி மறியல் முடிந்த பிறகு நான் திருவல்லிக்கேணிக்கு விரைந்தேன். அரைமணி நேரம் சுற்றியலைந்து ரத்தினவேலுவை நான் பார்த்தசாரதி கோயில் வாசலில் கண்டு பிடித்தேன்.

அவரை என்னுடனேயே அழைத்துச் சென்று ஓட்டலில் சாப்பிட வைத்தேன். இரவில் துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் காலியாகக் கிடைத்த ஒரு திண்ணையின் மேல் என் அருகில் படுத்துறங்க வைத்தேன்.

இரவு பன்னிரண்டரை மணி யிருக்கும். அவர் நோவுடன் முனகும் குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து தொட்டுப் பார்த்தேன். நல்ல காய்ச்சல் கண்டிருந்தது. கைகால்களை அசைக்கவும், புரளவும் இயலாமல் வேதனையுடன் முனகிக் கொண்டிருந்தார்.

என் உள்ளம் பதறியது. அவருக்கு ஏதாவது சிகிச்சை செய்விக்க வேண்டுமென்று பறந்தது. எழுந்து அந்த வீட்டுக் கதவைத் தட்டினேன்.

இரண்டு வாரங்களாக அந்தத் திண்ணையைத் தொண்டர்களின் பாசறைகளில் ஒன்றாக ஆண்டுவந்த பழக்கத்தினால் அந்த வீட்டில் குடியிருந்தவர்களைப் பற்றி எனக்கு ஓரளவுக்குத் தெரியும். அந்த வீட்டில் இருந்தவர் பெயர் ஜகந்நாதன். சர்க்காரில் ஏதோ வேலையாக இருக்கிறார்.

அந்த வீட்டில் இருந்தவர்களுக்கும் நாங்கள் திண்ணையைப் பயன்படுத்திக் கொள்ளுவதும் தெரியும். ஆனால் கண்டும் காணாததுமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஜகந்நாதனின் மனைவி ருக்மிணி அம்மாள் தான் வந்து கதவைத் திறந்தாள். அப்போது அவளுக்கு முப்பத்தைந்து வயதிருக்கும். வாழ்க்கையில் நியாயமான வசதி பெற்ற திருப்தி படர்ந்த முகம்.


அந்த அம்மாள் நடைவிளக்கைப் போட்டுக் கதவைத் திறந்து, "யாரது?" என்றாள்.

நான், "அம்மா! அவர் இன்று மறியல் செய்தபோது போலீஸார் பலமாக அடித்து விட்டனர். அடிபட்ட இடங்களில் இசிவு நோவு கண்டிருக்கிறது. காய்ச்சலும் கண்டிருக்கிறது. சிறிது தண்ணீர் காய்ச்சிக் கொடுத்தால் ஒத்தடம் கொடுக்கலாமென்று நினைக்கிறேன்" என்றேன் கெஞ்சும் குரலில்.

உள்ளே இருந்து, "யாரது ருக்மிணி?" என்று கேட்டுக்கொண்டு ஒரு பனியன் வேஷ்டியுடன் ஜகந்நாதன் நடைக்கு வந்தார்.

நான் அவரிடமும் என் கோரிக்கையைத் திருப்பிச் சொன்னேன். அவர், "இந்தாப்பா, இதெல்லாம் என்ன தொல்லை? உங்களை யார் மறியல் செய்யச் சொன்னது? யார் அடிபடச் சொன்னது? ராத்திரி ஒரு மணிக்கு வெந்நீர் காய்ச்சிக் கொடுக்க வேண்டுமாம்! அதெல்லாம் சௌகரியப்படாது. முதலில் திண்ணையைக் காலி செய்து விட்டு வேறு எங்கேயாவது போய்விடுங்கள். ஊம், ருக்மிணி! கதவை அடை. வா, உள்ளே!" என்று அதட்டிவிட்டுப் போகத் திரும்பினார்.

நான், "பரவாயில்லை ஸார்! உங்களை அநாவசியமாகத் தொந்தரவு செய்துவிட்



டேன்" என்று சொல்லித் திண்ணைக்குத் திரும்பினேன்.

ஏதேதோ எண்ணங்களில் மூழ்கி முழங்கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து விட்டேன். பதினைந்து, இருபது நிமிஷங்கள் ஆகியிருக்கும். வீட்டுக் கதவின் தாழ் விலக்கப்பட்ட ஒலி கேட்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். கதவு திறந்தது. நடையில் விளக்கு எரியவில்லை. பக்கத்து வீட்டு வாசலிலிருந்த தெருவிளக்கின் ஒளிதான் அந்த வீட்டு வாசலிலும், திண்ணையிலும் பரந்திருந்தது.

ருக்மிணி அம்மாள் ஒரு துவாலையால் ஒரு பாத்திரத்தைப் பற்றித் தூக்கிக்கொண்டு வாசல் கதவருகில் நின்று, "இந்தாப்பா, வெந்நீர் கேட்டாயே; கொதிக்கிறது, ஜாக்கிரதை. இந்தா, இந்தத் துவாலையையே நனைத்து ஒத்தடம் கொடு. ஒரு தம்ளர் கொடுக்கிறேன். அதில் கொஞ்சம் வெந்நீர் எடுத்து ஆற வைத்துக் குடிப்பதற்குக் கொடு. பாத்திரங்களை இப்படியே இந்தக் கதவின் முன்னால் வைத்துவிடு. நான் காலையில் எடுத்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு என் பதிலுக்குக் கூடக் காத்திராமல் கதவை அடைத்து விட்டாள்.

ஆனால் அவள் கதவை அடைக்குமுன் உள்ளேயிருந்து வந்த ஜகந்நாதனின் குரலும், "ருக்மிணி! என்ன அது?" என்ற சொற்களும் எனக்கு எட்டின.

அந்த அம்மாள் தன் கணவருக்கு என்ன பதில் சொன்னாளோ எனக்குத் தெரியாது. அவள் சொன்னபடியே தம்ளரில் வெந்நீர் ஊற்றி ஆற வைத்து விட்டு, மீதியில் துவாலையை நனைத்து ரத்தினவேலுவுக்கு ஒத்தடம் கொடுக்கும் பணியில் முனைந்தேன்.

கொதிக்க வைத்து இறக்கிய நீரில் துவாலையை நனைத்துக் கையால் பிழிந்து ஒத்தடம் கொடுக்கும் முயற்சியில், என் கைகள் கொப்புளித்து விட்டன. எப்படியோ யுக்திகள் செய்து ரத்தினவேலுவுக்குச் சிகிச்சை செய்தேன். சிறிது வெந்நீர் குடிக்கவும் வைத்தேன்.

என் சிகிச்சையில் நான் எதிர்பார்த்த அளவு பலன் கிடைக்கவில்லை. ஆனாலும் மூன்றரை மணி சுமாருக்கு ரத்தினவேலு முனகலை நிறுத்தித் தம்மை மறந்து உறங்கினார்.

மறுநாள் காலையில் முதல் வேலையாக ரத்தினவேலுவை இயக்கத்தில் அனுதாபமுள்ள ஒரு டாக்டரிடம் அழைத்துச் சென்றேன். டாக்டர் அவரைப் படுக்க வைத்துச் சிகிச்சை செய்யும் பொறுப்பை ஏற்றார்.

ரத்தினவேலுவின் அந்த வீரம், தியாகத்தைப் பற்றி உலகத்துக்குத் தெரியுமா என்று முதல் நாள் இரவில்தான் என்னையே கேட்டுக் கொண்டேன். உலகத்துக்குத் தெரியும், அது பலனளித்து விட்டது என்பதை மறுநாள் பகலில் கண்டேன்.

முந்திய நாள் மறியலில் போலீஸார் தொண்டர்களை அடித்த கொடுமையைப் பற்றிய செய்தி நகரில் பரவி ஒரு பரபரப்பை மூட்டி விட்டிருந்தது. மக்களில் சிலர் அடிபடும் தொண்டர்களுக்காக ஒரு சிகிச்சைக்கூடம் தொடங்கும் முயற்சியில் இறங்கினார்கள். அன்று மாலைக்குள் நாலைந்து கட்டில்கள், இதர தளவாடங்களுடன் ஓர் இடத்தில் சிகிச்சைக் கூடம் தோன்றிவிட்டது. என் நண்பர் டாக்டர் தான் அதன் பொறுப்பையும் ஏற்றார்!

இயக்கத்தில் நன்றாகச் சூடு பிடித்தது. நகரத்திலிருந்தே பல தொண்டர்கள் வந்து சேர்ந்தார்கள். மக்கள் மறைமுகமாகப் பண உதவி செய்தார்கள். யாரோ ஒருவர் பெயரால் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் தொண்டர்கள் தங்க, குளிக்க வசதிகள் செய்யப்பட்டன.

அந்தப் புது சுறுசுறுப்பின் பயனாக இரண்டு வாரங்கள் வரை துளசிங்கப் பெருமாள் கோயில் தெருப் பக்கம் போகவே எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. ஜகந்நாதன் ஆபீஸுக்குப் போயிருக்கும்போது போய், என் நன்றியைத் தெரிவித்து விட்டு வரத் துடித்தேன். அவளுடைய கைராசியால் தொண்டர்களுக்கென்று தனி சிகிச்சைக் கூடமே தொடங்கிவிட்டதென்ற விவரத்தையும் அவரிடம் சொல்ல விரும்பினேன்.

அன்று காலையில் இயக்கப் பிரசாரத் தாள்களுடன் நாலு தொண்டர்களை நகரின் வெவ்வேறு பேட்டைகளுக்கு அனுப்பி வைத்துவிட்டுத் துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவுக்குப் புறப்பட்டேன். ஆனால் நான் அந்த வீட்டுக்குப் போய்ச் சேரவேயில்லை. பிர

சாரத்நாருடன் சென்ற ஒரு தொண்டர் பிடிபட்டுக் கொடுத்த தகவல்களின் பலத்தில் வழியிலேயே என்னைப் போலீஸார் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள்.

எனக்கு ஆறு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் நான் முழுவதையும் அனுபவிக்கவில்லை. காந்தி - இர்வின் உடன்படிக்கையின் விளைவாகப் பாதியிலேயே வெளியே வந்து விட்டேன்.

மேலும் ஒரு மாதத்துக்குப் பிறகுதான் எனக்குத் திருவல்லிக்கேணிக்குப் போக இயன்றது. ஜகந்நாதன் வீட்டுக்குப் போன போது, நான் அறிந்த செய்தி என்னை ஒரு குலுக்குக் குலுக்கி எடுத்து விட்டது.

தொண்டர்கள் அவர் வீட்டுத் திண்ணையைப் பயன்படுத்திக் கொண்டிருந்ததை யாரோ ஒரு போலீஸ் உளவுக்காரன் கவனித்து வந்திருக்கிறான். அன்றிரவு அந்த அம்மாள் ரத்தின வேலுவுக்கு வெந்நீர் காய்ச்சிக் கொடுத்ததையும் அறிந்திருக்கிறான். அவன் எங்கிருந்துதான் பார்த்தானோ. இலாகாவுக்கு எழுதிவிட்டான்.

அவன் அறிக்கையை வைத்து ஜகந்நாதன் மேல் அவருடைய இலாகாவில் நடவடிக்கை எடுத்தார்கள். முதலில் அவரிடம் அவருடைய செயல்களுக்கு விளக்கம்தான் கேட்டார்கள். தம் வீட்டுத் திண்ணையைப் பயன்படுத்திக் கொண்டவர்கள் விடுதலை இயக்கத் தொண்டர்கள் என்பது தமக்குத் தெரியாதென்றும், அதை யறியாமலே தமது மனைவி காய்ச்சல் என்று சொல்லி வேண்டிய ஒருவனுக்குக் குடிக்கச் சுடுநீர் கொடுத்தது மெய்தானென்றும் அவர் விளக்கம் எழுதிக் கொடுத்தாராம். அப்பாவி மனிதர்! முழுக்க முழுக்க எனக்கு ஒன்றுமே தெரியாது என்று எழுதியிருக்கக்கூடாதா?

இலாகாவில் அவருக்கு மேலே இருந்த வெள்ளைக்காரனுக்கு ஜகந்நாதனைப் பிடிக்காது. அதனால் அவருக்கு வேலையே போய்விட்டது. இயக்கத் தொண்டர்களுக்கு அனுதாபம் காட்டி ஆதரவளித்ததுதான் அவர்மேல் சாட்டப்பட்டிருந்த குற்றம்.

என் மனம் கொதித்தது. அந்த அம்மாளை நிமிர்ந்து பார்க்கவே எனக்குப் பயமாக இருந்தது. அந்தக் குடும்பத்துக்கு என்னால் அத்தகைய அவக்கேடு வந்து விட்டதே என்று என்மனம் என்னைச் சுட்டது. அப்போது பத்து வயதுப் பையனாயிருந்த ரங்கசாமியிடமிருந்துதான் நான் அந்த விவரங்களை அறிந்தேன்.

ஜகந்நாதனையும் ருக்மிணி அம்மாளையும் நான் முழுக்க முழுக்க மறந்து விட்டேன் என்று சொல்லுவது தவறாகாது. அப்படி என் வாழ்க்கைப் போக்கு அமைந்துவிட்டது. அவர்களைப் பற்றி எப்போதாவது நினைவு வரும், சில நொடிகள். அந்த அம்மாளின் உள்ளக் கனிவைப் பற்றிய வியப்பு எழும். அதன் பயனாக அவர்களுக்கு விளைந்த துன்பத்தின் நிழல் விழும். அவ்வளவுதான்.

மின் ரயிலில் என் எதிரில் உட்கார்ந்திருந்த ரங்கசாமி அவர்கள் மகன். அப்போது பத்து வயதுப் பையன். இப்போது நாற்பது வயது ஆண்பிள்ளை. அவன் தோற்றத்திலே செழிப்பில்லை. அப்போது அந்தக் குடும்பத்தின் மேல் பட்ட அடியின் அதிர்ச்சியிலிருந்து

அவர்கள் மீண்டு வெளியேறவே யில்லை என்று ஊகித்துக் கொண்டேன்.

இருவரும் மாம்பலத்தில் இறங்கினோம். மேம்பாலத்துக்கு ஏறும் படிகளினருகில் ரங்கசாமியை நிறுத்தி வைத்து அவர்கள் குடும்பத்தைப் பற்றி விசாரித்தேன்.

ஜகந்நாதனுக்கு வேலை போனது போனது தான். பின்னும் அவர் எப்படி எப்படி யெல்லாமோ முயன்றும் வேலை திரும்பக் கிடைக்கவில்லை. அப்போதுதான் அவர் மகள் கௌசல்யாவுக்கு மணம் நடத்தி ஓரளவு கடன்பட்டிருந்தார்.

குடும்பம் நடக்க வேண்டுமே. அவருடைய உறவினர் ஒருவர் உதவியால் ரங்கநாதத் தெருவில் ஒரு பீஸ் ஜவுளி மொத்த வியாபாரக் கடையில் கணக்கராக அமர்ந்தார். அதில் கிடைத்த நூறு ரூபாயில் குடும்பத்தை நடத்திக் கடனையும் அடைத்துப் பையனையும் படிக்கவைக்க இயலவில்லை. அதனால் பள்ளிப் படிப்புடன் நிறுத்தி, அவனையும் ஒரு ஜவுளிக் கடையில் குமாஸ்தாவாகச் சேர்த்தார். பின்னால் அவர் இருந்த கடைக்கே அவனை அழைத்துக் கொண்டார்.

ரங்கசாமிக்குக் கலியாணமாகி ஐந்து குழந்தைகள். மூவர் பள்ளிகளில் படிக்கிறார்கள். அவருடைய வருவாயில் அவ்வளவு பெரிய குடும்பத்தை நடத்திக் குழந்தைகளைப் படிக்க வைக்கவும் முடியவில்லை. பெரிய பையன் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் சேரப் போகிறான்.

அவருடன் கூடவே போய் ருக்மிணி அம்மாளைக் கண்டு வரவேண்டுமென்ற பரபரப்பு மூண்டது என்னுள்ளே. ஆனால் அவர்களை வெறும் கையுடன் போய்ப் பார்க்கக்கூடாதென்ற எண்ணமும் எழுந்தது.

ரங்கசாமியிடம், ''உங்கள் குடும்பமும் விடுதலை இயக்கத்துக்காகத் தியாகம் செய்து நொந்ததுதான். ஆகையால் உங்கள் குழந்தைகளுக்கு அரசியல் தியாகிகள் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பள்ளிச் சம்பளச் சலுகை கிடைக்க முடியும். உங்கள் முகவரி, குழந்தைகள் படிக்கும் பள்ளிகள், படிவங்களின் விவரங்களை யெல்லாம் எழுதிக் கொடுங்கள். நானே முயன்று சலுகை வாங்கித் தருகிறேன். அம்மாவிடம் என்னைக் கண்டதாகச் சொல்லுங்கள்'' என்று சொல்லி முப்பது ஆண்டுகளுக்கு முன் அந்த அம்மாள் ரத்தினவேலுவுக்குச் செய்த உதவியைப் பற்றி விவரமாகச் சொன்னேன்.

அவரை அவர் வேலை செய்யும் கடையில் சந்திப்பதாகச் சொல்லி விடைபெற்றேன்.

அன்றே என் முயற்சியையும் தொடங்கி விட்டேன். சரியாகப் பத்து நாட்கள் ஒவ்வோர் இடமாகப் போய் யார் யாரையோ கண்டு பேசி ரங்கசாமியின் குழந்தைகளுக்கு அரசியல் தியாகச் சலுகை பெற முயன்றேன். ஒவ்வோர் இடத்திலும் பொறுப்பைத் தட்டிக் கழித்து என்னை இன்னொரு இடத்துக்கு அனுப்பும் மனப்போக்கே முன்னிற்பதைக் கண்டேன். இருந்தாலும் மனம் சோர்ந்து விடாமல் முயன்றேன்.

கடைசியாக ஷண்முகசுந்தரத்திடம் போனால் என் முயற்சி வெற்றி பெற்றுவிடும் என்றறிந்தேன். அரசியல் தியாகச் சலுகை விவகாரத்தில் அவர் நினைத்தால் நடந்து விடும் என்றார்கள். அவரிடம் போனேன்.

ஷண்முக சுந்தரம் நான் சொன்னதை யெல்லாம் பொறுமையுடன் கேட்டார். முடிவில் அவர் ஒரு கவர்ச்சி நிறைந்த புன்னகையுடன், ''நீங்கள் சொல்வதைக் கேட்டு என் உடல் சிலிர்க்கிறது. உண்மையில் அந்தக் குடும்பம் அரசியல் தியாகம் செய்து அவதிப்பட்ட குடும்பம்தான். ஆனால் இந்தச் சலுகை பற்றிய விதி முறைகளின்படி அவர்கள் செய்ததைத் தியாகமாக ஒப்புக்கொள்ள இடமே இல்லையே. தவிர, அந்தக் குழந்தைகள் தியாகியின் சொந்தக் குழந்தைகளும் அல்ல. அவருடைய பேரன் பேத்திகள்தாம். ஆகையால் அவர்களுக்குச் சலுகை கொடுக்க இடமே யில்லை'' என்று சொல்லி விட்டார்.

அதுமட்டுமல்ல. அதைச் சொல்லிவிட்டு அவர் எழுந்து நின்று கைகூப்பிக் கும்பிடும் போட்டு விட்டார். அதாவது எனக்குப் போகலாமென்று குறிப்புக்காட்டி விட்டார்.

என் உள்ளே எழுந்த ஆத்திரத்தில் எனக்கு வெறிபிடித்து விடும்போல் இருந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு மாம்பலத்துக்குப் புறப்பட்டேன். ரங்கசாமியிடமும் ருக்மிணி அம்மாளிடமும் என்ன சொல்லப் போகிறேன் என்பது எனக்குத் தெரியாது. இருந்தும் புறப்பட்டு விட்டேன்.

வீட்டு வாசலையடைந்து 'ரங்கசாமி' என்று கூப்பிட வாயெடுத்தேன். உள்ளேயிருந்து வந்த குரலைக் கேட்டு என் குரலை அமுக்கிக்கொண்டு நின்றேன்.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும் அந்தக் குரலை உடனே அடையாளம் கண்டு கொண்டேன். ருக்மிணி அம்மாள்தான் பேசினாள்.


அவள், ''உனக்கென்ன சபலம் இது ரங்கசாமி? அதெல்லாம் நடக்கிற காரியமா? தேசத்துக்காகத் தியாகம் செய்தவர்கள் குழந்தைகளுக்குச் சலுகை கொடுக்கிறார்களென்றால் அதை அடைய எவ்வளவோ பேர்கள் காத்திருப்பார்கள். அதை அவர்களே அடையட்டும். உங்கள் அப்பா அந்தக் காலத்தில் தியாகம் செய்தாரென்றால் இப்போது கேட்பவர்கள் சிரிப்பார்கள். என் பேரன் பேத்திகள் சம்பளமில்லாமல் படிக்க வாய்க்கும் என்று அன்று நான் அந்தப் பிள்ளைக்கு வெந்நீர் காய்ச்சிக் கொடுத்தேன்? முடிந்த வரையில் குழந்தைகளைப் படிக்க வை. முடியாவிட்டால் அதுகள் தலையெழுத்துப் போல் ஆகிறது. போய் உன் வேலையைப் பார்'' என்று சொன்னது எனக்குத் தெளிவாகக் கேட்டது.

உள்ளே போய் என் முயற்சியின் தோல்வியைச் சொல்ல எனக்கு நெஞ்சு உரமில்லை. அப்படியே திரும்பி நடந்து விட்டேன்.

அந்தக் குடும்பத்துக்கு நானும், இந்த நாடும் ஒரு சிறு அளவு உதவிகூடச் செய்ய இயலவில்லையே என்பதுகூட என் மனத்தை அவ்வளவாக உறுத்தவில்லை. நான் செய்ய முயன்ற உதவியைச் செய்ய இடமேயில்லையென்று சொன்ன ஷண்முகசுந்தரம் திருச்சி ரத்தினவேலுவின் மகன்தான் என்ற தகவல்தான் என்னை உலுக்கி எடுத்துவிட்டது. அதை நான் மறுநாள்தான் அறிந்தேன்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

கடும் உஷ்ணகாலத்தில் மிகவும் இதமளிப்பது...
பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர்



புத்துணர்ச்சியளிக்கக்கூடியது. வியர்வையை
உறிஞ்சக் கூடியது. லேசான வாசனையுள்ளது

பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உங்களை நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் வைக்கும்! காலை ஸ்நானத்திற்குப் பிறகு பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடரை உங்கள் உடம்பின்மேல் தாராளமாகத் தூவிக்கொள்ளுங்கள். கோடைகாலத்தில் நாள் முழுவதும் உங்களுக்கு இதமும் நறுமணமும் அளிக்கும்!


நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் விளங்க எப்பொழுதும் பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடரையே உபயோகியுங்கள்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப் பெற்றது)

JWT-P-1638

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

'அவரா லேசில் திருப்தியடைகிறவர்...'



'அதுவும் துணி விஷயத்திலா? அதெங்கே...' என்கிறார்
பம்பாய்வாசியான ஸ்ரீமதி ஆர். ஆர். பிரபு. 'இப்போல்
லாம் ஸன்லைட்டாலே வெளுக்கறேன் அவரோட
துணிக எல்லாத்தையும். அவருக்கோ பெருமை!
எனக்குந்தான். இருக்காதா? அமோகமா நுரைகட்டுது
ஸன்லைட், தொட்டதெல்லாம் பளிச்சுன்னு வெளுப்பு.
சலவைன்னு எனக்கு வேண்டியது ஸன்லைட்தான்!'

துணிகளைக் காப்பதற்கும் தூய,
மேன்மை வாய்ந்த ஸன்லைட்
டைப் போல் வேறொன்றில்லை
என்பதே குடும்ப மாதர்களின்
துணிபு. அதுவே உங்களுக்கும்
இனிது.

ஸன்லைட்



ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

30-X32 TM